VI

தைத்திரீய ஸம்ஹிதை

நான்காவது காண்டம்

ஸ்ரீ அ. சுப்பராமன்,
'மஹரிஷி கார்டன்',
18A/9, 5வது கிராஸ் தெரு, சி.ஐ.டி. காலனி,
மயிலாப்பூர், சென்னை - 600004.
2008

VEDACHALAM COLLECTION

TAITTRIYA SAMHITA
FOURTH KANDA

VI

தைத்திரீய ஸம்ஹிதை

நான்காவது காண்டம்

(இலவச வெளியீடு)

உரையாசிரியர்:

ப்ரம்மஸ்ரீ E. பாலஸுப்ரஹ்மண்ய சாஸ்திரிகள்

Retd. Professor, (Meemamsa) Sanskrit College, Madras.

ஸ்ரீ அ. சுப்பராமன்,

'மஹரிஷி கார்டன்',

18A/9, 5வது கிராஸ் தெரு, சி.ஐ.டி. காலனி,

மயிலாப்பூர், சென்னை - 600004.

2008

முகவுரை

இந்த நான்காவது காண்டம் ஏழு ப்ரச்னங்கள் கொண்டது. முதல் நான்கு ப்ரச்னங்களில் முறையே உகை என்னும் பாத்ரம் தயாரிப்பது, உக்யாக்னியை ஆஸந்தியில் வைப்பது, கார்ஹ பத்னியாக்னி, ஆஹவனீயாக்னி சயனங்களான இடங்களை தயாரிப்பது, ஐந்து சிதிக்கு வேண்டிய இஷ்டகைகளை மந்த்ர பூர்வமாக வைக்கும் முறை தங்கத்தினுல் ப்ரோக்ஷணம் செய்வது போன்ற சயன ஸம்ஸ்காரங்களும் கூறப்படுகிறது.

ஐந்தாவது ப்ரச்னம், ருத்ர ப்ரச்னம் என்று பெயர். रुत् द्राव्यतीति रुद्रः அதாவது துக்கம் அல்லது துக்கத்திற்கு காரணமான எந்த பாபங்கள் உண்டோ அவற்றை விரட்டியடிக்கின்றபடியால் இதற்கு ருத்ரம் என்று பெயர் வந்தது.

மஹாபாரதத்தில் ஸ்ரீ கிருஷ்ணர் மானஸ் ஸரஸ்ஸில் பாசுபதாஸ்திரத்தின் உக்ர ஸ்வரூபத்தை சாந்தப்படுத்துவதற்காக ருத்ர பாராயணம் செய்ததாக சொல்லப்பட்டிருக்கிறது.

ஒரு சமயம் பூலோகத்தில் கோவில், நதிக் கரை, கிராமம் ஆகிய எல்லா இடத்திலும் ருத்ர பாராயணம் பலரும் செய்ய ஆரம்பித்த பொழுது, யமபட்டர்கள் அவர்களை நெருங்க முடியவில்லை. இதை அறிந்த யமன் ப்ரம்மாவிடம் சென்று இந்த ருத்ர பாராயணத்தால் யம பட்டணத்திற்கு வரும் மனிதர்கள் மிகவும் குறைந்து விட்டார்கள்.

ஆகவே அதை தடுப்பதற்கு ஒரு உபாயம் சொல்ல வேண்டும் என்று கேட்டான். அப்பொழுது, ப்ரஹ்மா அவித்யாவின் இரு பெண்களை, (அதாவது அச்ரத்தா-ச்ரத்தை இல்லாமல், துர்மேதா-கெட்ட புத்தியுடைய) பூலோகத்திற்கு அனுப்பும்படி சொன்னார். இந்த பெண்களால் மனிதர்கள் மோகம் அடைந்து ருத்ர பாராயணத்தில் ச்ரத்தை இல்லாமலும், பற்றற்றவர்களாயும் ஆனார்கள்.

இதனால் சந்தோஷமடைந்த யமன் தன் உலகத்திற்கு திரும்பினார். இதிலிருந்து என்ன தெரிகிறதென்றால் ருத்ர பாராயணம் மிகவும் ச்ரத்தையோடும் அதில் ஆழ்ந்த பற்றுள்ளவனுகவும் இருந்தால் தான் பூர்ண பலன் கிடைக்கும் என்று தெரிகிறது. மேலும் ருத்ரத்தின் மஹிமை 60-வது பக்கம் முதல் காண்க.

ஆறுவது ப்ரச்னத்தில் சயனுக்னிக்கு வேண்டிய ஸம்ஸ்காரங்கள், ராக்ஷஸர்கள் விலகுவதற்குரிய ஸம்ஸ்காரங்கள் கூறப்பட்டுள்ளது.

ஏழாவது ப்ரச்னத்தில் வஸோத்தாரா ஹோமம், வாஜப்ரஸவீய ஹோமம் முதலியவை சொல்லப்பட்டிருக்கிறது. செல்வப் பெருக்கை கொடுக்க வல்ல ஹோமத்திற்கு வஸோத்தாரா ஹோமம் என்று பெயர். சமகத்தில் இவ்வுலகத்திற்கு வேண்டிய பொருளும், பரலோகத்தை அடைய ஸாதனமான யாகாதிகளுக்கு வேண்டிய பொருள்களும் ப்ரார்த்திக்கப்படுகின்றன.

வஸோத்தாரையினால் எல்லாவிதமான அபிஷ்டங்கள் பூர்த்தியாகும் என்று ப்ராஹ்மணம் சொல்லுவதால், சமகத்தில் கூறப்பட்டுள்ள பலன்கள் கிடைக்கும். இவ்வுலகத்திலேயே கிடைப்பது என்பது அவரவர்கள் செய்த புண்ணிய பாபத்தை அனுசரித்து தான் ஏற்படும். எவருக்கு பூர்வ ஜன்ம பாபங்கள் அதிகமாக இருக்கிறதோ அவருக்கு அந்த பாபங்களே, இந்த வஸோத்தாரையின் பலனை அடைவதற்கு தடையாக இருக்கிறது. அவ்வாரு பாபங்கள் இல்லாதவர்களுக்கு இவ்வுலகிலேயே பலன் கிடைக்கலாம். ஆகையால் வஸோத்தாரா ஹோமம் செய்வதால் இவ்வுலகிலேயோ அல்லது மறுப் பிறப்பிலேயோ பலன் கிடைப்பது நிச்சயம். ஸந்யாஸிகள் புண்ணியம், பாபம் இரண்டுமே ஞான மார்க்கத்தின் வழியாக மோக்ஷத்தை அடைய இடையூர்களாகும். ஆகையால் சமகத்தின் பலனை இடையூராக ஸந்யாஸிகள் கருதுவதால் அவர்கள் சமகம் சொல்லுவதில்லை என்று தெரிந்துக் கொள்ள வேண்டும்.

மேலும், வாசகர்கள் ருத்ரம், சமகம் இதை ச்ரத்தையோடு வாசித்து பயன் பெறுமாறு வேண்டிக் கொள்கிறோம். இப்புத்தகத்தை அச்சிடுவதற்கு உதவிய டாக்டர். ராஜம் அய்யர் டிரஸ்டுக்கு மிகுந்த க்ருதக்ஞதையை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

தைத்திரீய ஸம்ஹிதை - நான்காவது காண்டம்

अनुवाकः १—युञ्जानः प्रथमं—

இந்த காண்டத்தில் அக்னிசயனத்திற்கு வேண்டிய மந்திரங்கள் கூறப்பட்டுள்ளன. சயனம் என்பது ஸூத்ரக்காரர் சொல்லியபடி செங்கற்களை தயாரித்து கருடன் உருவம் போல் மந்திரங்களுடன் ஒவ்வொரு செங்கல்லாக விதிப்படி அடுக்கினால் ஏற்படும் மேடைக்கு சிதிவேதி:-उत्तरवेदिः...எனப் பெயர்: மண் கொண்டு வந்து சூளையிட்டு செங்கல் தயாரித்து மந்திரங்களுடன் அடுக்கி வேதி தயாரிக்க உபயோகமான மந்திரங்கள் கூறப்பட்டுள்ளன. மண் எடுத்து வரப் போவதற்குமுன் முதலில் ஹோமம் செய்யவேண்டும். பிறகு மண்வெட்டியை எடுப்பதற்கு வேண்டிய மந்திரங்களும் கூறப்பட்டுள்ளன. முதல் அனுவாகத்தில் முதல் 8 மந்திரங்களை சொல்லி கடைசியில் ஒரே ஹோமம் செய்ய வேண்டும். युञ्जानः प्रथमं...सुवर्जित் என்பது வரையில் 8 மந்திரங்கள் உள்ளன. ஜுஹுவில் 8 தடவை ஆஜ்யத்தை எடுத்துக் கொண்டு 8 மந்திரங்களையும் சொல்லி 8வது மந்திரம் முடியும் பொழுது

ஹோமம் செய்யவும். பிறகு ऋचास्तोमं என்ற மந்திரத்தால் நான்கு தடவை ஆஜ்யத்தை எடுத்து ஹோமம் செய்யவும், பிறகு देवस्यत्वा...எனத் தொடங்கும் நான்கு மந்திரங்களால் (கடைசியில்) (மூங்கிலால் கூர்மையாக மண் வெட்டுவதற்கு சாதனமாக கட்டைக்கு अग्निः என்று பெயர்) अग्निः என்ற மண்வெட்டும் கருவியை எடுக்கவேண்டும்.

अनुवाकः २—इमामगृभ्णन्—

இந்த அனுவாகத்தில் மண் எடுக்கச் செல்லும் விதமும் எடுக்கவேண்டிய மண் இருக்கும் இடத்தை ஆக்ரமித்துக் கொள்வதற்கு வேண்டிய மந்திரங்களும் கூறப்பட்டுள்ளன. इमामगृभ्णन् என்ற மந்திரத்தில் குதிரையின் கடிவாளத்தை எடுக்க வேண்டும். (இது மண் கொண்டு வரவேண்டிய வண்டியில் கட்டவேண்டிய குதிரை) மறுபடியும் கழுதையை கட்டவேண்டும். அதன் கடிவாளத்தை எடுக்க மந்திரம் கிடையாது. अग्नेः என்ற மந்திரத்தால் குதிரையை கடிவாளத்தால் கட்டவேண்டும். அடுத்த மந்திரத்தால் கழுதையின் கடிவாளத்தை கட்டவேண்டும். அடுத்த மூன்று மந்திரங்களை சொல்லிக் கொண்டு குதிரை முன் செல்ல, கழுதை பின் செல்ல அத்வர்யு முதலானோர் மண் எடுக்க வேண்டிய இடத்திற்கு செல்லவேண்டும். 'अग्नेरूरौ' என்ற மந்திரத்தை சொல்லி எதிரியை நிஜனக்கவேண்டும். அடுத்த

மந்திரத்தால் புற்று மண்ணை எடுத்துக் கொண்டு செல்லவேண்டும். அடுத்த மந்திரத்தை புற்று மண்ணை எடுத்து திரும்பிவரும் பொழுது சொல்ல வேண்டும். अन्वग्निः என்று சொல்லி புற்று மண் இருக்கும் இடத்திலிருந்து புறப்படவேண்டும். அடுத்த மந்திரங்களால் மண் வெட்டி எடுக்க வேண்டிய இடத்தை குதிரையினால் ஆக்ரமிக்கச் செய்யவேண்டும். द्यौस्तेपृष्ठं—என்ற மந்திரத்தை சொல்லி குதிரையின் பின்பாகத்தை தடவிக் கொடுக்கவேண்டும். அடுத்த இரண்டு மந்திரத் தால் மண் எடுக்க வேண்டிய இடத்தில் குதிரையை வடக்கு நோக்கி செலுத்தவேண்டும். பிறகு அடுத்த மந்திரத்தால் குதிரையின் பாதத்தில் ஜலத்தை விடவேண்டும். குதிரையின் காலடி வைத்த இடத்தில் ஸ்வர்ணத்தை(தங்கம்) வைத்து அதன் மீது அடுத்த இரண்டு மந்திரங்களால் ஹோமம் செய்யவேண்டும். தங்கத்தை அகற்றி விட்டு அடுத்த மூன்று மந்திரங்களால் மண் தோண்ட வேண்டிய இடத்தை சுற்றி கோடு கிழிக்கவும். இதனால் அந்த இடத்திலுள்ள ராக்ஷஸர்கள் விலகுகிறார்கள்.

अनुवाकः ३—दे॒वस्य॑त्वा सवि॒तुः प्र॑स॒वे—

இந்த அனுவாகத்தில் மண் தோண்டும்முறை கூறப்படுகிறது. देवस्यत्वा என்று ஆரம்பித்து இரண்டு மந்திரங்களைச் சொல்லி மண்ணை

தோண்ட வேண்டும். அடுத்த மந்திரத்தைச் சொல்லி தாமரை இலையில் கூடை மாதிரி செய்யவும். பிறகு அடுத்த இரண்டு மந்திரங் களால் மண்தோண்டிய இடத்தில் மான்தோலை கிழக்கு முகமாய் விரித்து அதன் மீது தாமரை இலைகூடையை வைக்கவும். ஊர்ஜோஸி என்ற மந்திரத்தால் மண்ணை சமிமன்ரன் செய்து, அடுத்த 3 மந்திரங்களால் மான்தோலிலும், தாமரைக் கூடையிலும் மண்ணை நிரப்பவும். க்ஷத்ரியன் யஜமானனுக இருந்தால் அடுத்த நான்கு மந்திரங் களால் (ஸீதஹோ: என்று தொடங்கும்) மண்ணை எடுத்து மான்தோலின் மீது போடவேண்டும்.

अनुवाकः ४—सं ते वायुः—

இந்த அனுவாகத்தில் மண் கொண்டுவரும் முறை கூறப்படுகிறது. संते वायुः என்ற மந்திரத் தால் மண் தோண்டிய இடத்தில் ஜலத்தை விட வேண்டும். அடுத்த மந்திரத்தால் மான்தோலின் நான்கு மூலைகளையும் சேர்த்துப் பிடித்து பட்டுக் கயிருலோ அல்லது எருக்க நார் கயிருலோ கட்ட வும். ஊர்ஜே எனத் தொடங்கும் இரண்டு மந்திரங் களால் மண் மூட்டையை எடுத்துக் கொண்டு எழுந்திருக்கவும். பிறகு அடுத்த மந்திரத்தால் மண்ணை எடுத்துச் செல்லவேண்டும். அடுத்த மந்திரத்தால் கழுதையின் முதுகில் மண் மூட்டையை வைக்க வேண்டும். அந்த மண்ணை

பார்த்து அடுத்த மந்திரத்தை சொல்லவேண்டும். ஹே அக்னியே, மனிதர்கள். செடிகொடிகள் மூவ்வுலகம் எல்லாவற்றிற்கும் துன்பம் கொடுக்காமல் சாந்தமாக இருப்பாயாக என்பது பொருள். ''प्रेतुवाजी'' முதலிய மூன்று மந்திரங்களால் குதிரை முன்னே செல்ல கழுதை பின்னே செல்ல, அத்வர்யு முதலியவர் யாகசாலையை நோக்கி திரும்பவேண்டும். யாகசாலைக்கு வந்து ''ओषधयः प्रतिगृह्णीत'' என்ற மந்திரத்தாலும் அடுத்த மந்திரத்தாலும் புஷ்பம் பழம் நிறைந்த செடிகளின் மீது அந்த மண்ணை வைக்க வேண்டும். இந்த அக்னி எங்களுக்கு சோம்பலை நீக்கி நல்ல புத்தியை கொடுக்கட்டும் என்பது கருத்து

अनुवाकः ५—विपाजसा पृथुना—

இந்த அனுவாகத்தில் கொண்டு வந்த மண்ணால் उखा அக்னி வைக்கும் பாத்திரம் செய்யும் முறை சொல்லப்படுகிறது. 'विपाजसा' என்ற மந்திரத்தால் மண் முட்டையின் கட்டை அவிழ்த்து விடவேண்டும். பிறகு आपोहिष्ठा என்ற 3 மந்திரங்களால் மண்ணில் ஜலத்தை விடவேண்டும். அடுத்த இரண்டு மந்திரங்களால் பழைய ஒட்டாஞ்சில், மாவு, மூங்கில்தணல், நெல்லின் தவிடு, புரச மரத்தின் கஷாயத்தினால் பிசையப்பட்ட மணல்கள், மான்தோலின் உரோமங்கள், ஆட்டு உரோமங்கள் இவைகளுடன் சேர்த்து

பிசையவேண்டும். அடுத்த மந்திரத்தால் பிசைந்த மண்ணை ஒன்று சேர்த்து ஸ்ருஷ்டா என்ற மூன்று மந்திரங்களால் उखा பாத்திரம் செய்பவனிடம் கொடுக்கவேண்டும். मखस्य शिरोऽसि என்ற மந்திரத்தால் அந்த மண்ணை பிண்டமாகப் பிடித்து यज्ञस्य पदेस्थः என்ற மந்திரத்தால் மான்தோலையும், தாமரை இலையையும் தொடவேண்டும். वसवस्त्वा என்று தொடங்கி நான்கு மந்திரங்களால் 'उखा' பாத்திரத்தை தயாரிக்கவேண்டும். அடுத்த மந்திரத்தால் பாத்திரத்தில் கழுத்தில் கோடு கிழிக்கவேண்டும். அடுத்த மந்திரத்தால் பாத்திரத்திற்கு முகத்வாரம் செய்யவேண்டும். அடுத்த மந்திரத்தை சொல்லி அந்த பெரிய உகா பாத்திரத்தை மணலில் வைக்கவேண்டும்.

अनुवाकः ६—वसवस्त्वा धूपयन्तु—

மண் பாத்திரமான உகையை சூளை போட்டு சுட்ட பாத்திரமாக்கும் முறை இந்த அனுவாகத்தில் சொல்லப்படுகிறது. "वसवस्त्वा धूपयन्तु" தொடங்கி முறையே 7 மந்திரங்களால் குதிரை சாணத்தின் வரட்டி புகையை பாத்திரத்தில் பிடிக்கவேண்டும். உகாபாத்திரத்திற்கு இது ஒரு ஸம்ஸ்காரம். அடுத்த மந்திரத்தால் கார்ஹபத்யாக்னிக்கு முன்புறம் குழி பறிக்கவேண்டும். அதில் சூளை போடவேண்டிய கட்டை முதலிய சாதனங்களை பரப்பி அடுத்த மந்திரத்தால் உகா

பாத்திரத்தை அதில் வைக்க வேண்டும். தேவ பத்னிகள் முன்பு உகா பாத்திரத்தை செய்தார்கள் என்ற காரணத்தால் அவர்களே இப்பொழுதும் உகாபாத்திரம் செய்வதாக ஆகிறது. அதன் மேல் விறகு முதலிய எரிபொருளை வைத்து அடுத்த நான்கு மந்திரங்களால் உகாபாத்திரத்தின் மேல் அக்னியை போடவேண்டும். மந்திரத்தின் கருத்து கூறும் பொழுது பயிர்கள் வருஷத்தில் இருமுறை பலனைக் கொடுக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. அடுத்த मित्रैतां முதல் மூன்று மந்திரங்களால் சூளையில் உகாபாத்திரம் சுடும் பொழுது அதற்கு விசிறுவதன் மூலம் உபசாரம் செய்யவேண்டும். அடுத்த மந்திரத்தால் சூளையிலிருந்து உகாபாத்திரத்தை எடுக்க வேண்டும். अपद्यमाना என்ற மந்திரத்தால் வடக்கு பக்கத்தில் மணலின் உகாபாத்திரத்தை வைக்க வேண்டும். वसवस्त्वाऽऽछृन्दन्तु என்பது முதல் நான்கு நான்கு மந்திரங்களால் ஆட்டின் பாலால் உகா பாத்திரத்தை நனைக்கவேண்டும்.

अनुवाक: ७—समास्त्वाग्ने—

இந்த அனுவாகத்தில் ப்ரகிருதியிலிருந்து வரும் 11 ஸாமிதேனீ மந்திரங்களுடன் சயனத்திற்கு அங்கமான பசு யாகத்தில் சொல்லவேண்டிய விசேஷ ஸாமிதேனீ (सामिधेनीः) மந்திரங்கள் சொல்லப்படுகின்றன. ருது, மாஸம், பக்ஷங்கள்

ரிஷிகள் ஸத்யவாக்யங்கள் முதலியவைகளால் ஹே அக்னியே, நீ பிரகாசிப்பாயாக இதன் மூலம் யஜமானனையும், கர்மானுஷ்டானம் செய்யத் தூண்டி விடு. யஜமானன் ருத்விக்குகள் எல்லோரும் யசஸ் உடையவர்களாக இருக்கட்டும். உன்னை ஆராதிக்காமல் இருப்பவர்களுக்கு யசஸ் ஏற்படக்கூடாது. ருத்விக்குகளும் யஜமானர்களும் உன்னை ஆராதிப்பதால் அவர்களின் குற்றம் குறைகளை வெளிப்படுத்தாமல் அவர்களின் சத்ருக்களை அழிப்பாயாக. எப்பொழுதும் எங்களுக்கு நன்மையே செய்வாயாக. ஹே அக்னியே, இந்த வீட்டில் செல்வத்தை செழிக்கச் செய்வாயாக. ஹே அக்னியே, எங்களுக்கு தீர்க்காயுஸ்ஸை கொடு. ப்ரஹ்மாவின் முகத்திலிருந்து உண்டான நீயும் (நாங்களும்) ப்ராஹ்மணர்களும் உடன் பிறந்தவர்கள். ஆகையால் நீ ப்ராஹ்மணர்களை ரக்ஷிப்பாயாக, கௌரவிப்பாயாக. நாய் முதலிய பிராணிகளாக பிறக்கச் செய்யும் பாபத்தை அகற்ற உடலிலுள்ள விசேஷ ரோகங்களையும் நீக்கி கர்மானுஷ்டானம் சம்பந்தப்பட்ட அக்ஞானத்தையும் போக்குவாயாக. மேலும் புத்ரர்களையும், செல்வத்தையும் அளிப்பாயாக. ஹே அக்னியே, உனது கடாக்ஷ வீக்ஷணத்தால் கெட்ட விஷயத்தில் ஆசைகளை ஒழித்து ரோகாதிகளை அழித்து எங்களை காப்பாயாக. ஹே அக்னியே, இந்த யஜமானனை கர்மானுஷ்டான விஷயத்தில் மிகுந்த புத்திசாலியாக ஆக்குவாயாக. யஜமானனுக்கு எல்லாவிதமான

ஸௌபாக்யங்களையும் கொடுப்பாயாக. எல்லா தேவர்களும் யஜமானன் சரியானவன் என்று சந்தோஷப்படட்டும்.

ஹே அக்னியே, யஜமானனுக்கு யமபயம் இல்லாமல் செய்து ஸ்வர்க வாஸத்தை ஸ்திர மாகச் செய். மேலும் அச்வினீதேவர்கள் யஜமானனை அபம்ருத்யுவிலிருந்து காப்பாற்றட் டும். நாங்கள் எல்லாவற்றிற்கும் மேலான சூர்ய ஜ்யோதிஸ்ஸை அடைந்தோம் என்பது ஸாமிதேனீ மந்திரங்களின் கருத்து.

अनुवाकः ८—कृष्वा अस्य—

இந்த அனுவாகத்தில் ப்ரயாஜ யாகங்களுக் குரிய யாஜ்யா மந்திரங்கள் ஸாரி எனப்படுபவை கூறப்படுகின்றன. இந்த யாகத்திற்கு விசேஷ அக்னிதேவதை 12 மந்திரங்கள்—प्रयाज याज्या மந்திரங்கள் அக்னியின் பெருமையை கூறு கின்றன. மேலும் யஜமானனுக்கு ஸத்புத்ரன், செல்வம் முதலியவையும் பிரார்த்திக்கப்படு கின்றன. 13வது மந்திரம் हिरण्यगर्भः என்பது अधारः என்ற கர்மாவுக்கு அங்கமானது. यः प्राणतः, य आत्मदाः என்ற இரண்டு மந்திரங்கள் प्राजापत्य பசு யாகத்தில் वपा யாகத்திற்குரிய புரோனுவாக்யா, யஜ்யா மந்திரங்கள் यस्येमे, यं क्रन्दसी என்ற இரண்டு மந்திரங்களும் प्राजापत्य पशुपुरोडाश யாகத்தின் புரோனு

வாக்யா யாஜ்யா மந்திரங்கள். அடுத்த இரண்டு மந்திரங்கள் प्राजापत्यपशु அங்க யாகத்திற்குரிய புரோனுவாக்யா யாஜ்யா மந்திரங்கள். இவை களில் ப்ரஹ்மாவின் மஹிமை கூறப்பட்டுள்ளது.

अनुवाकः ९—आकूतिमग्नि—

இந்த அனுவாகத்தில் உகையில் அக்னியை உண்டுபண்ணும் முறை சொல்லப்படுகிறது. ஸோம யாகத்தில் தீக்ஷைக்கு அங்கமாக தீக்ஷாஹுதி என்று ஐந்து ஹோமங்கள் செய்யப் பகின்றன. அந்த ஐந்து ஹோமங்களுடன் இந்த அனுவாகத்தின் முதல் ஏழு மந்திரங்களால் தீக்ஷாஹுதி என்ற ஹோமம் செய்யவேண்டும்

கடைசி ஆஹுதி பூர்ணாஹுதி எனப்படு கிறது. உகாபாத்திரம் உடையாமல் இருக்கும்படி பிரார்த்தித்திக் கொண்டு, தீக்ஷாதர்மமான யஜ மானன் கையை முஷ்டியாகவைத்துக் கொண்டு உட்கார்ந்தவுடன் சணல், அல்லது முஞ்சைபுல் லால் கூடு மாதிரிசெய்து அதனால் உகாபாத்தி ரத்தை மூடி मासुभित्था: என்று தெடாங்கி இரண்டு மந்திரங்களால் ஆஹவனீயாக்னியில் உகாபாத்தி ரத்தை தணலில் காய்ச்சவேண்டும். இதன் மூலம் வருங்கால செல்வத்தை அடைபவனாக ஆகிறான். 'मित्रंतामुखां' என்ற மந்திரத்தால் உகாபாத்திரத்தை சுற்றி தணல்களை போடவும். அடுத்த மந்திரத்தால் உகாபாத்திரத்தில், நெய்யில் நனைத்து தங்கத்

துண்டையும், முஞ்சப்புல்லையும் போடவேண்டும். தணல் சூட்டினுல் பாத்திரத்திலுள்ள முஞ்சப்புல் எரியத்தொடங்கும். அப்பொழுது அதில் மரத் தூளை போடவேண்டும். அடுத்த மந்திரத்தால் வைகங்கூத ஸமித்தை அதில் வைக்கவும். परमस्या: என்ற மந்திரத்தால் வஹ்னி ஸமித்தை அதில் வைக்கவும். இவ்வாறு உகாபாத்திரத்தில் அக்னி உண்டாகி ஜ்வலிக்கத் தொடங்கும். இப்படி உண்டான அக்னிக்கு सीदत्वं என்பது. முதல் மூன்று மந்திரங்களால் உபஸ்தானம் (பிரார்த்தனை) செய்யவும். இந்த அக்னிக்கு உக்யாக்னி என்று பெயர். உகாபாத்திரத்தில் தாயார் மடியில் குழைந்தை இருப்பது போல் ஜ்வலித்துக்கொண்டு சாந்தமாக இரு, எல்லோருக்கும் சுகத்தைக் கொடு என்பது பொருள். இதன் மூலம் உலகில் பிரஸித்தியடைகிறுன்.

अनुवाकः १०—यद्दग्ने यानि कानि—

முன்பு கூறியபடி உகாபாத்திரத்தில் உண்டான உக்யாக்னியை யஜமானன் இடையில் தங்கத்தை வைத்துக் கொண்டு தனது மார்பில் தரித்துக் கொள்ளவேண்டும். அவ்வாறு தரிக்க வேண்டிய முறை இந்த அனுவாகத்தில் கூறப்படுகிறது.

यद्दग्ने - என்பது முதல் ஐந்து மந்திரங்களால் கோடாலியால் வெட்டப்படாத அத்தி ஸமித்துக்

களை உக்யாக்னியில் வைக்கவும். ஹே அக்னியே, நீ விருத்தியடைவாயாக. உனது ஸமீபத்தில் வந்த நாங்கள் செல்வப் பெருக்காலும், அன்னத்தாலும் மகிழ்ச்சியடைகிறோம். இது ரக்ஷோக்ன ஸூக்தம் எனப்படுகிறது. இதனால் ராக்ஷஸர்கள் அழிகிறார்கள். அடுத்த மந்திரத்தால் அரச ஸமித்தை அக்னியில் வைக்கவும். இதன் பொருள் மறைந்து இருப்பவன், காட்டில் கொள்ளையடிப்பவன், பகலிலேயே கிராமங்களில் புகுந்து ஜனங்களை கட்டிப்போட்டு கொள்ளையடிப்பவன் என்ற பலவிதமான திருடர்களை கடைவாய்ப்பல் முதலிய பற்களால் கடித்து அழித்து விடவும். ஹே அக்னியே, அவர்கள் திரும்பவும் பிழைக்காமலிருக்கும்படி அழிப்பாயாக. அடுத்த மந்திரத்தால் வைகங்கத ஸமித்தை உக்யாக்னியில் வைக்கவும். முன் சொன்ன திருடர்கள், புலி போன்ற துஷ்ட மிருகங்கள் இவைகளை அழிப்பாயாக என்பது பொருள். இதனால் அக்னி நன்கு ஜ்வலிக்கும். அடுத்த மந்திரத்தால் வஹ்நி ஸமித்தை உக்யாக்னியில் வைக்கவும் இதன் பொருள்—[சத்ருக்கள் பலவிதம். கொடுக்க வேண்டிய பணத்தை கொடுக்காமல் இருப்பவன் சத்ரு. நமது கார்யத்தை கெடுப்பவன் துவேஷி எனப்படுவான். நம்மை எப்பொழுதும் நிந்திப்பவன் ஒருவிதமான சத்ரு. நம்மை அடிக்க விரும்புவன் ஒருவிதமான சத்ரு] நான்கு வித சத்ருக்களையும் ஹே அக்னியே, தவிடுபொடியாக்குவாயாக. அடுத்த இரண்டு மந்திரங்களால்

இரண்டு அத்தி ஸமித்துகளை உக்யாக்னியில் வைக்கவும்.

எனது ब्राह्मण ப்ரஹ்மதேஜஸ், இந்திரிய சக்தி, உடல் வலிமை மூன்றும் அவைகளின் கார்யத்தை செய்யக்கூடியதாக இருக்கட்டும். நல்ல புரோஹிதனால் அரசனும், நல்ல அரசனால் ப்ராஹ்மணனும் ஸ்வதர்மத்தில் நழுவாமலிருப்பவர்களாக இருக்கட்டும். அடுத்த மந்திரத்தைச்சொல்லி ஸுவர்ணாபரண விசேஷத்தை யஜமானன் தனது மார்புக்கும், உக்யாக்னிக்கும் நடுவிலிருக்கும்படி தரிக்கவேண்டும். இவ்வாறு செய்வதால் யஜமானன் அபம்ருத்யுவிலிருந்து ரக்ஷிக்கப்படுகிறான்.

அடுத்த மந்திரத்தால் உக்யாக்னியை வைக்கும் உரியை அவிழ்க்கவும். அதற்கடுத்த மந்திரத்தால் மான்தோலை அவிழ்க்கவும், இதன் பொருள்–ஸவித்ருதேவன் உலகத்தை பிரகாசிக்கச் செய்து மனிதர்களுக்கும், பசுக்களுக்கும் தங்கள் காரியங்களைச் செய்யும் சக்தியை யளித்து அருளுகிறார். இந்த உக்யாக்னி விசேஷமாக பிரகாசிக்கிறார். யாகத்தின் மூலம் தனத்தை கொடுப்பவர். "सुपर्णोऽसिगरुत्मान्" என்ற மந்திரத்தை சொல்லி உக்யாக்னியை பார்க்கவேண்டும். ஹே அக்னியே, நீ கருட பக்ஷி வடிவில் இருக்கிறாய். ஸோம யாகத்தில் प्रातः सवनத்தில் பஹிஷ்பவமான ஸ்தோத்ரம் த்ருவ்ருத் ஸ்தோமமாக கானம் செய்யப்படுகிறது. அது சிரஸ் போன்றது वामन

साम கண் போன்றது. "पञ्चदशस्तोम" கானவிசேஷம் ஜீவாத்மாவாகும், वामदेव्य साम உடல்போலாகும், बृहत्साम, रथंतर साम இரண்டும் இரு இறக்கைகளாகும். यज्ञायज्ञीय साम இறக்கையின் பின்புறமான வால் போலாகும், गायत्री முதலிய சந்தஸ்ஸுகள் ஹ்ருதயம் முதலிய அங்கங்களாகும், ரிஷிணையைகள் குளம்பு போன்றவை. यजुर् மந்திரங்கள் உனது பெயர்கள். द्युर्णोऽसि என்ற அடுத்த மந்திரத்தால் உக்யாக்னியை எடுத்துக்கொண்டு எழுந்திருக்க வேண்டும். ஹே அக்னியே, நீ பக்ஷிரூபமாக இருக்கிறாய். ஆகையால் ஆகாயத்தில் சென்று ஸ்வர்க்கத்தை அடைவாயாக என்பது மந்திரத்தின் பொருள்.

अनुवाक: ११—अग्नेयं यज्ञं—

சாதுர்மாஸ்யம் என்ற யாகத்திற்கு நான்கு பர்வாக்கள் உள்ளன. அதில் முதல் பர்வாவான (वैश्वदेवपर्व) வைச்வதேவ பர்வாவில் 8 யாகங்கள் கூறப்பட்டுள்ளன. இந்த அனுவாகத்தில் இந்த 8 யாகங்களின் புரோனுவாக்யா யாஜ்யா மந்திரங்கள் கூறப்பட்டுள்ளன. முதல் இரண்டு மந்திரங்கள் இரண்டு आज्यभाग யாகங்களுக்கு புதிய புரோனுவாக்யா மந்திரங்கள் 8 ஹவிஸ்ஸுகள் ப்ரதானமானவை. முதல் யாகம் ஆக்னேய யாகமாகும். "अग्निमूर्धा" "भूर्वो यज्ञस्य" என்ற இரண்டு மந்திரங்களும், இந்த ஆக்னேய யாகத்தின் புரோனுவாக்யா, யாஜ்யா மந்திரங்கள். स्वं न: साम,

अग्ने यानानि இரண்டு மந்திரங்களும் ஸோம தேவதாக யாகத்தின் புரோனுவாக்யா யாஜ்யா மந்திரங்கள். அடுத்த இரண்டு மந்திரங்கள் ஸவித்ரு தேவதையின் யாகத்தின் புரோனுவாக்யா யாஜ்யா மந்திரங்கள். அடுத்த இரண்டு மந்திரங்கள் सरस्वती தேவதையாகக் கொண்ட சரு யாகத்தின் புரோனுவாக்யா யாஜ்யா மந்திரங்கள். அடுத்த 2 மந்திரங்கள் பூஷிதேவதையையுடைய சரு யாகத்தின் புரோனுவாக்யா யாஜ்யா மந்திரங்கள். அடுத்த இரண்டு மந்திரங்கள் मरुत्-गण: மருத்கணங்களே தேவதையாகக் கொண்ட சரு யாகத்தின் புரோனுவாக்யா யாஜ்யா மந்திரங்கள். वैश्वदेवामिक्षा யாகத்தின் புரோனுவாக்யா யாஜ்யா மந்திரங்களின் ஆரம்பமாத்திரம் கூறப்பட்டுள்ளன. அடுத்த இரண்டு மந்திரங்கள் द्यावापृथिवी தேவதையைக் கொண்ட யாகத்தின் புரோனுவாக்யா யாஜ்யா மந்திரங்கள். அடுத்த இரண்டு மந்திரங்கள் "स्विष्टकृत्" யாகத்தின் புரோனுவாக்யா யாஜ்யா மந்திரங்கள். பிறகு वाजिन याகத்தின் புரோனுவாக்யா யாஜ்யா மந்திரங்களின் ஆரம்பம் மாத்திரம் கூறப்படுகின்றன.

ப்ரச்னம் 2

अनुवाक: १—विष्णो: ऋमोऽसि—

ஆ ஸ ந் தி யி ல் (நாற்காலி) உக்யாக்னியை வைக்கும் முறை கூறப்படுகிறது. இந்த அனு

வாகத்தில். நாபிக்கு மேல் உக்யாக்னியை தரித்துக் கொண்டு विष्णोः क्रमोऽसि என்று தொடங்கி நான்கு மந்திரங்களைச் சொல்லிக் கொண்டு கிழக்கு நோக்கி செல்லவேண்டும். अग्नेऽभ्यावर्तिन् என்பது முதல் நான்கு மந்திரங்களைச் சொல்லி பிரதக்ஷிணம் செய்யவேண்டும். ஹே அக்னியே, ஆயுஸ், அழகு, பலம், மேதாவிலாஸம், புத்ர ஸம்பத், ஸுவர்ணம் இவைகளை அளித்துக் கொண்டு எங்களைச் சுற்றி வருவாயாக. ஹே அக்னியே, நீயும் உன்னைச் சேர்ந்தவர்களும், பொருள்களும் திரும்ப திரும்ப என்னைச் சுற்றிவந்து எனக்கு லக்ஷக்கணக்கான ஸம்ருத்யைக் கொண்டுப்பாயாக. என்னிடம் முன்பு இல்லாத செல்வத்தை சம்பாதித்துக் கொடு. க்ஷீராதிகள், அன்னபானங்கள் இவைகளின் ஸம்ருத்தியைக் கொடுப்பாயாக என்பது आवर्तन மந்திரத்தின் பொருள். उदुत्तमं वरुण என்ற மந்திரத்தால் உரியில் கயிற்றை அவிழிக்கவும். அடுத்த மந்திரத்தால் அக்னியை கொண்டுவந்து अग्रे बृहत என்ற மந்திரத்தால் உபஸ்தானம் செய்யவும். இதனால் யஜமானன் தனக்கு சமமானவர்களுள் தலைவனாக ஆகிறான். 'सीदत्वं' என்பது முதல் நான்கு மந்திரங்களை சொல்லி அத்திக்கட்டையால் செய்த நாற்காலியில் உக்யாக்னியை வைக்க வேண்டும். ஹே அக்னியே, இந்த உகாபாத்திரத்தில் நன்கு பிரகாசித்துக் கொண்டு, பாத்திரத்திற்கு துன்பம் கொடுக்காதே. என் விஷயத்

திலும் மற்றவர் விஷயத்திலும். சாந்தமாக இருந்து கொண்டு இதில் உட்காருவாயாக. हृषत्...वृहत् இந்த அக்னி, சத்ருவை அழிக்க வல்லது. யாகத்திலிருப்பவர், யஜமானனை வஸிக்கச் செய்பவர், புகை உருவத்தில் அந்தரிக்ஷத்தில் இருப்பவர். தேவர்களைக் கூப்பிடுபவர், யக்ஞவேதியில் இருப்பவர். (guest) அதிதி போன்றவர். யஜமானன் வீட்டிலிருப்பவர், மனிதர்களிடத்தில் ஜாடராக்னியாக இருப்பவர், ச்ரோத்ரிய க்ருஹத்திலிருப்பவர். யக்ஞத்தை நடத்திக் கொடுப்பவர். ஆகாயத்தில் சூரியன் வடிவில் இருப்பவர்.

மின்னல் வடிவில் இருக்கிறாய். கோ விகாரமான நெய்யினால் ஜ்வலிப்பவனாக இருக்கிறாய். யக்ஞத்திற்காகவே உண்டானவனாக இருக்கிறாய்.

மலைகளில் காட்டுத் தீயாகவும் இருக்கிறாய். இப்படிப்பட்ட சிறந்த அக்னி பகவான் மிகப் பெரிய சயனத்துடன் கூடிய யாகத்தை ஸம்பாதித்து கொடுக்கட்டும்.

अनुवाक: २—दिवस्परि—

இந்த அனுவாகத்தில் உக்யாக்னிக்கு (பிரார்த்தனை) உபஸ்தானம் செய்யும் மந்திரங்கள் கூறப்பட்டுள்ளன. இந்த மந்திரங்கள் அனுவாகம் முழுவதும் ஸ்மார்த்தத்தில் जातकर्म என்ற

ஸம்ஸ்காரத்தில் உபயோகப்படுகிறது. (பொருள் (நெ. 6 ப்ரசுரம். அந்தப் புஸ்தகத்தை பார்க்கவும்) தீக்ஷாகாலத்தில் முதல் நாள், முதல் அனுவாகத்தில் கூறப்பட்ட ''विष्णुक्रमः'' என்பதற்குரிய மந்திரங்களை சொல்லவும். மறுநாள் இந்த அனுவாகத்திய மந்திரங்களான உபஸ்தான மந்திரங்களைச் சொல்லவும். இவ்வாறு ஸோமலதையை வாங்கும் வரை சொல்லவேண்டும். ஸோமலதையை வாங்கிய தினத்தில் விஷ்ணுக்ரம மந்திரங்களையும் உபஸ்தான மந்திரங்களையும் சொல்லவேண்டும். மொத்தம் 11 ருக்குகள் உள்ளன.

अनुवाकः ३—अन्नपतोऽन्नस्य नो देहि—

இந்த அனுவாகத்தில் சயனம் செய்து யாகம் செய்யவேண்டிய இடத்தை ஸ்வீகரிக்க வேண்டிய மந்திரங்கள் கூறப்பட்டுள்ளன. अन्नपतेऽन्नस्य என்ற மந்திரத்தால் ஒரு அத்தி சமித்தை பாலில் நனைத்து உக்யாக்னியில் வைக்கவும். அன்னபதியான அக்னி பகவான் ஹவ்யமான ஆஹாரத்தையளித்து எங்களுக்கும் (யஜமானர்) எங்களது பசுக்களுக்கும் பலத்தையளிப்பாயாக. அடுத்த மந்திரத்திலுல் உக்யாக்னியை மேலே தூக்கி முதல் ப்ரச்னத்தில் கூறப்பட்ட सीदत्वं என்ற நான்கு மந்திரங்களால் அத்திக்கட்டையிலுல் ஆன நாற்காலியில் வைக்கவும்.

அடுத்த மந்திரத்தை சொல்லி அக்னியுடன் யாகசாலைக்கு கிளம்பவும். வழியில் வண்டியிலிருந்து சப்தம் வந்தால் अक्रन्दत् என்ற மந்திரத்தை சொல்லவும். அந்த அக்னியை அதிதி (अतिथि) யாக கருதி समिधा என்ற மந்திரத்தால் ஸமித்தை நெய்யில் நனைத்து அக்னியில் வைக்கவும். அடுத்த மந்திரம் க்ஷத்ரியன் யஜமானனாக இருந்தால் சொல்லவும். आपो देवी: என்பது முதல் மூன்று மந்திரங்களைச் சொல்லி பஸ்மாவை (சாம்பலை) ஜலத்தில் போடவும். ஜலம் அக்னி உண்டாகும் இடம். ஆகையால் தாயாரைப் போல் ஜனங்கள் இந்த அக்னியை காப்பாற்றட்டும் என்பது பொருள். 'प्रसह्य' என்ற 2 மந்திரத்தால் ஜலத்திலிருந்து பஸ்மாவை எடுத்து உகாபாத்திரத்தில் வைக்கவும். இது தாயார் மடியில் குழைந்தை நிம்மதியாக தூங்குவது போலாகும். அடுத்த இரண்டு மந்திரங்களால் பஸ்மாவுடன் கூடிய உகாபாத்திரத்தில் உக்யாக்னியை வைக்கவும். ஹே அக்னியே, க்ஷீரம், அன்னம், தீர்க்காயுஸ் ஸுடன் திரும்பவும் வந்து எங்கள் தவறுகளை நீக்குவாயாக. உலகெங்கும் மழை பொழிந்து ஸுபிக்ஷமாக்குவாயாக என்பது பொருள். पुनस्त्वाऽदित्यारुद्रा: என்ற மந்திரத்தைச் சொல்லி உக்யாக்னியை ஸமித்தினால் ஜ்வலிக்கச் செய்யவும் [இந்த மந்திரம் ஸ்மார்த்தத்தில் विच्छिन्नाग्निसन्धानं செய்யும் பொழுது ஹோமம் செய்ய உபயோகிக்கும்படி बोधायन: சொல்லியிருக்கிறார். இன்றும் சிஷ்டர்கள்

விச்சின்னுக்னி ஸந்தானத்தில் அக்னி ஸித்திக்காக ஷே மந்திரத்தால் ஹோமம் செய்கிறார்கள். ஹே அக்னியே, அணைந்த உன்னை 12 ஆதித்யர்கள், 11 ருத்ரர்கள், 8 வஸுக்கள் மறுபடியும் ஜ்வலிக்கச் செய்யட்டும். ஹே செல்வத்தையளிக்கும் அக்னியே, ருத்விக்குகள் உன்னை யக்ஞத்தின் பொருட்டு ஜ்வலிக்கச் செய்யட்டும்.

நீ நெய் ஆஹுதியால் சந்தோஷமுற்று எங்கள் சரீரங்களை வளர்ப்பாயாக, உண்மையில் நீ சந்தோஷமடைந்தால் யஜமானனுடைய (காமனைகள்) விருப்பங்கள் உண்மையானவையாக இருக்கட்டும்] அடுத்த இரண்டு மந்திரங்களால் உக்யாக்னியின் உபஸ்தானம் செய்யவும். ஹே அக்னியே, வித்வானுகவும், அன்னவானுகவும், செல்வத்தை அளிப்பவனுகவும், செல்வத்தின் அதிபதியாகவும் இருக்கிற நீ, சத்ருக்களின் துவேஷங்களை எங்களிடமிருந்து அகற்றுவாயாக என்பது பிரார்த்தனையின் பொருள்.

अनुवाकः ४—अपेत वीत—

இந்த அனுவாகத்தில் கார்ஹபத்யாக்னி வைக்க வேண்டிய இடம், கல்களை அடுக்கி தயாரிக்கும் முறை சொல்லப்படுகிறது. अपेतवीत என்ற மந்திரத்தால் கார்ஹபத்ய சிதிக்கு வேண்டிய இடத்தை கொத்தி சுத்தப்படுத்தவும்

அடுத்த மந்திரத்தால் மணல்களை போடவும், அடுத்த மந்திரத்தால் உவர்மண்ணை போடவும். அடுத்த மந்திரத்தால் மணலையும், உவர்மண்ணை யும் சேர்க்கவேண்டும். அடுத்த நான்கு மந்திரங் களைச் சொல்லி கார்ஹபத்ய சிதியின் நடுவில் நான்கு செங்கற்களை (இஷ்டகைகள்) வைக்கவும். அடுத்த இரண்டு மந்திரங்களால் கிழக்கே இரண்டு இஷ்டகைகளை வைக்கவும். அடுத்த இரண்டு மந்திரங்களால் குறுக்காக இரண்டு இஷ்டகைகளை வைக்கவும். அடுத்த இரண்டு மந்திரங்களால் ध्रुवा என்ற 13 இஷ்டகைகளை வைக்கவும். மொத்தம் 21 கற்கள் வைக்கப்படு கின்றன.

अनुवाकः ५—समित् संकल्पेथां—

ஆஹவனியாக்னியை வைக்க சிதி தயாரிக்க பூமியை கொத்தும் முறை சொல்லப்படுகிறது. 'ध्रुवम्' என்ற நான்கு மந்திரத்தை சொல்லி உகா பாத்திரத்துடன் அக்னியை ஆஹவனீய தேசத் தில் வைக்கவும். பழைய அக்னியும் (உக்யாக்னி) புதியதும் ஒன்றுக இணைந்து யக்ஞத்தை நடத் திக் கொடுக்கட்டும் என்பது கருத்து.

அடுத்த மந்திரத்தால் உரியிலிருந்து ध्रुवा பாத்திரத்தை எடுக்கவும். பிறகு அடுத்த மந்திரத் தால் உரியை எடுத்து விடவும். உமியால் பக்கு வம் செய்யப்பட்ட மூன்று செங்கற்கள் உரி,

தங்கச்சங்கிலி (முன்பு மார்பில் அணிந்தது
உக்யாக்னி வைத்திருந்த ஆஸனம் தென்மேற்
திசைக்குச் சென்று அடுத்த மந்திரத்தால் உவ
மண்ணில் உரியை வைக்கவும். यस्यास्ते என்
தொடங்கி அடுத்த மூன்று மந்திரங்களால் வெ
மூன்று இஷ்டகைகளை உரி கயிற்றுக்கு எதிரி
தெற்கே முடியும்படி ஒன்றுக்கொன்று தொடா
லிருக்கும்படி வைக்கவும். பிறகு यत्ते देवी என்
மந்திரத்தால் உரியில் வலையால் இஷ்டகைகளை
மூடவும், பிறகு அடுத்த மந்திரத்தால் கார்ஹபத்
யாக்னியையே அல்லது ஆஹவனீயக்னியையே
உபஸ்தானம் செய்யவும். அடுத்த இரண்டு மந்
ரங்களால் ஜலம் கொண்டுவரும் பாத்திரத்தில்
ஜலத்தை நிரப்பவும். அடுத்த இரண்டு மந்திரங்
களால் கலப்பையைக் கட்டவும். அடுத்த இரண்டு
மந்திரங்களால் பூமியை கலப்பையால் உழவும்
काम् कामदुघे என்ற மந்திரத்தால் மூன்று கலப்பை
களால் ப்ரதக்ஷிணமாக உழவும். धृतेन सीता என்
மந்திரத்தால் கலப்பைகளின் இடைவெளியை
தொடவும்.

अनुवाकः ६—या जाता—

இந்த அனுவாகத்தில் 14 மந்திரங்கள்
உள்ளன. இவைகளைச் சொல்லி தானியத்தை
விதைக்க வேண்டும். [இது ஸ்மார்த்தத்தில் உப
நயனம் விவாஹம் முதலியவைகளில் ''अङ्कुरार्पण

பாலிகை தெளித்தல் என்ற கர்மாவில் இந்த மந்திரங்கள் ஓஷதி ஸூக்தம் என்ற பெயரில் சொல்லப்படுகிறது.]

1. மந்திரம்-या जाता—முன்பு ஜகத் ஸ்ருஷ்டி காலத்தில் வஸந்தருது, வர்ஷருது, சரத்ருது இந்த மூன்று காலங்களில் தேவர்களிடமிருந்து எந்த நெல் முதலிய தான்யங்கள் உண்டாயிற்றோ, அப்படிப்பட்ட ப்ராணிகளை வளர்க்கின்ற தான்யங்களின் நூற்றுக் கணக்கானவைகளைப் பார்த்து விசேஷமாக கிராமத்தில் உண்டாகும் 7 வித தான்யங்கள், அரண்யத்தில் உண்டாகும் 7 வித தான்யங்களையும் பார்த்து சந்தோஷப் படுகிறேன்.

2. शत्रु:—தாயார் போன்ற தான்யங்களே, உங்களில் 100 கணக்கான இனங்கன் உள்ளன. மேலும் 1000 கணக்கான முளைகள் கிளம்புகின்றன. நூற்றுக்கணக்கான யாகங்கள் உங்களால் நிறைவேற்றப்படுகின்றன. அப்படிப்பட்ட நீங்கள் என்னுடைய யஜமானனை பசி, தாகம் முதலிய ரோகமில்லாதவனாகச் செய்வீர்களாக.

3. पुष्पावती:—சில பயிர்கள் செடிகள் பூக்கும், காய்க்காது. சில பூத்து காய்ப்பவை. மற்று சில செடிகள் பூக்காது காய்க்கும். சில செடிகள் பூக்காது, காய்க்காது. சில கொடிகள் பயனளித்த

தும் அழியாமல் பல வருஷங்கள் பலனைக் கொடுப்பவை. அவைகள் யுத்தத்தில் பல குதிரைகள் சீக்கிரம் சென்று ஜயிப்பது போல் பலன் அளிப்பது என்ற ஜயத்தை அடைகின்றன.

4. ओषधीरिति—ஹே ஒஷதிகளே, நீங்கள் தாய்க்கு சமமான தேவதைகள். ஆகையால் உங்களிடம் பிரார்த்திக்கிறேன். ओषः என்றால் வெப்பம். பழுக்கத்திற்குரிய வெப்பம் இருப்பதால் ஒஷதிகள் எனப் பெயர் வந்தது. பாபங்களையும், பாபத்தின் பலனை துக்கத்தையும் அழித்துக் கொண்டு நீங்கள் இங்கு வாருங்கள்.

5. शन्ते—ஹே ஒஷதிகளே தேவதைகளே, நீங்கள் அரசமரத்திலும், புரசமரத்திலும் வசிக்கிறீர்கள். ஆகையால் தான் அரசமரம் பூஜிக்கப்படுகிறது. புரச சமித் முதலியன தைவசம்பந்தமான கர்மாக்களில் உபயோகப்படுகிறது. நீங்கள் தாவரங்களாக இருந்து கொண்டு மனிதர்களை போஷிக்கிறீர்கள் (வளர்க்கிறீர்கள்).

6. यद्—எப்பொழுது நான் அன்னத்தை விரும்பி ஒஷதிகளை கையில் எடுக்கிறேனோ, அப்பொழுது பசி போன்ற ரோகம் சாப்பிடுவதற்குமுன்பே அழிந்து விடுகிறது. வேடனைக் கண்டவுடன் முயல் உயிருடனேயே பயத்தினால் காதுகளால் கண்களை மூடிக் கொண்டு செத்த

பிராணி போல் கிடக்கும். அதுபோது பசி மறை கிறது.

7. यदौषधयः—எதிரிகள் ஜயிக்க ராஜாக்கள் ஒன்று சேருவதுபோல ஒஷதிகள் பலனைக் கொடுக்க எப்பொழுது ஒன்று சேருகின்றனவோ அப்பொ ழுது அவைகளுள் வைத்தியர்போல செடிகளின் ரஸம், வீர்யம் இவைகளை அறிந்த ஒரு ஒஷதி மேதாவியாகும். புரோடாசம் போன்ற உணவை யளித்து ரக்ஷோக்ன இஷ்டி மூலம் ராக்ஷஸர்களை அழிக்கிறது. பத்யமான ஆஹாரத்தினுல் ரோகங் களை அழித்து வைத்யர் போல் விளங்குகிறது.

8. निर्जीवाः—ஹே ஒஷதிகளே. தாயார் உத்பத் திக்கு காரணம் போல் பசிப் பிணியை போக்கு வது தான் உங்கள் உற்பத்தியின் நோக்கமாகும். நீங்கள் உங்கள் காரியத்தை செய்ய சக்தியுள்ள வர்களாக இருங்கள். பசி முதலிய ரோகங்களை அகற்றுபவர்களாக இருந்துக் கொண்டு ரோகம் போல் உடலை வாட்டுகிற பசி முதலியவற்றை அழியுங்கள்.

9. अग्नावः—ஹே ஒஷதிகளே, உங்களுள் ஒரு வருக்கொருவர் காப்பாற்றிக் கொள்ளுங்கள். எல்லா ஒஷதிகளும் சேர்ந்து எனது வார்த் தையை பிரார்த்தனையை காப்பாற்றுவீர்களாக.

10. गावः — பசுக்கள் கொட்டிலிலிருந்து கிளம்பி மேய்வதற்கு காட்டிற்கு செல்லுவது

போல், ஓஷதிகளின் பலத்தைக் கொடுக்கக் கூடிய ரஸங்கள் வெளியேறி யஜமானனுடைய சரீரத்திற்கு புஷ்டியை அளிக்கின்றன.

11. अतिविश्वा:—திருடன் மாடுகளை திருடுவதற்கு கோசாலைக்குள் புகுந்து எங்கும் சஞ்சரிப்பது போல், ஓஷதிகள் மனிதனின் சரீரத்திற்குள் எங்கும் பரவி ஜ்வரம் முதலிய பாபரூபமான ரோகத்தை அழிக்கின்றன.

12. यास्त आतस्थु:—ஹே யஜமானனே, உனது சரீரத்தில் நுழைந்த ஓஷதிகள் ரஸவடிவில் நாடிகளின் வழியாக பர்வாக்களில் ப்ரவேசித்து நடுநிலை வகிக்கும் அரசன் துஷ்டர்களை அழிப்பது போல யக்ஷ்மாதி ரோகங்களை அழிக்கட்டும்.

13. साकं यक्ष्म:—பித்தம், வாதம், கபம் இவைகளினால் ஏற்படும் ரோகத்துடனும், வேதனையுடனும் ஹே யக்ஷ்மரோகமே நீ அழிவாயாக.

14. अश्वावती—அச்வாவதீ ஸோமவதீ போன்ற ஓஷதிகளும், ப்ராணபலம் இந்திரிய பலம் இவைகளைக் கொடுப்பவைகளும், சரீரத்தை புஷ்டியாக்க கூடியவர்களுமான எல்லா ஓஷதிகளையும், நான் அடைந்துள்ளேன். யஜமானனுடைய எல்லா அரிஷ்டமும் நீங்கும் பொருட்டு இவைகளை அடைந்துள்ளேன். இதைச் சேர்ந்த அடுத்த ஆறு மந்திரங்கள் கூறப்படுகின்றன.

1. या: फलिनी:—கனியைக் கொடுப்பவை, பழத்தைக் கொடுக்காதவை, புஷ்பிப்பவை, புஷ்பிக்காதவை என்ற எல்லா ஓஷதிகளும் ப்ருஹஸ்பதியினுல் அனுமதிக்கப்பட்டு எங்களை பாபத்திலிருந்து விடுவிக்கட்டும்.

2. या सोमप्रय: — ஸோமலதையை ராஜாவாகக் கொண்டு சில ஓஷதிகள் பூமிக்கு வந்துள்ளன. அவைகளுள் ஒன்றுன ஹே ஓஷதியே, நீ எங்களுடைய ஜீவனத்திற்கு ஔஷதமாக இருப்பாயாக.

3. अवपतन्ती—ஸ்வர்க்கலோகத்திற்கு மேலேயிருந்து கீழேவிழும் கொடிகள் கூறுகின்றன. அவைகளைச் சாப்பிடுபவர்கள் அழிவதில்லையென்று.

4. याश्चेदं—எங்களுடைய பிரார்த்தனையை கேட்டும் கொடிகளும், கேட்காமல் தூரம் சென்றுவிட்டதால் இலேசாகக் கேட்பவைகளுமான எல்லா ஓஷதிகளும் இங்கு வந்து யஜமானனுக்கு ரோகாதிகளுக்கு சிகிச்ஸை செய்யுங்கள்.

5. मावोरिषत्—ஹே ஓஷதிகளே, ரோக சிகித்ஸைக்காக உங்களைத் தோண்டி வேரை எடுக்கிறுர்களோ, நானும் சிகித்ஸைக்காக வேரை பிடுங்குகிறேனே; இவர்கள் அழிய வேண்டாம். மேலும் எங்கள் வீட்டிலுள்ள மனிதர்கள் பிராணிகள் எல்லோருமே உங்களால் பிழைத்துக் கொண்டு ரோகமில்லாமல் இருக்கட்டும்.

6. ओषधयः—ஓஷதி தேவதைகள் தங்கள் யஜமானனுன சோமராஜாவுடன் சாம்பாஷனை செய்கின்றன. என்னவெனில் எங்கள் வேர்களால் பிராஹ்மணன் எந்த நோயாளிக்கு சிகித்ஸை செய்கிறானோ, ஹே அரசே, அந்த நோயாளியை நாங்கள் ரோகத்திலிருந்து விடுவிப்போம்.

अनुवाक: ७—मानो हिंसीत्—

இந்த அனுவாகத்தில் மண் கட்டிகளை எடுத்துப் போடுவது முதலியன சொல்லப்படுகிறது. முதல் நான்கு மந்திரங்களால் அளந்து கோடிட்ட இடத்திலிருந்து மண்ணைக் கிளறி விட்டு எடுக்கும் பொழுது கோட்டிற்கு வெளியில் விழும் மண் கட்டிகளை திரும்ப எடுத்து எல்லைக்குள் போடவேண்டும். இந்த இடத்திலுள்ள மண் கட்டி யாகத்திற்கு தகுதியுள்ளதாக இருக்கட்டும் என்பது கருத்து.

मानो वध—என்பது முதல் ஆறு மந்திரங்களால் மணல்களை போடவேண்டும். இவைகளில் அக்னியின் மஹிமை சொல்லப்படுகிறது. இதற்கு वैश्वानरसूक्त எனப் பெயர். இதைச் சொல்வதால் वैश्वानरराशिः ஸித்திக்கிறது என்பது கருத்து. चितःस्थ என்ற மந்திரத்தால் ஆஹவனீயாக்னியின் சிதியின் மீது நிறைய மணல்களைப் போட வேண்டும்.

अग्नयेत्व என்ற மந்திரத்தால் மணலை பரப்ப வேண்டும். க்ஷத்ரியன் யஜமானனுக இருந்தால் அடுத்த மந்திரத்தால் மணலை பரப்பவும்.

ஹே ஸோமனே, நீ எல்லாவற்றையும் விருத்தி செய்வாயாக. எல்லா விதமான ஆகாரத்திலிருந்தும் உனது ரேதஸ் யஜமனனை வந்தடையட்டும். அன்னத்தை அடைவதற்கு நீ காரணமாக இரு.

अनुवाकः ८—अश्यस्थात्—

இந்த அனுவாகத்தில் தங்கத்திலுலான இஷ்டகையை தகட்டை வைப்பது முதலியன சொல்லப்படுகிறது. अश्यस्थात என்ற மந்திரத்தை சொல்லி கிழக்கு நோக்கி இருக்கின்ற குதிரையை வலது காலை தர்ப்ப முஷ்டியின் மேல் வைக்கச் சொல்லவும். यदक्रन्दः என்ற மந்திரத்தைச் சொல்லி குதிரையை ப்ரதக்ஷிணமாகச் சுற்றிவரச் செய்யவும். அடுத்த மந்திரத்தால் குதிரையின் காலில் தாமரை இலையை மேல் நோக்கியதாக வைக்கவும். அடுத்த மந்திரத்தைச் சொல்லி தாமரையின் மீது தங்கத்தகட்டை வைக்கவும். हिरण्यगर्भः என்ற மந்திரத்தைச் சொல்லி அந்த ஸுவர்ணத்தின் மீது தங்கத்திலுல் புருஷாகிருதி செய்து கிழக்கே சிரஸ்ஸை மேல் நோக்கியபடி வைக்கவும். தெற்கு பாகத்தில் ஸ்வர்ண இஷ்டகையில் ஓர் த்வாரம் இருக்க வேண்டும்.

அடுத்த மந்திரத்தைச் சொல்லி ஸ்வர்ண புருஷாக்ருதியை தொடவும். नमो अस्तु सर्प्येभ्यः என தொடங்கி மூன்று மந்திரங்களால் (अभिमन्त्रण) இஷ்டகையைப் பார்த்துச் சொல்லவேண்டும். இந்த மூன்று மந்திரங்களும் ஸ்மார்த்தத்தில் "सर्पबलिः" என்ற கர்மாவில் உபயோகப்படுகிறது. नमो अस्तु சில ஸர்ப்பங்கள் பூமியில் வாழ்கின்றன. சில ஸர்ப்பங்கள் அந்தரிக்ஷலோகத்தில் இருக்கின்றன. சில ஸர்ப்பங்கள் மேல் உலகில் இருக்கின்றன. அந்த ஸர்ப்பங்கள் எல்லாவற்றிற்கும் நமஸ்காரம்.

येऽदोरोचने—அந்தரிக்ஷ லோகத்தை பிரகாசிக்க செய்கின்ற மேலே இருக்கின்ற ஸூர்ய மண்டலத்தில் எந்த ஸர்ப்பங்கள் இருக்கின்றனவோ மற்றும் சில ஸூர்யனுடைய கிரணங்களில் கண்களுக்கு புலப்படாமல் இருக்கின்றனவோ மற்றும் சில ஸர்ப்பங்கள் ஜலத்தினுள் தனது இருப்பிடத்தை கொண்டுள்ளதோ, அந்த ஸர்ப்பங்கள் எல்லாவற்றிற்கும் நமஸ்காரம்.

यातुषवः—எந்த ஸர்ப்ப இனங்கள் ராக்ஷஸர்களுக்கு பாணங்களாக இருக்கின்றனவோ, மற்றும் சில சந்தன மரம் போன்றவைகளைச் சுற்றிக் கொண்டு இருக்கின்றனவோ, வேறு சில ஸர்ப்பங்கள் பொந்துக்களில் உறங்குகின்றனவோ, அனை எல்லாவற்றிற்கும் நமஸ்காரம் என்பது பொருள்

अनुवाकः ९—ध्रुवाऽसि धरुणाः—

இந்த அனுவாகத்தில் "ध्रुवमारुणा" போன்ற இஷ்டகைகளை வைக்கும் முறை சொல்லப்படுகிறது.

ध्रुवासि—என்ற மந்திரத்தால் ஸ்வயமாத்ருண்ணு என்ற இஷ்டகையைத் தொடவும். குதிரை அந்த இஷ்டகை முகர்ந்து பார்க்க வேண்டும்.

प्रजापतिस्त्वा सादयतु...ध्रुवासीद—என்ற மந்திரத்தால் அக்னியின் நடுவில் ஷி இஷ்டகையை வைக்கவும்.

काण्डात्.....शतेन च—என்ற மந்திரத்தால் दर्वेदका அருகம்புல்லால் ஆன இஷ்டகையை வைக்கவும்.

अपाऽसि—என்ற இரண்டு மந்திரங்களால் உகாபாத்திரம் தயாரிக்கும் பொழுது தயாரான சதுரமான அஷாடா என்ற இஷ்டகையை வைக்கவும்.

मधुवाता ऋतायते என்ற மூன்று மந்திரங்களால் ஆமையை தேன் கலந்த தயிரால் நனைத்து, யக்ஞானுஷ்டானம் செய்யவிரும்பும் யஜமானனுக்கு காற்றுகள் தேனை (மதுவை) பெருக்குகின்றன. நதி ஸமுத்ரம் முதலியவைகளும் (தேனை) மதுரரஸத்தைப் பெருக்கச் செய்கின்றன.

ஓஷதிகளும் எங்களுக்கு மதுரரஸத்தைப் பெருக்
பவைகளாக இருக்கட்டும். இரவு, விடியற்கால
இந்த வேளையில் மதுரரஸம் எங்களுக்கு இரு
கட்டும். பூமியிலுள்ள புழுதியும் மதுரரஸமுள்
தாக இருக்கட்டும். பிதா போன்ற மேல் உலகமு
எங்களுக்கு மதுரரஸத்துடன் கூடியதாக இரு
கட்டும். அரசமரம் போன்ற விருக்ஷங்களும் எ
களுக்கு இனிமையானதாக இருக்கட்டும். சூரி
னும் அதிக உஷ்ணமில்லாமல் இனிதாக இரு
கட்டும். பசுக்களும் எங்களுக்கு இனிய க்ஷீரத்
கொடுப்பவைகளாக இருக்கட்டும் என்பது
மந்திரத்தின் பொருள். அடுத்த மந்திரத்
சொல்லி ஸ்வயமாத்ருண்ணா இஷ்டகைக்
மேற்கே உயிருள்ள ஆமையை சிரஸ்ஸை கிழக்
யிருக்கும்படி வைக்கவும்.

तद्विष्णोः परमं पदं என்ற மந்திரத்தால் உ
கையை வைக்கவும். ஞானிகள் விஷ்ணுவி
உத்கிருஷ்டதான ஸ்தானத்தை ஆகாயத்தி
கண்ணை விரித்துக் கொண்டு எப்பொழுது
பார்க்கிறார்கள் எனப்பொருள். ध्रुवाऽसि என்ற மந்
ரத்தால் உகாபாத்திரத்தை வைக்கவும். அடுத்
இரண்டு மந்திரங்களால் வாமப்ருத் என்ற இஷ்
கையை வைக்கவும். विराड् என்ற மந்திரங்களா
மூன்று ரேதஸ்ஸிக் என்ற இஷ்டகையை வை
வும். அடுத்த இரண்டு மந்திரங்களால் உகாபா
ரத்தில் ஹோமம் செய்யவும். द्रप्सश्चस्कन्द என்ப

மூதல் ஸ்வாஹா என்பது வரையிலுள்ள மந்திரங்களைச் சொல்லி புருஷசிரஸ்ஸில் தங்கத்துண்டுகளைப் போடவும். கண், காது, மூக்கு த்வாரங்களிலும் தங்கத்துண்டுகளை வைக்கவும்.

ஸமிஞ்ஜந்து என்ற மந்திரத்தால் தேன் கலந்த தயிரால் புருஷசிரஸ்ஸை நிரப்பவும். நதிகள் பெருகி ஓடுவது போல், குடிக்கத் தகுந்த தயிர், தேன் இவைகளின் அவயவங்கள் நன்கு பெருகி ஓடுகின்றன. அவைகள் சரீரத்தினுள்ளே ஹ்ருதயத்தினுள்ள அந்தக்கரணத்தினுல் சுத்தப்படுத்தப்பட்டு நெய் பெருக்காக ஆகின்றன. அந்தப் பெருக்கை நான்கு பக்கத்திலும் பிரகாசப்படுத்துகிறேன். (அனுபவிக்கிறேன்). அந்த நெய்ப் பெருக்கின் மத்தியில் தங்கம் போல் பளபளப்பான புருஷனுடைய சிரஸ் ஜலப்ரவாஹத்தின் நடுவில் நீர் கொச்சி செடி இருப்பது போல் பிரகாசிக்கிறது என பொருள்.

ஸ்ருக் ஸ்ருவௌ: என்ற மந்திரத்தால் புருஷசிரஸ்ஸை கையில் எடுக்க வேண்டும். மரத்தில் தேனீ கூடுகட்டிக் கொண்டு சிறிய தேனீக்கள் மூலம் தேனை சேகரிப்பது போல் அந்த புருஷசிரஸ்ஸில் வீட்டை அமைத்துக் கொண்டு அழகிய இறக்கைகளைக் கொண்டவராய் தேவதைகளுக்கு போக்ய வஸ்துக்களாகிற அம்ருதத்தின் பெருக்கை ஸம்பாதித்துக் கொண்டு ஒருவர் இருக்கிறார். அந்த புருஷசிரஸ்ஸின் சமீபத்தில் கண்

க்ாது மூக்கு வாய் போன்ற ஏழு த்வாரங்களின் வழியாக அம்ருதத்தை பெருக்குகின்றன. அதாவது ஏழுத்வாரங்களின் வழியாக ப்ராண சஞ்சாரம் ஏற்படுவதால் புருஷன் ஜீவாத்மாவாக ப்ரகாசிக்கிறான் என்பது கருத்து. இது மந்திரத்தின் பொருள். ஷை இரண்டு மந்திரங்களும் 'त्रिसुपर्ण' யாகத்தில் உள்ளது.

अनुवाकः १०—आदित्यं गर्भं—

இந்த அனுவாகத்தில் चितिக்கு அடியில் பசு (ஆடு) முதலியவை தலையை வைக்கும் முறை கூறப்படுகிறது. आदित्यं गर्भं என்ற மந்திரத்தை சொல்லி உகாபாத்திரத்தில், கிழக்கு தலை இருக்கும்படி மேல் நோக்கியதாக புருஷசிரஸ்ஸை வைக்கவும். அடுத்த மந்திரத்தால் புருஷசிரஸ்ஸுக்கு உபஸ்தானம் செய்யவும். ஹே அக்னியே, இந்த புருஷசிரஸ்ஸை தஹிக்காதே. பசுக்களின் நடுவில் இந்த சிரஸ்ஸை வைக்கிறேன். உனக்கு ஆஹாரமாக க்ருஷ்ண மிருகத்தை (மானை) அளிக்கிறேன். அதனால் நீ புஷ்டியடைவாயாக. அடுத்த மந்திரத்தால் குதிரையின் சிரஸ்ஸை சிதியில் வைக்க வேண்டும். அதற்கு அடுத்த மந்திரத்தால் அதற்கு உபஸ்தானம் செய்யவும். अजस्रमिन्धुं என்ற மந்திரத்தால் காளையின் சிரஸ்ஸை வைக்கவும். அதற்கடுத்த மந்திரத்தால் அதற்கு உபஸ்தானம் செய்யவும்.

அடுத்த மந்திரத்தால் वृष्णिरेषः வருஷ்ணீ (செம்மறி ஆடு) சிரஸ்ஸை வைக்கவும். அதற்கடுத்த மந்திரத்தால் ஷி சிரஸ்ஸுக்கு உபஸ்தானம் செய்யவும். பிறகு அடுத்த மந்திரத்தால் (வஸா) கொம்பில்லாத ஆட்டின் சிரஸ்ஸை வைக்கவும். அதற்கடுத்த மந்திரத்தால் அதற்கு உபஸ்தானம் செய்யவும். உபஸ்தானம் என்பது தேவதையினிடம் செய்யும் பிரார்த்தனையாகும். அதற்கு பிறகு சரபம் (யாளி என்ற மிருகம்) என்ற ஆரண்ய மிருகத்தை வைக்கவும். ஹே அக்னியே, இப்படிப்பட்ட சிதியில் நீ அமருவாயாகம். ஷி ஹே அக்னியே, ஷி சிரஸ்ஸுகளை ஹிம்ஸிக்காமல் உலக க்ஷேமத்தையளிப்பாயாக என்பது மந்திரங்களின் கருத்து.

अनुवाकः ११—इन्द्राग्नी रोचना—

இந்த அனுவாகத்தில் "वायुर्नियुत्" யாகத்தின் இரண்டாவது பர்வாவான "वरुणप्रघास पर्व" என்ற யாகங்களின் புரோனுவாக்யா யாஜ்யா மந்திரங்கள் கூறப்படுகின்றன.

इन्द्राग्नवागोय யாகத்திற்கு முதல் மந்திரம் புரோனுவாக்யா, அடுத்த 2 மந்திரங்கள் विकल्प याज्या மந்திரங்கள். மருத்கணங்கள் தேவதை, ஆமிக்ஷா (தயிரின் கெட்டியான பாகம்) ஹவிஸ். இந்த யாகத்

தின் புரோனுவாக்யா मरुतोयज्ञहि, என்பது அடுத்த மந்திரமும் விகல்பமாக இதே யாகத்தின் புரோனுவாக்யா மந்திரம். அதற்கடுத்த மந்திரம் யாஜ்யா மந்திரமாகும். பிறகு அடுத்த மந்திரங்களே यत्ते देव, इदुत्तमं இவை இரண்டும் வருண தேவதை, ஆமிக்ஷா ஹவிஸ், என்ற யாகத்தின் புரோனுவாக்யா, யாஜ்யா மந்திரங்களாகும். அடுத்த இரண்டு மந்திரங்கள் ப்ரம்மா தேவதையாக கொண்ட एकपाल पुरोडाशம் ஹவிஸ் என்ற யாகத்தின் புரோனுவாக்யா யாஜ்யா மந்திரங்கள் अग्नेय, नादेवानां என்ற இரண்டு மந்திரங்களும் द्विदेवत्य யாகத்தின் புரோனுவாக்யா யாஜ்யா மந்திரங்கள். यं नो भवत्व वाजेवाजेऽवत என்ற மந்திரங்கள் 'वाजिन' யாகத்தின் புரோனுவாக்யா யாஜ்யா மந்திரங்கள். வருண ப்ரகாஸ பர்வாவில் அவப்ருத ஸ்னானம் உண்டு. அவப்ருதேஷ்டியும் உண்டு. அந்தி இஷ்டியின் माध्यभाग யாகத்தின் புரோனுவாக்யா மந்திரங்கள் 2 உள்ளன. इमं मे वरुण, तत्वायामि இரண்டும் வருண யாகத்தின் புரோனுவாக்யா யாஜ்யா மந்திரங்களாகும். त्वं नो अग्ने, स त्वं नो अग्ने என்ற இரண்டு மந்திரங்களும் அவப்ருதேஷ்டியின் ஸ்விஷ்டக்ருத் யாகத்தின் புரோனுவாக்யா யாஜ்யா மந்திரங்கள். அந்தந்த தேவதைகளின் மஹிமை இவைகளில் சொல்லப்படுகிறது.

ப்ரச்னம்—3

अनुवाकः १—अपा त्वेमन्त्सादयामि

இரண்டாவது ப்ரச்னத்தில் மஹாக்னி சயனம் செய்கிறபொழுது செங்கற்களை கீழிலிருந்து மேலாக ஐந்து வரிசை அடுக்குவதற்கு முன் செய்யவேண்டிய புருஷசிரஸ் குதிரை முதலிய பசுக்களின் சிரஸ், உயிருடன் ஆமை இவைகளை சயனம் செய்யவேண்டிய இடத்தில் வைக்கும்படி கூறி அதற்கு வேண்டிய மந்திரங்கள் கூறப்பட்டன. மூன்றுவது ப்ரச்னத்தில் செங்கற்களை அடுக்குவதற்கு வேண்டிய மந்திரங்கள் கூறப்பட்டுள்ளன. மொத்தம் 5 அடுக்குகள் செங்கலால் கட்டவேண்டும். पञ्चाक्षरा पंक्तिः, पाङ्क्तोयज्ञः என்ற வசனப்படி ஐந்து வரிசை செங்கல் அடுக்கினால் அதுவே ஒரு யக்ஞம். பிறகு அதில் ஆஹவனீயாக்னியை வைத்து ஸோமயாகத்தை செய்யவேண்டும். இந்த ப்ரச்னத்தில் முதல் நான்கு அடுக்குகள் செங்கற்களை (இஷ்டகைகள்) வைப்பதற்குரிய மந்திரங்கள் கூறப்பட்டுள்ளன. முதல் மூன்று அனுவாகங்களில் முதல் அடுக்கு செங்கற்கள் வைப்பதற்குரிய மந்திரங்கள் உள்ளன.

अपाम्ना கிழக்கு தெற்கு, மேற்கு. வடக்கு என ப்ரதக்ஷிணமாக நான்கு திசைகளிலும் திசைக்கு ஐந்து செங்கற்கள் (இஷ்டகைகள்) வீதம் வைக்க

வேண்டும். இந்த அனுவாகத்தில் உள்ள 1. अपांत्वे मन् 2. अर्णवे सदने सीद, 3. अपांत्वासदने, 4. गायत्रीछन्दः என்ற நான்கு மந்திரங்களை சொல்லி வைக்கவேண்டும்

ஹே இஷ்டகையே, ப்ரவாஹம், அலைகள் நதி, கிணறு இவைகளின் ஆதாரஸ்தானம் இந்த இடங்களில் உன்னை வைக்கிறேன். மேலும் ஏரி, குளம், சமுத்ரம், ஜலமிருக்குமிடம், உலர்ந்த (ஜலம் வற்றின) குளம், ஆலங்கட்டி மழை முதலியவைகளில் நீ அமருவாயாக. நதிகள் மேகம், மணல், அக்னி, சமுத்ரம் இந்த இடங்களில் இஷ்டகையை வைக்கிறேன். ஹே இஷ்டகையே, காயத்ரீ, த்ருஷ்டுப், ஜகதி அனுஷ்டுப் என்ற சந்தஸ்வரூபமாயிருக்கின்ற உன்னை அடுக்குகிறேன் என்பது பொருள்.

अनुवाकः २—अयं पुरोभुवः

(இது உதக சாந்தியில் சொல்லுகிறோம்) என்ற மந்திரத்தால் கிழக்கே 10 இஷ்டகைகள் வைக்கவும். अयंदक्षिणा என்ற மந்திரத்தால் தெற்கே 10 இஷ்டகைள் வைக்கவும். अयंपश्चात् என்ற மந்திரத்தால் மேற்கே 10 இஷ்டகைகள் வைக்கவும். इदमुत्तरात् என்பதனால் வடக்கே 10 இஷ்டகைகளை வைக்கவும். इयमुपरिमतिः என்ற மந்திரத்தால் நடுவில் 10 இஷ்டகைகளை வைக்கவும்.

ஹே இஷ்டகைகளே, ப்ரஜாபதி, ப்ராணன் வஸந்த ருது, முதலிய உபசார வார்த்தைகளா

ப்ரஜைகளின், ப்ராணவாயு ஸித்திப்பதற்காக உன்னை வைக்கிறேன் என்பது பொருள். தெற்கே வைக்கும் இஷ்டகையே, ப்ரஜாபதி, மனஸ், க்ரீஷ்ம ருது என்ற ரூபத்தில் உன்னை வைக்கிறேன் எனப்பொருள். மூன்றுவது—ப்ரஹ்மா, வர்ஷருது முதலிய ரூபத்தில் இஷ்டகை வைக்கப் படுகிறது. நான்காவது ப்ரஜபதியின் சரீரமாக பாவித்து இஷ்டகை வைக்கப்படுகிறது. ஐந்தாவது ப்ரஜாபதி, நிதனஸாம ப்ருஷ்ட ஸ்தோத்ரம் முதலிய ரூபத்தில் தியானம் செய்து கொண்டு வைக்கிறேன் எனப் பொருள்.

अनुवाकः ३—प्राचीदिशा

சென்ற அனுவாகத்தில் வைத்த இஷ்டகைகளுக்கு 'प्राणभृतः' ப்ராண ப்ருத் எனப் பெயர். இந்த அனுவாகத்தில் 'अप्राणभृतः' என்ற 50 இஷ்டகைகள் வைப்பதற்கு மந்திரங்கள் கூறப்பட்டுள்ளன.

प्राचीदिशा, என்ற மந்திரத்தால் 10 இஷ்டகைகளை வெளி வரிசையில் கிழக்கே வைக்கவும். दक्षिणादिशा என்பது தெற்கே 10 இஷ்டகைகளை வைக்க மந்திரம், प्रतीचीदिशा என மேற்கே 10 இஷ்டகைகளை வைக்க மந்திரம் उदीचीदिशा என வடக்கே 10 இஷ்டகைகளை வைக்கும் மந்திரம். ध्रुवादिशा என நடுவில் 10 இஷ்டைகளை வைக்கவும். இந்த ஐந்து மந்திரங்களின் ஒவ்வொரு முடிவிலும்

पितरः पितामहाः...देवहूत्यां என்ற மந்திர பாகம் சேர்க்க
படவேண்டும். இவைகளுக்கு 'संयत्' இஷ்டகைகள்
என்றும் பெயர். கிழக்கு திசை, அக்னி, ப்ராஹ்
மணன் க்ருதயுகம் முதலிய வடிவில் இஷ்டகையை
தியானம் செய்வதாகப் பொருள். அடுத்த மந்
ரங்களில் தெற்கு, மேற்கு, வடக்கு முறையே
க்ஷத்ரியன், வைச்யன், சூத்ரன்; த்ரேதாயுகம்
த்வாபரயுகம், கலியுகம் என்ற ரூபத்தில்
தியானித்து வைக்கவேண்டும் என்பது பொருள்
ஐந்தாவதில் கலியுகத்தின் முடியும் ஸமயமா
பாவிக்கும்படி கூறப்பட்டுள்ளது. पितरः पितामहा
என்ற மந்திரம் ஸ்மார்த்ததில் (जयादि) ஜயாதி
ஹோமத்தில் உபயோகப்படுகிறது. இதன்
பொருள்.

ஹே, பிதா முதலிய மூன்று முன்னோர்களே,
சகோதரன், புத்ரன் போன்றவர்களே, சிறியவர்
களே, எங்களை கர்மானுஷ்டானம் செய்வதற்கா
காப்பாற்றுங்கள். இந்த ப்ராஹ்மணஜாதி
க்ஷத்ரியஜாதி, ஆசீர்வாதம், விருப்பம், புரோஹித
விருத்தி, தொழில் இந்த சயன கர்ம, (चयन कर्म)
தேவதைகளை ஆஹ்வானம் செய்வது என்பவை
நிமித்தமாக ஹே இஷ்டகையே, உன்னை வைக்
கிறேன். இத்துடன் முதல் வரிசையில் இஷ்டகை
களை அடுக்குவது முடிந்தது, இதற்கு प्रथमा चिति
எனப் பெயர்.

अनुवाकः ४—ब्रह्मणिधिः

நான்காவது, ஐந்தாவது அனுவாகங்களில் இரண்டாவது அடுக்கு செங்கற்கள் வைப்பதற் குரிய மந்திரங்கள் கூறப்பட்டுள்ளன. நான்கா வது அனுவாகத்தில் அச்வினீ முதலிய இஷ்டகை களை வைப்பதற்கு மந்திரங்கள் உள்ளன. முதல் ஐந்து மந்திரங்களால் அச்வினீ எனப்படும் ஐந்து இஷ்டகைகளை இரண்டாவது அடுக்கில் வைக்க வும். நான்கு திசையில் நான்கும், நடுவில் ஒன்று வைக்கவும். ஹே இஷ்டகையே, நீ மண் வடிவில் ஸ்திரமாக இருக்கிறாய். உன்னை அச்வினீ தேவர் கள் இங்குவைக்கட்டும். புத்ரன் பொருட்டு தந்தை யைப்போல் நீ சுகமாக ஸேவிக்கத் தகுந்தவனுக இரு. ஹே இஷ்டகையே, செல்வம், ஆயுள் இவை களை கொடுக்க வல்ல நீ, ஸத்புத்ரன், தீர்காயுஸ், செல்வம் இவைகளை கொடுப்பாயாக. பாபபுத்தியை அகற்றுவாயாக. சிதியின் அக்னிக்கு நிரப்புவனுக இருக்கிறாய். ஜலத்தின் அலைகளாகவும், திவிலை களாகவும் இருக்கிறாய். அப்படிப்பட்ட உன்னை அச்வினீ தேவதைகள் இங்கு வைக்கட்டும். அடுத்த மந்திரத்தால் வஸந்தாதிருது ஸம்பந்த மான ஐந்து இஷ்டகைகளை வைக்கவும். प्राणं ते प्राणे என்ற மந்திரத்தால் ப்ராணப்ருத் என்ற ஐந்து இஷ்டகைகளை வைக்கவும். अपस्त्वा என்ற மந்திரத் தால் "अपान्वा" என்ற ஐந்து இஷ்டகைகளை வைக்கவும். இதன் பொருள்—ஹே இஷ்டகையே,

ஜலங்களை திருப்திப்படுத்து. ஓஷதிகள் திருப்தி செய், மனுஷ்ய சரீரத்தை காப்பாற்று. பசு போல பிராணிகளை காப்பாற்று. ஆகாயத்தி லிருந்து நான்கு பக்கத்திலும் மழை பொழியச் செய்வாயாக.

अनुवाक: ५—त्र्यविर्वय:

இந்த அனுவாகத்தில் இரண்டாவது அடுக்கில் வைக்க வேண்டிய இஷ்டகைகள் சம்பந்தப் பட்ட மந்திரங்கள் உள்ளன. மொத்தம் 19 மந்திரங்கள் உள்ளன. முதல் ஐந்து மந்திரங்களைச் சொல்லி வலது தொடையின் மேல் பாகத்திலும் அடுத்த ஐந்து மந்திரங்களைச் சொல்லி இடது தொடையின் மேல் பாகத்தில் 5+5 இஷ்டகைகளை வைக்கவும்.

அடுத்த 2 மந்திரங்களைச் சொல்லி வலது, இடது தோள் பாகத்தில் இஷ்டகையை வைக்கவும். அடுத்த இரண்டு மந்திரங்களைச் சொல்லி வலது, இடது இறக்கை ஸ்தானத்தில் இஷ்டகையை வைக்கவும். पुरुषो वय: என்ற மந்திரத்தால் நடுவில் இஷ்டகையை வைக்கவும். அடுத்த நான்கு மந்திரங்களால் கிழக்கு பாகத்தில் நான்கு இஷ்டகைகளை மேற்கே முடியும்படி வைக்கவும். இவைகளுக்கு वयस्या எனப் பெயர். பலவிதமான (छन्दा:) சந்த ஸ்வரூபமாகவும் வயது (காலம்) ரூப

மாக இருக்கிற இஷ்டகையே உன்னை வைக் கிறேன் என்பது பொருள். இரண்டாவது அடுக்கு முடிந்தது.

अनुवाकः ६—इन्द्राग्नी

6–7-வது அனுவாகங்களில் மூன்றுவது அடுக்கு (तृतीया चितिः) கட்டுவதற்குரிய மந்திரங்கள் உள்ளன. இந்த அனுவாகத்தில் स्वयमातृण्णा முதலிய இஷ்டகைகளுக்குரிய மந்திரங்கள் உள்ளன. முதல் மந்திரத்தால் 'स्वयमातृण्णा' என்ற (தானே ஒட்டை விழுந்த கல்) இஷ்டகையை தொடவும். பிறகு குதிரையை முகரச் செய்யவும். அடுத்த மந்திரத்தால் அதிக அறிவில்லாத ப்ராஹ்மணனுடன் கூட அக்னியில் நடுவில் இஷ்டகையை வைக்கவும். அடுத்த ஐந்து யஜுஸ் மந்திரத்தால் நான்கு திக்கிலும் நடுவில் ஒன்றுக இஷ்டகைகளை வைக்கவும். सप्तसप्तेति என்ற 10 மந்திரங்களால் 10 இஷ்டகைகளை கிழக்கே வைக்கவும். ப்ராணன், அபானன், வ்யானன், கண், காது, ஆயுஸ், ஹே இஷ்டகையே, இவை களை காப்பாற்றுவாயாக. மனஸ், வாக் இவை களை திருப்திப்படுத்துவாயாக. ஜீவனை காப் பாற்று. எனக்கு ஜ்யோதி ஸ்வரூபத்தை அளிப் பாயாக என்பது பொருள்.

अनुवाक: ७—माछन्द:

இந்த அனுவாகத்தில் बृहती என்ற 36 இஷ்டகைகளும் वालखिल्य: என்ற இஷ்டகைகளுக்குரிய மந்திரங்கள் உள்ளன. माछन्द: என்பது முதல் 12 மந்திரங்களால் தெற்கே 12 இஷ்டகைகளையும் पृथिवीछन्द: என்பது முதல் 12 மந்திரங்களால் மேற்கே 12 இஷ்டகைகளையும் अग्निर्देवतेति என்பது முதல் 12 மந்திரங்களால் வடக்கே 12 இஷ்டகைகளையும் வைக்கவும். छन्द: ரூபமாகவும், அக்னி முதலிய தேவதா ரூபமாகவும் இஷ்டகைகளை பாவித்து வைக்கவும்.

मूर्धाऽसि—என்பது முதல் ஏழு மந்திரத்தால் கிழக்கே ஏழு वालखिल्या என்ற இஷ்டகைகளை வைக்கவும். यन्त्रीराड என்ற ஏழு மந்திரத்தால் அடுத்த ஏழு இஷ்டிகைகளை மேற்கே வைக்கவும். அன்னம், பலம், ஸஸ்ய ஸம்ருத்தி இவைகளுக்காக வைக்கிறேன். ஆயுஸ், சரீரகாந்தி, உடல் வலிமை இவைகளுக்காக வைக்கிறேன் என்பது பொருள். மூன்றாவது சிதி முடிந்தது.

अनुवाक: ८—आ॒शुस्त्रि॒वृत् ९—अ॒ग्नेर्भा॒गोऽसि

8, 9, 10, 11 நான்கு அனுவாகங்களில் நான்காவது அடுக்கு चतुर्थी चितिः க்கு வேண்டிய மந்திரங்கள் உள்ளன. இந்த அனுவாகத்தில் अक्ष्णया स्तोमीया என்ற இஷ்டகைகளுக்குரிய மந்திரங்கள்

உள்ளன. त्रिवृत् पञ्चदशः முதலியன ஸாமகானத்தின் போது கானத்தின் ஆவிருத்தியை கணக்கிடுவதால் ஏற்படும் கானத்தின் அளவு. மொத்தம் 18 स्तोत्रத்தைச் சொல்லும் மந்திரங்கள் உள்ளன. இந்த மந்திரங்களைச் சொல்லி ஸ்தோம ரூபமாக பாவிக்கப்பட்ட 18 இஷ்டகைகளை வைக்க வேண்டும். இதன் விசேஷ பொருள் ब्राह्मणத்தில் கூறப்பட்டுள்ளது. இதற்கு स्तोमीया इष्टकाः எனப் பெயர். இதில் 10 மந்திரங்கள் சொல்லி மீதியுள்ள இஷ்டகைகளை வைக்கவும். தேவதைகளின் ஆஹாரமான ஹவிஸ் ரூபத்தில் பாவித்து வைக்கவும். 1. ஹவிஸ், 2. ஹவிர்விசேஷம், 3. தக்ஷிணை, 4. காற்று, மழை, 5. ஓஜஸ் 6. கர்ப்பம், 7. குதிரை, 8. திசைகள், 9. மாஸங்கள், 10. தேவகணங்கள் முதலியன இவைகள் மந்திரங்களின் தாத்பர்யம். இவ்வாறு अष्टाचत्वारिंशा இஷ்டகைகள் வைக்கப்படுகின்றன.

अनुवाकः १०—एकयाऽस्तुवत

இதில் 17 மந்திரங்கள் ஸ்ருஷ்டி சப்த சம்பந்தப்பட்டவைகளாக உள்ளன. ऊर्ज என்ற இஷ்டகைகளை இதன் மூலம் வைக்கவும். 1, 3, 5, 7 போன்ற ஒற்றப்படை ருக்குகளால் ரிஷிகள் துதித்தனர். அதனால் ப்ரஹ்மா முதலியோரும், மாஸம் முதலிய காலங்களும், அவைகளின் அதிபதிகளும் உண்டானார்கள் எனப்பொருள்.

अनुवाकः ११—इयमेव

இந்த அனுவாகத்தில் வ்யுஷ்டி என்ற பெயருள்ள இஷ்டகைகளை வைக்கும் மந்திரங்கள் உள்ளன. பகல் இரவு என்ற வேறுபாடில்லாமல் இருந்ததால் உஷ: காலத்தைக் குறிக்கும் व्युष्टि என பெயர் இஷ்டகைக்கு ஏற்பட்டது. மொத்தம் 15 மந்திரங்கள் உள்ளன. உஷ: காலம் சந்திர, ஸூர்ய, அக்னி ரூபமாகவும், மற்றும் பல விசேஷ தேவதா ரூபமாகவும் வர்ணிக்கப்படுகிறது. காலத்தை உண்டுபண்ணக் கூடியதாகவும் கூறப்பட்டுள்ளது. உஷ: காலத்தின் பெருமை பலவாறாக கூறப்பட்டுள்ளது. இத்துடன் நான்காவது चिति முடிந்தது.

अनुवाकः १२—अग्ने जातान्

இதில் ஐந்தாவது அடுக்கில் (पञ्चमी चितिः) வைக்கவேண்டிய இஷ்டகைகளின் மந்திரங்கள் உள்ளன. असपत्नः, முதலிய பெயருள்ள இஷ்டகைகள் கூறப்படுகின்றன. முதல் மந்திரத்தால் கிழக்கிலும், இரண்டாவது மந்திரத்தால் மேற்கிலும் மூன்றாவது மந்திரத்தால் தெற்கிலும் நான்காவது மந்திரத்தால் வடக்கிலும் இஷ்டகைகளை வைக்கவும். மணலைப் போட்டு ஐந்தாவது மந்திரத்தால் நடுவில் पुरीषवती என்ற இஷ்டகையை வைக்கவும். एवश्छन्दः என்பது முதல் अङ्काङ्कछन्द

என்பது முடிய மந்திரங்களை சொல்லி இஷ்டகைகளை வைக்கவும். 'स्वः' என்ற சப்தத்துடன் கூடிய 40 யஜுர் மந்திரங்களைச் சொல்லி நான்கு திசைகளிலும் 10 வீதம் 40 இஷ்டகைகளை வைக்கவும் अक्षण्वन्तः என இவைகளுக்குப் பெயர். विराट् என விசேஷ பெயர். ஸ்வர்க லோகத்திலுள்ள சந்தோவிசேஷங்களின் (स्वर्गे विशेषाः) பெயர்கள் स्वः முதலியன.

अनुवाकः १३—अग्निचित्तानि

இந்த அனுவாகத்தில் 'चातुर्मास्य' யாகத்தின் மூன்றுவது பர்வாவின் 'साकमेध' பர்வாவின் अनीकवतीष्टि முதலிய யாகங்களின் पुरोनुवाक्या - याज्या மந்திரங்கள் கூறப்படுகின்றன. முதல் இரண்டு மந்திரங்கள், இரண்டு ஆஜ்யபாக யாகங்களின் புரோனுவாக்யா மந்திரங்களாகும். अनीकवतीष्टியின் ப்ரதான யாகத்தின் புரோனுவாக்யா மந்திரம் மூன்றுவது ருக். நான்காவது, 5வது ருக்குகள் ஷி யாகத்தின் (याज्या) யாஜ்யா மந்திரங்களாகும், 6, 7வது மந்திரங்கள் ஸ்விஷ்டக்ருத் யாகத்தின் புரோனுவாக்யா, யாஜ்யா மந்திரங்களாகும். 8, 9வது மந்திரங்கள் सावित्रीष्टியின் இரண்டு ஆஜ்யபாக யாகத்தின் புரோனு வாக்யா மந்திரங்களாகும். தேவதை सावित्रा मन्त्राः என்ற ப்ரதான யாகதேவதையைக் குறிக்கும் 10வது மந்திரம் புரோனுவாக்யா மந்திரமாகும். 11, 12

வது ஷை யாகத்தின் யாஜ்யா மந்திரங்கள். 13 வது மந்திரம் ஸ்விஷ்டக்ருத் யாகத்தின் புரோனு வாக்யா மந்திரமாகும். 14வது மந்திரம் ஸ்விஷ்ட க்ருத் யாகத்தின் யாஜ்யா மந்திரமாகும். 15, 16 மந்திரங்கள், ग्रहमेधीयेष्टியின் இரண்டு ஆஜ்யபாகத்தின் புரோனுவாக்யா மந்திரங்கள், 17வது மந்திரம் ग्रहमेधीयेष्टியின் ப்ரதான யாகத் தின் புரோனுவாக்யா மந்திரமாகும். 18, 19வது மந்திரங்கள் மேற்படி யாகத்தின் யாஜ்யா மந்திரங்களாகும்.

20, 21-வது மந்திரங்கள் ஸ்விஷ்டக்ருத் யாகத்தின் புரோனுவாக்யா யாஜ்யா மந்திரங் களாகும். 22, 23-வது மந்திரங்கள் श्रीष्टियின் ப்ரதான யாகத்தின் புரோனுவாக்யா யஜ்யா மந்திரங்களாகும். 24, 25-வது மந்திரங்கள் ஷை யாகத்திற்கு (விகல்பமாக) புரோனுவாக்யா, யாஜ்யா மந்திரங்களாகும். 26, 27-வது மந்திரங் கள் ஸ்விஷ்டக்ருத் யாகத்தின் புரோனுவாக்யா யாஜ்யா மந்திரங்களாகும். பிறகு ऐन्द्राग्न पुरोडाश யாகம், ऐन्द्रवरु யாகம், वैश्वकर्मणपुरोडाश யாகம் இந்த மூன் று யாகங்களுக்குரிய புரோனுவாக்யா யாஜ்யா மந்திரங்களின் ஆரம்பங்கள் (प्रतीक) கொடுக்கப்பட்டுள்ளன. ஷை மந்திரங்களில் ஸம் பந்தப்பட்ட தேவதைகளின் மஹிமை விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது.

நான்காவது ப்ரச்னம்

अनुवाकः १—रश्मिरश्मि

இந்த அனுவாகத்தில் ஐந்தாவது அடுக்கில் வைக்க வேண்டிய இஷ்டகைகளுக்குரிய மந்திரங்கள் உள்ளன. அவை ஸ்தோமபாகம் எனப்படுபவை. மொத்தம் 31 மந்திரங்கள் உள்ளன. முதல் ஏழு மந்திரங்களால் கிழக்கே 7 இஷ்டகைகளை வைக்கவும். அடுத்த 21 மந்திரங்களால் முறையே தெற்கே ஏழு, மேற்கே ஏழு, வடக்கே ஏழு இஷ்டகைகளை வைக்கவும். கடைசி மூன்று மந்திரங்களால் நடுவில் 3 இஷ்டகைகளை வைக்கவும்.

ஹே இஷ்டகையே, நீ ஆதித்ய ரூபமாக இருக்கிறாய். வாஸஸ்தானம் ஸித்திப்பதற்காக உன்னை வைக்கிறேன், வாஸஸ்தலத்தை ஸம்பாதித்துக் கொடுப்பாயாக என்பது முதல் மந்திரத்தின் பொருள். 2. வேகமான நடை 3. விஹித கர்மானுஷ்டானம். 4. அனுகூலமான நடை 5. ஆகாயத்திற்கும் பூமிக்கும் இடைவெளி ப்ரதேசம் 6. ஸ்வர்கம் 7. மேகம் உஷ: காலம் போன்ற வடிவில் இருக்கிறதாக இஷ்டகைகளை வைக்கவும்.

மூவ்வுலகம், தர்மம், மழை முதலியவைகளை அடையச் செய்வாயாக என்பது பொருள். அடுத்த ஏழு மந்திரங்கள் ஸாயம் ஸாந்தியா

காலம். வஸுக்களால் விரும்பப்படுவதாக இருக்கிறாய். வஸுக்களை திருப்திபடுத்து. ருத்ரர் ஆதித்யர், பித்ருக்கள், பிரஜைகள் இவர்களை திருப்திபடுத்து எனக் கூறுகின்றன. அதற்கடுத்த ஏழு மந்திரங்கள் ஓஷதிகள், இந்திரன், ப்ராணன், அபானன், கண்கள், காது முதலியவைகளை திருப்திப்படுத்து எனக் கூறுகின்றன. கடைசி ஏழு மந்திரங்கள் प्रवृत् முதலியன தம்பதிகளின் சேர்க்கை முதல், ஸந்ததி உண்டாகும் வரையிலுள்ள கார்யங்களைக் குறிக்கின்றன. அந்த ரூபமாக தியானித்து இஷ்டகைகளை வைக்கவும். கடைசி மூன்று மந்திரங்கள் செல்வம், தனப்ராப்தி, அதை வ்ருத்தி செய்தல், அந்த செல்வத்தால் வாழுதல் என்ற பொருளைக் கூறுகின்றன. அந்த ரூபமாக பாவிக்க வேண்டும் எனக் கருத்து.

अनुवाक: २—राज्ञ्यसि

இந்த அனுவாகத்தில் नाकसत् என்ற இஷ்டகைகளை வைக்கும் மந்திரங்கள் உள்ளன. இதில் 5 மந்திரங்கள் உள்ளன. இவைகளைச் சொல்லி நான்கு திசைகளிலும் ஒவ்வொன்று நடுவில் ஒன்று என இஷ்டகைகளை வைக்கவும். அந்தந்ததிக் ரூபமாக இஷ்டகையை பாவிக்கவும். வஸு, ருத்ரர், ஆதித்யர்கள், விச்வேதேவர்கள் மருத்துக்கள், ப்ருஹஸ்பதி இவர்கள் அவைகளுக்கு அதி

பதிகள். அக்னி, இந்திரன், ஸோமன், வருணன், ப்ருஹஸ்பதி இவ்வைவரும் எதிரிகளை அந்த திசைகளில் விரட்டுபவர்கள். ஐந்து விதமாக ஸ்தோமங்களும் சஸ்திரங்களும் (ருக்குகள்) ஸாம கானங்கள் இவைகளைச் சேர்ந்தவைகளாக கூறப் பட்டுள்ளன. எல்லா தேவர்களும் ரிஷிகளும் இந்த யக்ஞ பூமிக்கும் வரட்டும், யஜமானனை ஸ்வர்கலோகத்தை அடையச் செய்யட்டும் என்பது பொருள்.

अनुवाकः ३—अयं पुरो हरिकेशः

(இதுவும் உதக சாந்தியில் சொல்லுகிறோம்) இதில் 'ஸோ' சோடா என்ற இஷ்டகைகளை வைப்பதற்குரிய மந்திரங்கள் உள்ளன. ஐந்து மந்திரங்களைச் சொல்லி நான்கு திசையிலும் நடுவிலும் ஒவ்வொரு இஷ்டகையை வைக்க வும், கிழக்கு திசைக்கு அதிபதியாக அக்னி இருக்கிறார். அவருக்கு ரதக்ருத்னர், ரதௌஜன். இருவரும் சத்ருவை நோக்கி ஸேனையை அழைத் துச் செல்பவர். கிராமத்திற்கு அழைத்துச் செல் பவர். இரு அப்ஸரஸ் ஸ்திரீகள் பரிசாரிகைகள் இருவித ஆயுதங்கள். இப்படிப்பட்ட அக்னி ரூபமாக இருக்கிற இஷ்டகையை வைக்கிறேன். அக்னி, பரிசாரகர்கள் எல்லோருக்கும் நமஸ்காரம். அவர்கள் எங்களை சுகமாக வைக்கட்டும். நாங்கள் எவர்களை த்வேஷிக்கிறோமோ அவர்களையும்,

எவர்கள் எங்களை வெறுக்கிறார்களோ அவர்களை யும் உங்களது திறந்த வாயினுள் திணிக்கிறேன் என்பது முதல் மந்திரத்தின் பொருள். இது போலவே, மீதி நான்கிற்கும். विश्वकर्मा विश्वव्यचः संयद्वसुः अवग्रिवसुः என்ற நான்கு பேரும் அதிபதிகள், முன்போலவே, பரிசாரகர்கள், பரிசாரிகைகள் ஆயுத விசேஷங்களும் இவர்களுக்கும் உண்டு. அவர்களுக்கு நமஸ்காரம் முதலியன முதலில் சொன்னபடியே பொருள் கொள்க.

ஆறாவது மந்திரத்தால் ஸ்வயமாத்ருண்ணா என்ற இஷ்டகையை தொடவும், குதிரையை முகர்ச் செய்யவும். பிறகு அடுத்த மந்திரம் 7வது, परमेष्ठीत्वा....என்பதைச் சொல்லி இடஷ் கையை வைக்கவும். 8வது மந்திரத்தால் विकर्णी என்ற இஷ்டகையை இடது தோள் பாகத்தில் வைக்கவும். இதில் அக்னியின் மஹிமை சொல் லப்படுகிறது.

अनुवाकः ४—अग्निर्मूर्धा

இந்த அனுவாகத்தில் छन्दः சந்தஸ்களின் பெயர் கொண்ட இஷ்டகைகளை வைப்பதற்குரிய மந்திரங்கள் கூறப்பட்டுள்ளன.

காயத்ரீ சந்தஸ் ரூபமாக 3 மந்திரங்களை சொல்லி 3 இஷ்டகைகளை கிழக்கே வைக்கவும். त्रिष्टुप् என்ற 3 இஷ்டகைகளை அடுத்த மூன்று

மந்திரங்களால் தெற்கே வைக்கவும். जगती என்ற 3 இஷ்டகைகளை அடுத்த மூன்று மந்திரங்களால் மேற்கே வைக்கவும். अनुष्टुप् என்ற மூன்று இஷ்டகைகளை அடுத்த மூன்று மந்திரங்களால் வடக்கே வைக்கவும். बृहती, उष्णिक्, पङ्क्तिः, என்ற இஷ்டகைகளையும் மூன்று மூன்று மந்திரங்களைச் சொல்லி மூன்று மூன்று இஷ்டகைகளாகவும் अक्षरपङ्क्तिः என்ற இஷ்டகை 4 மந்திரங்களைச் சொல்லி நான்கு இஷ்டகைகளையும் இடைவெளியில் வைக்கவும். अतिच्छन्दस् என்ற இஷ்டகையை ஒரு மந்திரத்தைச் சொல்லி நடுவில் வைக்கவும். द्विपदा என்ற மூன்று இஷ்டகைகளை மூன்று மந்திரங்களைச் சொல்லி கடைசியில் வைக்கவும். 29 மந்திரங்கள் உள்ளன. 27 மந்திரங்களில் அக்னி பகவானின் மஹிமையும் இரண்டு மந்திரங்களில் ஸோமனின் பெருமையும் கூறப்படுகின்றன.

अनुवाकः ५—इन्द्राग्निभ्यां त्वा

இதில் 'संयुक' முதலிய இஷ்டகைகளை வைப்பதற்குரிய மந்திரங்கள் உள்ளன. 'इन्द्राग्निभ्यां त्वा सयुजा युनज्मि'' என்ற மந்திரத்தால் 8 सयुज இஷ்டகைகளை வைக்கவும். அடுத்த மந்திரத்தால் 7 கிருத்திகா என்ற இஷ்டகைகளை வைக்கவும். அடுத்த மூன்று மந்திரங்களால் ''மண்டலேஷ்டகா'' என்ற இஷ்டகையை முறையே முதல் சிதியிலும் நடு சிதியிலும் மேல் சிதியிலும் வைக்கவும். முவ்வுலமாக பாவித்து வைக்கவும்.

अनुवाक: ६—बृहस्पतिस्त्वा सादयतु

இதில் விச்வஜ்யோதி முதலிய இஷ்டகைகளை வைப்பதற்குரிய மந்திரங்கள் கூறப்பட்டுள்ளன. முதல் மூன்று மந்திரங்களைச் சொல்லி முவ்வுலமாக தியானித்து विश्वज्योतिस् என்ற 3 இஷ்டகைகளை முறையே முதல், நடுவு, மேல் என்ற மூன்று அடுக்குகளில் (चितिகள்) வைக்கவும். இதனால் பிராணிவர்கத்திற்கு ப்ராணன், அபானன் இரண்டும் ஸித்திக்கும். "पुरोवातसनिरसि" என்ற மந்திரத்தால் 5 "वृष्टिसनी" என்ற ஐந்து இஷ்டகைகளை வைக்கவும். அடுத்த மந்திரத்தால் இரண்டு "ஸம்யாநீ" என்ற இஷ்டகைகளை வைக்கவும். அடுத்த 3 மந்திரங்களால் இரண்டு இரண்டு இஷ்டகைகளாக संवानी என்ற இஷ்டகைகளை வைக்கவும். அடுத்த யஜுர் மந்திரங்களால் 8 ஆதித்யேஷ்டகைகளை வைக்கவும். ऋचेत्वा முதலிய மந்திரங்களால் घृतेष्टका என்ற ஐந்து இஷ்டகைகளை வைக்கவும். அடுத்த மந்திரங்களால் यशोदा என்ற 5 இஷ்டகைகளை வைக்கவும். கீர்த்தி, காந்தி முதலியவை பிரார்த்திக்கப்படுகின்றன.

अनुवाक: ७—भूयस्कृदसि

இதில் பூயஸ்கிருத் முதலிய இஷ்டகைகளை வைப்பதற்குரிய மந்திரங்கள் உள்ளன. முதல்

ஐந்து மந்திரங்களால் பூயஸ்கிருத் என்ற ஐந்து இஷ்டகைகளை வைக்கவும். அடுத்த ஐந்து மந்திரங்களால் அக்னி ரூபம் என்ற 5 இஷ்டகைகளை வைக்கவும். पृथिव्यस्त्वा என்ற 5 மந்திரங்களால் "த்ரவிணோதா" என்ற 5 இஷ்டகைகளை வைக்கவும். प्राजं என்ற 5 மந்திரத்தால் ஆயுஷ்ய இஷ்டகைகள் 5 வைக்கவும். அடுத்த மந்திரத்தால் अग्नेर्हृदय: என்ற இஷ்டகையை வைக்கவும். यावा என்ற மந்திரங்களால் 7 ருது ஸம்பந்தமான இஷ்டகைகளை வைக்கவும்.

अनुवाक: ८—अ॒ग्निना॑

இதில் இந்திரதநு என்ற 22 இஷ்டகைகள் வைப்பதற்குரிய மந்திரங்கள் உள்ளன. இந்திரனுடைய மஹிமை இதில் கூறப்படுகிறது. இந்திரனாக பாவித்து இஷ்டகைகளை வைக்கவும்.

अनुवाक: ९—प्र॒जाप॑ति॒र्मन॒सा

இதில் யக்ஞதநு என்ற இஷ்டகைகளை வைப்பதற்குரிய மந்திரங்கள் கூறப்பட்டுள்ளன. மொத்தம் 33 மந்திரங்கள் உள்ளன. ஸங்கல்பம் முதல் முடியும் வரையிலுள்ள ஸோமயாகத்திற்கு யக்ஞபுருஷசரீரம் எனப் பெயர். ஸங்கல்பம் முதல் ஸோம யாகத்தின் கார்யமும் தீக்ஷா முதலி

யன ப்ரஜாபதி, இந்திரன், வருணன், ஸவிதா முதலிய தேவதா ரூபமாகக் கருதப்படுகிறது. அந்தந்த தேவதைகளின் இந்த இஷ்டகைகள் வைக்கப்படுகின்றன.

अनुवाक: १०—कृत्तिकानक्षत्रं

இதில் நக்ஷத்ரேஷ்டகைகளை வைப்பதற்குரிய மந்திரங்கள் கூறப்பட்டுள்ளன. கிருத்திகா நக்ஷத்திரத்திற்கு அக்னி தேவதை. இவ்வாறு 27 நக்ஷத்திரங்களுக்குரிய தேவதைகள் கூறப் பட்டுள்ளன. 27 இஷ்டகைகளை 27 தேவதா ரூப மாக பாவித்து, மந்திரங்களைச் சொல்லி வைக்க வும். கடைசியில் பௌர்ணமீ என்ற இஷ்ட கையை வைக்கவும். ஒன்றின் மேல் ஒன்று படாமல் இஷ்டகைகளை வைக்கவும். இதனால் நல்ல மழை பெய்யும்.

நக்ஷத்திரங்களுக்குரிய தேவதைகள் மந்திரங் களில் உள்ளபடி கீழே கொடுக்கப்படுகின்றன.

कृत्तिकानक्षत्र = அக்னி தேவதை
रोहिणी = ப்ரஜாபதி தேவதை
मिருகசீர்ஷம் = ஸோமன் தேவதை
ஆர்த்ரா = ருத்ரன் தேவதை
புனர்வஸு = அதிதி தேவதை

புஷ்யம்=ப்ருஹஸ்பதி தேவதை

ஆச்லேஷம்=ஸர்ப்பங்கள் தேவதை

மகம்=பித்ருக்கள் தேவதை

பூர்வ பல்குனி=அர்யமா தேவதை

உத்திர பல்குனி=பகன் தேவதை

ஹஸ்தம்=ஸவிதா தேவதை

சித்திரை=இந்திரன் தேவதை

ஸ்வாதி=வாயு தேவதை

விசாகம்=இந்த்ராக்னிகள் தேவதை

அனுராதம்=மித்ரன் தேவதை

ஜேஷ்டை=இந்திரன் தேவதை

மூலம்=பித்ருக்கள் தேவதை

பூர்வாஷாடம்=ஜலதேவதைகள்

உத்திராஷாடம்=விச்வேதேவர்கள் தேவதை

ச்ரவணம்=விஷ்ணு தேவதை

ச்ரவிஷ்டம்=அஷ்டவஸுக்கள் தேவதை

சதயம்=இந்திரன் தேவதை

பூர்வப்ரோஷ்டபதா=அஜ ஏகபாத் தேவதை

உத்திரப்ரோஷ்டபதா=அஹிர்புத்னிய ,,

ரேவதி=பூஷா தேவதை

அஸ்வினீ=அஸ்வினீ தேவர்கள்

பரணி=யமன் தேவதை.

अनुवाकः ११—मधुञ्च

இந்த அனுவாகத்தில் வஸந்தாதி ருது ஸம்பந்தமான ருதவ்யா என்ற இஷ்டகைகளுக் குரிய மந்திரங்கள் உள்ளன.

मधुः, माधवः = சித்திரை, வைகாசி மாதங்கள் = வஸந்த ருது.

शुक्रः शुचिः = ஆனி, ஆடி மாதங்கள் = க்ரீஷ்ம ருது.

नभः नभस्यः = ஆவணி, புரட்டாசி = வர்ஷ ருது.

इषः ऊर्जः = ஐப்பசி, கார்த்திகை = சரத் ருது.

सहः, सहस्यः = மார்கழி, தை = ஹேமந்த ருது.

तपः तपस्यः = மாசி, பங்குனி = சிசிர ருது.

முதல் மந்திரத்தால் இரண்டு இஷ்டகைகளை முதல் அடுக்கில் வைக்கவும். இரண்டாவது மந்திரத்தால் இரண்டு இஷ்டகைகளை இரண்டாவது அடுக்கில் வைக்கவும். மூன்றுவது நான்காவது மந்திரத்தால், இரண்டு இஷ்டகைகளை மூன்றுவது அடுக்கில் வைக்கவும். ஐந்தாவது மந்திரத்தால் நான்காவது அடுக்கில் வைக்கவும். ஆறுவது மந்திரத்தால் ஐந்தாவது அடுக்கில் வைக்கவும். அடுத்த ஐந்து மந்திரங்களால் அக்னி முதலியவர்களை தேவதையாகக் கொண்ட

ஐந்து இஷ்டகைகளை ஆறாவது சிதியில் வைக்க வும். யஜமானனுக்கு முக்யத்வம் கிடைக்கும். संयत् என்பன இஷ்டகைகளின் பெயர்கள்.

सहस्रस्य प्रमा असि...सहस्रायत्वा=என்ற 5 மந்திரங் களால் சிதியின் மீது நான்கு திசைகளிலும் மேல் நோக்கியும் ஆயிரம் தங்கத் துண்டுகளால் ப்ரோக்ஷணம் செய்யவும். इमामे अग्न इष्टका: धेनव: सन्तु लोके=என்ற மந்திரத்தைச் சொல்லி இஷ்டகை களைப் பார்க்கவும். இஷ்டகைகள் யஜமானனுக்கு காமதேனுவாக ஆகி விரும்பியதெல்லாம் குறை வில்லாமல் கொடுக்கட்டும் என்பது பொருள். ஸ்வர்க்கத்தை அடைவான் எனக் கருத்து.

இத்துடன் 5 (சிதிகள்) அடுக்குகள் வைக்கப் பட்டதின் மூலம் சிதி பூர்ணமாகிவிட்டது. இது ஸோம யாகத்திற்கு தகுதியுள்ளதாக ஆயிற்று. ஆயினும் ருத்ர ஹோமமும் வஸோர்தாரா ஹோம மும் செய்த பிறகுதான் ஸோமயாக சம்பந்தமான கார்யங்கள் செய்ய வேண்டும்.

अनुवाक: १२—समिद्दिशा

இதில் அச்வமேத யாகத்தில் கூறப்பட் டுள்ள सर्वपृष्ठ என்கிற பத்து ஹவிஸ்ஸுகளுக் குரிய புரோனுவாக்யா யாஜ்யா மந்திரங்கள் உள்ளன. முதல் இரண்டு மந்திரங்கள் அக்னி தேவதை, புரோடாசம் ஹவிஸ் என்ற யாகத்தின்

புரோனுவாக்யா யாஜ்யா மந்திரங்கள். 3, 4வது மந்திரங்கள் இந்திரன் தேவதை புரோடாசம் ஹவிஸ் என்ற யாகத்தின் புரோனுவாக்யா யாஜ்யா மந்திரங்கள். 5, 6வது மந்திரங்கள் விச்வேதேவர் தேவதைகள். புரோடாசம் ஹவிஸ் என்ற யாகத்தின் புரோனுவாக்யா யாஜ்யா மந்திரங்கள். 7, 8வது மந்திரங்கள் மைத்ராவருண யாகத்தின் புரோனுவாக்யா யாஜ்யா மந்திரங்கள். 9, 10வது மந்திரங்கள் ப்ருஹஸ்பதி தேவதை சரு ஹவிஸ் என்ற யாகத்தின் புரோனுவாக்யா யாஜ்யா மந்திரங்கள். 11, 12வது மந்திரங்கள் - ஸவிதா தேவதை புரோடாசம் ஹவிஸ் என்ற யாகத்தின் புரோனுவாக்யா யாஜ்யா மந்திரங்கள். 13, 14வது மந்திரங்கள் அதிதி தேவதை சரு ஹவிஸ் என்ற யாகத்தின் புரோனுவாக்யா யாஜ்யா மந்திரங்கள். பிறகு வைச்வானர யாகத்தின் புரோனுவாக்யா யாஜ்யா மந்திரங்களின் ஆரம்பம் சொல்லப்பட்டுள்ளது. பிறகு [illegible]யின் புரோனுவாக்யா யாஜ்யா மந்திரங்களின் ஆரம்பம் கூறப்பட்டுள்ளது. ப்ரஹ்மா தேவதை புரோடாசம் ஹவிஸ் என்ற யாகத்தின் புரோனுவாக்யா யாஜ்யா மந்திரத்தின் ஆரம்பம் கூறப்பட்டுள்ளது.

ஸ்ரீருத்ர மஹிமை

இந்த 4வது காண்டத்தில் ருத்ர ப்ரச்னம் அக்னி சயனத்திற்கு ஹோம மந்திரமாக உப

யோகப்படுகிறது. இந்த ருத்ரம் ஸ்மார்த்தத்தில் பல வைதிக கர்மாக்களில் உபயோகப்படுகிறது. இதனுல் அதனுடைய முக்யத்வம் தெரியவருகிறது. பெருவாரியாக எந்த ஜபம் செய்ய வேண்டியிருந்தாலும் ருத்ரம், சமகம் அதில் பங்கு பெருகிறது. ருத்ரம் வேத பாகத்தில் நடு மத்யத்தில் அமைந்து மத்ய மணியாக விளங்குகிறது. இதனுடைய பெருமை ச்ருதி, ஸ்ம்ருதி, இதிஹாஸ புராணங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது. ஜாபால உபநிஷத்தில் ருத்ர ஜபம் மோக்ஷத்திற்கு ஸாதனம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. एतैः ह वा अमृतो भवति நூற்றுக் கணக்காண ருத்ரருடைய நாமாக்களை சொல்லுவதால் சாச்வதமான பரப்ரம்மஸ்வரூபத்தை அடைகிறான். இதற்கு சத ருத்ரீயம் என்று மற்றொரு பெயர் சதம் என்பதற்கு சாதாரணமாக 100 என்று பொருள். இங்கு अनन्त கணக்கற்றது என்று சொல்லப்படுகிறது. இந்த ருத்ர ப்ரச்னத்தில் सहस्राणि सहस्रशः என்று பூமியில் ஆயிரக்கணக்கான ருத்ரர்கள் இருப்பதாக கூறப்படுகிறது. ஸௌதஸம்ஹிதையில் ருத்ர ஜபம் செய்வதால் எல்லா பாபங்களும் விலகுகிறது என்று சொல்லப்பட்டு இருக்கிறது. கூர்ம புராணத்தில் இதனுடைய பெருமையை பரமேச்வரனே சொல்லுகிறார்—இவைகள் என்னுடைய ரஹஸ்யமான பெயர்கள் என்று சொல்லியிருக்கிறார்.

வேதத்தில் சதருத்ரீயம் உத்தமம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் பரமேச்வரர் மேலும் கூறியதாவது ஆகார நியமம், ப்ரம்ம சரிய நியமத்துடன் மனதை பரமேச்வரனிடத்தில் நிலை நிருத்தி யஜுஸ்ஸுகளுக்குள் ஸார பூதமா யும், மீதி வேதங்களைக்காட்டிலும் உத்தமமானது மான இந்த ருத்ரத்தை மரண பர்யந்தம் ஜபிக்கிர வன் மிகவும் மேலான நற்கதியை அடைகிறான். ச்ரத்தையில்லாமல் ஜபித்தோ, ஹோமம் செய் தாலோ பலன் அற்றதாக ஆகிவிடும் என்று ப்ரம்ம புராணத்தில் உத்தர கண்டத்தில் சொல் பட்டு இருகிறது. உபாஸனைகளால் எவ்வாறு அவிமுக்த உபாஸனம் சிறந்ததோ, ஆச்ரமத்திற் குள் ஸந்யாஸ ஆச்ரமம் சிறந்ததோ, அதுபோல் ஜபம் செய்யக்கூடிய மந்தரங்களுள் ருத்ர ப்ரச் னம் மிகச் சிறந்தது. ச்ரத்தையோடு செய்யும் ருத்ர ஜபம் அன்றன்றுடும் செய்யும் பாபங்கள் விலகும். வேதம் முழுவதும் ஒருதரம் பாராயணம் செய்தால் அந்த நாள் அவனை சுத்தப்படுத்து கிறது. ருத்ர ஏகாதசனி என்ற 11 தடவை ருத்ரம் சொல்லுவதால் அந்த க்ஷணத்திலேயே சொல்லு பவன் பரிசுத்தமாகிறான். ச்ரத்தையுடனும், பக்தி யுடனும், மனதை நிலை நிருத்தி பதங்களின் அர்த்தத்தை த்யானம் செய்து கொண்டு ருத்ரத்தை ஒருதரம் ஜபித்தால் பூமண்டலம் முழு வதையும் தானம் செய்த பலனை விட அதிக பலன் ஏற்படும் என்று சிவ புராணத்தில் கூறப்பட்டிருக்

கிறது. ஒரு தடவை ருத்ர ஜபத்திற்கே இவ் வளவு பலன் உண்டு என்றால் 11 தடவை சொல் லும் ருத்ர ஏகாதசினி என்ற கர்மாவின் பலன் அளவிட முடியாதது. ருத்ர ஏகாதசினி போல் 11 மடங்கு ருத்ர ஜபம் செய்வது மஹாருத்ரம் என்று சொல்லப்படுகிறது. இதனால் பல வித மான வ்யாதிகளோ, தேசத்திற்கு உள்ள கஷ்ட நஷ்டங்கள் விலகும். அதிருத்ரம் என்பது 11 மஹாருத்ரம் கொண்டது, அதற்கு பலன் அள வற்றது.

ஜபங்களுக்கு அங்கன்யாஸம், கரண்யாஸம் என்பது முக்யமாக அங்கமாகும். ஆகையால் லகுன்யாஸம் என்று சொல்லப்படுகிற அங்கன் யாஸ கரண்யாஸத்தோடு நித்ய பூஜையில் செய்வது வழக்கம். விசேஷ காலங்களில் இதுவே விரிவாக மஹன்யாஸம் என்ற பெயரில் செய் கிறோம். அதற்காக விசேஷ பலன் உண்டு.

ஸந்யாஸிகளும் கூட ருத்ர ஜபம் செய்யலாம் என்று விதி இருக்கிறது. ஆதலால் இது மோக்ஷ ஸாதனம் என்று தெளிவாக தெரிகிறது.

ஐந்தாவது ப்ரச்னம் पञ्चम प्रश्न

முதல் நான்கு ப்ரச்னங்களில் 5 அடுக்கு கள் கொண்ட செங்கற்களால் ஆன இடம் (ஆஹவனீயாக்னியை வைக்கும் இடம்) தயாரா யிற்று. இதற்கு ஸஞ்சிதமான அக்னி எனப் பெயர். पञ्चाग्नयः முழுவதையும் சொல்லி ஹோமம் செய்ய வேண்டும். கருடாகாரமான சிதியின்

இடது இறக்கையின் கடைசி இஷ்டகையின் மீது ஆட்டின் பாலினால் எருக்கு இலையை ஜுஹுவாக (ஹோமம் செய்யும் கருவி) வைத்துக் கொண்டு नमस्ते முதல் नमस्तक्षभ्यः வரை மந்திரத்தை சொல்லி அத்வர்யு தனது முழங்காலுக்கு சமமான உயரத்தில் ஜுஹுவை வைத்துக் கொண்டு, முதல் ஹோமத்தை செய்யவும். रथकारेभ्यः முதல் नमः स्वायुधाय வரை சொல்லி ஜுஹுவை இடுப்புக்கு சமமான உயரத்தில் வைத்துக் கொண்டு இரண்டாவது ஹோமத்தை செய்யவும். सुषन्वने च முதல் मुखाकृधि வரையில் சொல்லி ஜுஹுவை முகத்துக்கு சமமாக வைத்துக் கொண்டு மூன்றாவது ஹோமத்தை செய்யவும். सहस्राणि सहस्रशः नमोरुद्रेभ्यः என்பதற்கு முன்பதம் வரையில் சொல்லி 10 ஹோமங்களைச் செய்யவும். பிறகு नमोरुद्रेभ्यः ये पृथिव्या என்ற மந்திரத்தால் ஜுஹுவை முழங்காலளவில் வைத்துக் கொண்டு ஹோமம் செய்யவும். नमोरुद्रेभ्यः येऽन्तरिक्षे என்ற மந்திரத்தால் ஜுஹுவை இடுப்பினளவில் வைத்துக் கொண்டு ஹோமம் செய்யவும். नमोरुदेभ्यो येदिवि என்ற மந்திரத்தால் முகத்திற்குச் சமமாக ஜுஹுவை வைத்துக் கொண்டு ஹோமம் செய்யவும். யஜமானனையும் சொல்ல வைக்கவும். கடைசி மூன்று ஹோமங்களை இறங்கு வரிசையில் மறுபடியும் செய்யவும். எருக்கு இலையை எறிந்து விடவும்.

ருத்ரஹோமம் முற்றிற்று.

ருத்ர ப்ரச்ன மந்திரங்களின் பொருள் கொடுக்கப்படுகிறது.

१. नमस्ते रुद्र—नमः

ஹே ருத்ரதேவனே, உனது கோபத்திற்கு நமஸ்காரம். மேலும் உனது பாணத்திற்கு நமஸ் காரம். அவ்வாறு உனது வில்லுக்கு நமஸ்காரம். மேலும் வில், அம்புகளுடன் கூடிய உனது கை களுக்கு நமஸ்காரம்.

२. यात इषुः—मृडय

ஹே ருத்ரனே, உனது பாணம், வில், அம்பருத்தூணி மூன்றும் சாந்தமாக இருந்தது. பக்தர்கள் விஷயத்தில் மே மூன்றையும் உப யோகப் படுத்தாமலிருப்பதுதான் சாந்தம் எனப் படுகிறது. அந்த மூன்றுலும் ஹே ருத்ரனே, எங்களை சுகப்படுத்துவாயாக.

३. यातेरुद्र—अभिचाकशीहि

ஹே ருத்ரனே, உன்னுடைய பக்தர்களுக்கு அனுக்ரஹம் செய்யும், ஹிம்ஸிக்காததும், ஹிம்ஸை ரூபமான பாபத்தை ப்ரகாசப்படுத்தாது மான எந்த சரீரம் இருக்கிறதோ, ஹே கைலாச மலையில் அமர்ந்து ப்ராணிகளுக்கு சுகத்தை யளிக் கும் ருத்ர தேவனே, உனது சாந்தமான அந்த சரீரத்தோடு எனது முன்பு தோன்றுவாயாக.

४. यामिषुं—जगत्

சாந்தமூர்த்தியான ருத்ரதேவனே, எதிரிகளின் மீது விடுவதற்கு எந்த பாணத்தை கையில் வைத்திருக்கிறுயோ கைலாசமலையை பாதுகாக்கின்ற சிவனே, அந்த பாணத்தை சாந்தமானதாகச் செய். எங்களைச் சேர்ந்த மனிதர்களையும் எங்கள் வீட்டிலுள்ள பசு முதலியவைகளையும் ஹிம்ஸிக்காதே.

५. शिवेन—अस्त्

கைலாசத்தில் வசிக்கும் சிவனே, உம்மை அடைவதற்காக மங்களகரமான ஸ்தோத்ரங்களால் நாங்கள் ப்ரார்த்திக்கிறேம். எவ்வாறு செய்தால் எங்களது ஜகத் முழுவதும் அதாவது மனிதன், மாடுகள் போன்ற ஜங்கம் முழுவதும் ரோகமில்லாமலும் ஸௌமனஸ்யத்தோடு இருக்குமோ அவ்வாறு செய்வீராக.

६. अव्यवोचत्—यातुधान्यः

எந்த ருத்ரதேவன் எல்லோருடைய முன்னிலையில் என்னை நோக்கி இவன் எல்லோரைக் காட்டிலும் மேலானவன் என்று சக்தி உள்ளவரோ, அப்படிப்பட்ட ருத்ரதேவன் என்னை எல்லோரிலும் மேலானவன் என்று சொல்லட்டும். தேவர்களுள் முக்கியமானவர், எல்லா தேவர்களையும் காப்பாற்

றும் சக்தி உடையவர், இவரை த்யானம் செய்த மாத்திரத்திலேயே எல்லா பாம்பு, புலி முதலி யவைகளையும், எல்லா ராக்ஷஸர்களையும் அழித்து எல்லாவிதமான ரோகத்தையும் போக்கவல்ல சிறந்த வைத்யருமாவர்.

७. असौय—ईमहे

எந்த ருத்ரன் ஸூர்ய மண்டலத்தின் நடுவில் ஆதித்யரூபமாக இருக்கிறாரோ, அவர் உதய காலத்தில் நல்ல சிவப்பாயும், சிறிது நேரத்திற்கு பிறகு சிறிது சிவப்பு நிறமாயும், மேலும் பிறகு செம்பட்டை நிறமாகவும், பல நிறமுள்ளவராக இருந்து கொண்டு, இருளைப் போக்குவதால் மிக வும் மங்களகரமானவர். சூரியனுடைய கிரண வடிவில் எந்த ருத்ரர்கள் பூமியைச் சுற்றிலும் எல்லா திக்குகளிலும் ஆச்ரயித்து இருக்கிறார் களோ அவர்கள் ஆயிரக்கணக்கானவர்கள். ஆதித்யரின் கிரண வடிவிலுள்ள அவர்களின் கடுந்தாபமாகிற கோபத்தை பக்தியுடன் நமஸ் காரத்தின் மூலம் அகற்றுகிறோம்.

८. असौ.....नः

விஷத்தை தரித்ததினால் நீல நிறமான கழுத்தையுடையவரும், விசேஷமாக சிவப்பு நிற முள்ளவருமான ருத்ரர் ஆதித்ய மண்டலத்தின் நடுவில் இருந்து கொண்டு உதயம் அஸ்தமனம்

இரண்டு காரியங்களை செய்வதில் ஈடுபடுகிறார். அப்படிப்பட்ட சூரிய மண்டலத்திலுள்ள ருத்ர மூர்த்தியை மாடு மேய்க்கும் பாலர்கள் கண்டனர். தண்ணீர் கொண்டுவரும் பெண்மணிகளும் கண்டனர். இவரை உலகத்திலுள்ள எல்லா பிராணிகளும் கண்டனர். கைலாசத்திலுள்ள சிவபிரானை வேத சாஸ்திரம் அறிந்த வல்லுநர்களே காணமுடியும். ஆனால் சூரியமண்டலத்திலுள்ள ருத்ரனை எல்லாரும் கண்டனர். எல்லாராலும் பார்க்கப்பட்ட அந்த ருத்ரமூர்த்தி நம் எல்லோரையும் சுகமாக இருக்கச் செய்யட்டும்.

९. नमो अस्तु.....नमः

முன்சொல்லியபடி நீல கழுத்தையுடையவரே, இந்திர வடிவில் இருந்துகொண்டு 1000 கண்கள் உடையவராகவும், மழைக்கு அதிபதியான பர்ஜன்ய தேவதையாகவும் இருந்து கொண்டு, மழை பொழிபவராகவும் இருக்கிறாரோ, அந்த ருத்ரமூர்த்திக்கு நமஸ்காரம். மேலும் இவருடைய வெலைக்காரர்களான ப்ராணிகள் எவர்களோ அவர்களையும் நான் நமஸ்கரிக்கிறேன்.

१०. प्रमुञ्च.....वप

மஹாமஹிமையுடைய ருத்ரதேவனே, உனது வில்லின் இரு முனையிலும் கட்டப்பட்டுள்ள நாண்கயிற்றை அவிழித்து விடு, மேலும் உனது கையிலுள்ள பாணங்களையும் கீழேபோட்டுவிடு.

११. अयत्नत्य.....भव

இந்திரன் வடிவிலுள்ள 1000 கண்களை யுடைய ருத்ரனே, நூற்றுக் கணக்கான அம்பாரத் தூணிகளையுடைய ருத்ரனே, நீ வில்லின் நாண்க யிற்றை அவிழ்த்துவிட்டு பாணங்களின் கூர்மை யான நுனி பாகங்காகளை அம்பராத்தூணியில் கீழ் நோக்கியிருக்கும்படி வைத்து மழுங்கியதாகச் செய்து எங்களிடத்தில் அனுக்ரஹம் செய்பவராக இருப்பீராக.

१२. विज्यं.....निषङ्गधिः

ஜடாதாரியான சிவபிரானுடைய வில் நாணில் லாததாக இருக்கட்டும். மேலும் அம்பராத்தூளை யும் பாணத்தின் கூர்மையான பாகம் மேல் நோக்கியதாக இல்லாமல் இருக்கட்டும். இவ ருடைய பாணங்களும் ஹிம்ஸிக்கும் சத்தியற்ற தாக இருக்கட்டும். பாணத்தின் ஆதாரஸ்தான மும் கத்தியின் ஆதாரஸ்தானமும், அவைகளுக்கு வைப்பதற்கு இருப்பிடமாக மட்டும் இருக்கட்டும். கத்தியை உறுவுதற்கோ பாணத்தை இழுத்து விடுவதற்கோ ஆதாரமாக இருக்கவேண்டாம்.

१३. यातेहेतिः.....परिभुज

ஹே விசேஷமாக விரும்பியதை வாரிவழங் கும் வள்ளலே, எந்த உனது கத்தி, வாள் முதலிய

ஆயுதம் உனது கையில் வில் இருந்ததோ, உபத்ரவம் செய்யாத அந்த ஆயுதத்தாலும், வில்லாலும் எங்களை எல்லா உபத்ரவங்களிலிருந்தும் காப்பாற்றுவாயாக.

१४. नमस्ते अस्तु.....धन्वने

ஹே ருத்ரதேவனே, ஸ்வபாவத்தில் பிறரை ஹிம்ஸித்து அடக்கக்கூடிய சக்தி உள்ளது. பாணத்தை தொடுக்காததினால் ஹிம்ஸிக்காதது மான பாணமாகிய ஆயுதத்திற்கு நமஸ்காரம், மேலும் உனது இருகைகளுக்கும், வில்லுக்கும் நமஸ்காரம்.

१५. परिते.....तं

ஹே ருத்ரதேவனே, உனது வில்லில் பூட்டப் பட்ட பாணம் எங்களை தனக்கு விலக்காக ஆக்காமல் இருந்து காக்கட்டும், மேலும், உனது அம்பராத்தூணியை எங்களைக் காட்டிலும் வெகு தூரத்தில் வைப்பாயாக.

अनुवाक:—२

नमो हिरण्य बाहवे.....सत्वनामतये नम:

பரமேச்வரனுடைய லீலா சரீரங்கள் விளக்கப் படுகின்றன,

नमो हिरण्य बाहवे

தங்கமயமான கைகளையுடைய ருத்ரனுக்கு நமஸ்காரம், எல்லாவிதமான சேனைகளுக்கும் தலைவனுகவும், எல்லா திக்குகளுக்கும் அதிபதியுமான ருத்ர தேவனுக்கு நமஸ்காரம்.

नमो वृक्षेभ्यः.....नमः

பசுமையான இலையையுடைய மரங்கள் வடிவமான ருத்ரர்களுக்கு நமஸ்காரம். எல்லாப் பிராணிகளுக்கும் தலைவரான ருத்ரனுக்கு நமஸ்காரம்.

नमस्सस्पिञ्जराय.....नमः

இளம்புல்போல், மஞ்சள், சிவப்பு கலந்த நிறமுள்ளவரும் நல்ல காந்தியுள்ளவருமான ருத்ரனுக்கு நமஸ்காரம். அர்சிராதி மார்க்கம் தூமாதி மார்க்கம் போன்ற எல்லா மார்க்கங்களுக்கு தலைவரான ருத்ரனுக்கு நமஸ்காரம்.

नमो वभ्लुशाय.....नमः

விருஷபவாஹனரான ருத்ரனுக்கு நமஸ்காரம். எதிரிகளை விசேஷமாகக் கொல்பவருக்கு நமஸ்காரம். (உணவு சாமான்) அன்னங்களுக்கு ரக்ஷகரான ருத்ரனுக்கு நமஸ்காரம்.

नमो हरिकेशाय.....नमः

கருமையான கேசங்களையுடையவரும், மங்களமாக இருப்பதற்காக உபவீதியாக இருப்பவருமான ருத்ரனுக்கு நமஸ்காரம். எல்லா நற்குணம் பொருந்திய புருஷர்களுக்கு தலைவனான ருத்ரனுக்கு நமஸ்காரம்.

नमो भवस्य.....नमः

ஸம்ஸாரபந்தத்தை அறுப்பவரான ருத்ரனுக்கு நமஸ்காரம். உலகின் தலைவருக்கு (ரக்ஷகருக்கு) நமஸ்காரம்.

नमो रुद्राय

நானேற்றப்பட்ட வில்லின் மூலம் காக்கின்ற ருத்ரனுக்கு நமஸ்காரம். எல்லா க்ஷேத்ரங்களுக்கு ரக்ஷகரான ருத்ரனுக்கு நமஸ்காரம்.

नमः सूताय.....नमः

ஸாரதியாயும், வைரிகளால் கொல்லப்பட முடியாதவருமான ருத்ரனுக்கு நமஸ்காரம். வனங்களைக் காப்பாற்றும் ருத்ரனுக்கு நமஸ்காரம்.

नमो रोहिताय.....नमः

சிவப்பு நிறமுள்ளவரும், எதையும் செய்ய வல்லவருமான ருத்ரனுக்கு நமஸ்காரம். வ்ருக்ஷங்களை ரக்ஷிக்கின்ற ருத்ரனுக்கு நமஸ்காரம்.

नमो मन्त्रिणे

அரசனுக்கு மந்திராலோசனை அளிக்கவல்ல வரும், வணிகர் குலத்தலைவருமான ருத்ரனுக்கு நமஸ்காரம், புதர்களை காக்கும் தெய்வமான ருத்ரனுக்கு நமஸ்காரம்.

नमो भुवन्तये

உலகத்தை விஸ்தாரமாகச் செய்பவரும் செல்வத்தை உண்டுபண்ணுபவருமான ருத்ரனுக்கு நமஸ்காரம். கிராமங்கள், காடுகள் இவைகளில் உண்டாகும் ஓஷதிகளுக்கு ரக்ஷகரான ருத்ரனுக்கு நமஸ்காரம்.

नम उच्चैर्घोषाय.....नमः

யுத்த சமயத்தில் பேரிரைச்சலை யுண்டு பண்ணுபவரும், சத்ருக்களை அழச்செய்பவருமான ருத்ரனுக்கு நமஸ்காரம். காலாட்படைக்கு தலைவரான ருத்ரனுக்கு நமஸ்காரம்.

नमः कृत्स्न वीताय.....नमः

தனது ஸைன்யம் முழுவதையும் சத்ருவினிடமிருந்து காப்பாற்றி, சத்ரு ஸைன்யத்தை ஓட ஓடத் தூரத்துபவருமான ருத்ரனுக்கு நமஸ்காரம். ஸாத்விகர்களாக தன்னை சரண் அடைந்தவர்களை ரக்ஷிப்பவருமான ருத்ரனுக்கு நமஸ்காரம்.

अनुवाकः—३ नमः सहमानाय.....नमः

விரோதிகளை அடக்கி மிகவும் விரோதிகளை கொல்லக் கூடிய ருத்ரனுக்கு நமஸ்காரம். சூரர் களான வீரர்களின் ரக்ஷகரான ருத்ரனுக்கு நமஸ்காரம்.

नमः कक्षाय.....नमः

ப்ரதானமாயிருப்பவரும் கையில் வாள் ஏந்தி யவருமான ருத்ரனுக்கு நமஸ்காரம். மறைந்து திருடும் திருடர்களின் ரக்ஷகருக்கு நமஸ்காரம்.

नमो निषङ्गिणे.....नमः

கையில் பாணம் ஏந்தியவரும் அம்பறாத் தூணியை உடையவருமான ருத்ரனுக்கு நமஸ் காரம். வெளிப்படையாக திருடும் திருடர்களின் தலைவரான ருத்ரனுக்கு நமஸ்காரம்.

नमो वञ्चते.....नमः

தனது எஜமானனுடைய கொடுக்கல் வாங்கல் வியவஹாரங்களில் சிறிது பணத்தை ஏமாற்று பவன் வஞ்சகன், எஜமானனுடைய எல்லாக் காரியங்களிலும் மறைமுகமாக பொருளை திருடு பவன் பரிவஞ்சகன், இந்த இருவடிவிலுள்ள ருத்ரனுக்கு நமஸ்காரம். தன்னைச் சேர்ந்தவன் போல் இருந்து கொண்டு அல்லும் பகலும்

பொருளை பிறர் அறியாதவாறு திருடுபவன் ஸ்தாயு எனப்படுபவன். அப்படிப்பட்டவர்களின் தலைவனுக்கு ருத்ரனுக்கு நமஸ்காரம்.

नमो निचेरवे.....नमः

எஜமானனுடைய வீட்டிலே பொருளை அபஹரிக்க சமயத்தை எதிர்பார்த்து நடமாடுபவன் ஒருவித திருடன். கடைவீதி பூங்கா போன்ற பொது இடங்களில் நடமாடும் திருடன் மற்றொரு விதம். இவ்வித இரண்டு திருடர் உருவத்தில் இருக்கும் ருத்ர தேவனுக்கு நமஸ்காரம். காட்டில் வழிபறி செய்யும் திருடர்களின் தலைவனாக இருக்கும் ருத்ரனுக்கு நமஸ்காரம். ஜீவாத்மாயிருக்கும் திருடன், உள்ளம் திருடன், அதற்கு தலைவனாக இருக்கும் ஈச்வரஸ்வரூபத்தை தியானிப்பதால் பாபம் விலகும்.

नमः सृकाविभ्यः.....नमः

வஜ்ராயுதத்தினால் தன்னைக் காப்பாற்றிக் கொள்பவர் வடிவிலும், ப்ராணிகளை ஹிம்ஸிக்க விரும்புவர்கள் வடிவிலும் உள்ள ருத்ரனுக்கு நமஸ்காரம். எஜமானனுடைய தான்யத்தை திருடும் உழவர்களின் தலைவனான ருத்ரனுக்கு நமஸ்காரம்.

नमोऽसिसद्भ्यः.....नमः

வாளேந்திய திருடர்களாகவும், இரவில் ப்ராணிகளை ஹிம்ஸிக்கும் திருடர்களாயுமிருக்கிற ருத்ரனுக்கு நமஸ்காரம். பிறரைக் கொன்று பொருளை அபஹரிக்கும் திருடர்களின் ரக்ஷகனாக இருக்கும் ருத்ரனுக்கு நமஸ்காரம்.

नम उष्णीषिणे.....नमः

தலைப்பாகையுடன் கிராம மக்களிடையே நடமாடும் திருடனாகவும், மலைக்காடுகளில் விறகு வெட்டுபவர்களின் வஸ்திராதிகளைத் திருடுபவராகவும் இருக்கிற ருத்ரனுக்கு நமஸ்காரம். வீடு, வயல் இவைகளை அபஹரிக்கும் திருடர்களின் தலைவனான ருத்ரனுக்கு நமஸ்காரம்.

नम इषुमद्भ्यः.....नमः

பிறரை பயமுறுத்துவதற்காக கையில் பாணங்கள் உடையவர்களாயும் - சிலர் கையில் வில் உடையவர்களாகவும் உள்ளனர். இ இரண்டு வடிவிலுமுள்ள ருத்ரனுக்கு நமஸ்காரம். அப்படிப்பட்ட உங்களுக்கு நமஸ்காரம்.

नम आतन्वानेभ्यः

வில்லில் நாணேற்று நிற்கும் ருத்ரர்களான உங்களுக்கு நமஸ்காரம். வில்லில் பாணத்தை

தொடுத்து நிற்கும் ருத்ரர்களான உங்களுக்கு நமஸ்காரம்.

नम आयच्छद्भ्य:.....नम:

நாண் கயிற்றை சுண்டி விடுபவர்களாகவும், பாணத்தை விடுபவர்களாகவும் இருக்கிற ருத்ர ரூபமான உங்களுக்கு நமஸ்காரம்.

नमो अस्यद्भ्य:.....नम:

பாணத்தை லக்ஷ்ய பர்யந்தம் போகும்படி விடுபவர்களாகவும், லக்ஷ்யத்தை நன்கு ப்ரவேசித்து பிளக்கும்படி அடிக்கின்றவர்களுமான இரு வடிவிலும் உள்ள ருத்ரரூபிகளான உங்களுக்கு நமஸ்காரம். உட்கார்ந்திருப்பவரும் படுத்திருப்பவருமாக இருக்கும் ருத்ர மூர்த்தியான உங்களுக்கு நமஸ்காரம்.

नम: स्वपद्भ्यो.....नम:

தூங்குகின்றவரும் விழிப்புடனிருப்பவருமான ருத்ர மூர்த்திகளான உங்களுக்கு நமஸ்காரம்.

नमस्तिष्ठद्भ्यो.....नम:

நிற்பவரும், ஓடுபவருமான ருத்ர மூர்த்திக்கு நமஸ்காரம்.

नमः सभाभ्यः, सभापतिभ्यः

சபைரூபமாகவும், சபாபதியின் வடிவிலுள்ள ருத்ர மூர்த்திகளுக்கு நமஸ்காரம்.

नमो अश्वेभ्यः.....नमः

குதிரை வடிவிலும், குதிரைகளின் ரக்ஷகனுகவும் இருக்கின்ற ருத்ர மூர்த்திகளான உங்களுக்கு நமஸ்காரம்.

अनुवाकः—४ नम आव्याधिनीभ्यः.....नमः

நான்கு புறத்திலும் நன்கு அடிக்கக்கூடிய ஸ்திரீகள் வடிவிலுள்ளவரும், விசேஷமாக அடிப்பதில் வல்லுநர்களாக விளங்கும் ஸ்திரீகள் வடிவிலுள்ள ருத்ர மூர்த்திகளான உங்களுக்கு நமஸ்காரம்.

नम उगणाभ्यः, तृंहतीभ्यः

ஏழு மாதாக்கள் எனப்படும் கண ஸ்த்ரீகளின் வடிவிலும், சத்ருவை கொல்ல சாமர்த்தியமுள்ள துர்காதேவி போன்ற உருவத்திலுள்ளவர்களுமான ருத்ர மூர்த்திகளான உங்களுக்கு நமஸ்காரம்.

नमो गृत्सेभ्यः नमः

சிறிய இன்பத்தில் ஈடுபாடுள்ளவர்கள் வடிவிலும், அவர்களுக்கு தலைவர்கள் வடிவிலுமுள்ள ருத்ர மூர்த்திகளான உங்களுக்கு நமஸ்காரம்.

नमोव्रातेभ्यः.....नमः

பல இனத்தில் கூட்டத்தின் வடிவிலும், அவர்களுக்கு தலைவர் வடிவிலுள்ள ருத்ரர்களான உங்களுக்கு நமஸ்காரம்

नमो गणेभ्यः.....नमः

பூதகணங்கள் வடிவிலும், அவர்களின் தலைவர்கள் வடிவிலுமுள்ள ருத்ரகணங்களான உங்களுக்கு நமஸ்காரம்.

नमो विरूपेभ्यः

அங்கஹீனர்கள் வடிவிலும், குதிரை முகம், யானை முகமுள்ள வேலைக்காரர்கள் வடிவிலுமுள்ள ருத்ர மூர்த்திகளான உங்களுக்கு நமஸ்காரம்.

नमो महद्भयः.....नमः

அணிமாதி அஷ்டைச்வரியமுள்ளவர்களாயும் அந்த ஐச்வரியமில்லாதவர்களுமாக இருக்கின்ற ருத்ரர்களான உங்களுக்கு நமஸ்காரம்.

नमो रथिभ्यः.....नमः

ரதத்தில் ஏறியவர்கள் வடிவிலும், ரதத்தில் ஏராதவர்கள் வடிவிலுமுள்ள ருத்ர மூர்த்திகளுக்கு நமஸ்காரம்.

नमो रथेभ्यः, रथपतिभ्यः

ரதரூபமாகவும், ரதத்தை ஓட்டுநர் ரூபமாகவும் இருக்கின்ற ருத்ரர்களுக்கு நமஸ்காரம்.

नमः सेनाभ्यः, सेनानिभ्यः

ஸேனை வடிவிலும் ஸேனாதிபதியின் வடிவிலுமுள்ள ருத்ர மூர்த்திகளுக்கு நமஸ்காரம்.

नमः क्षत्तृभ्यः.....नमः

ரதத்தை ஓடச் செய்பவர், நிறுத்தச் செய்பவர் வடிவிலுள்ள ருத்ர மூர்த்திகளுக்கு நமஸ்காரம்.

नमस्तक्षभ्यः.....नमः

மரம் செதுக்கி தச்சுவேலை செய்பவன் வடிவிலும், ரதம் போன்ற பெரிய மரவேலை செய்பவன் வடிவிலுமுள்ள ருத்ர மூர்த்திகளுக்கு நமஸ்காரம்.

नमः कुलालेभ्यः, कर्मारेभ्यः

குயவர், கருமான் வடிவிலுள்ள ருத்ர மூர்த்திகளுக்கு நமஸ்காரம்.

नमः पुञ्जिष्टेभ्यः, निषादेभ्यः

பறவைகளை வேட்டையாடுபவர் வடிவிலும், மீன் வேட்டையாடுபவர் வடிவிலும் உள்ள ருத்ர மூர்த்திகளுக்கு நமஸ்காரம்.

नम इषुकृद्भ्यः, धन्वकृद्भ्यः

பாணம் தயாரிப்பவன் வடிவிலும், வில் தயாரிப்பவன் வடிவிலுமுள்ள ருத்ர மூர்த்திகளுக்கு நமஸ்காரம்.

नमो मृगयुभ्यः, श्वनिभ्यः

மான்களை ஒன்று சேர்ப்பவர் வடிவிலும், நாய் கழுத்தில் கட்டிய பாசக் கயிற்றை கையிலுள்ளவர் வடிவிலுமுள்ள ருத்ர மூர்த்திகளுக்கு நமஸ்காரம்.

नमः श्वभ्यः, श्वपतिभ्यः

நாய் வடிவிலும், நாய்களின் ரக்ஷகர் வடிவிலும் முள்ள ருத்ர மூர்த்திகளுக்கு நமஸ்காரம்.

अनुवाकः—५ नमो भवाय च

ப்ராணிகளை ஸ்ருஷ்டிக்கின்ற ருத்ரனுக்கு நமஸ்காரம். துக்கத்தை போக்குகின்ற ருத்ரனுக்கு நமஸ்காரம். பாபங்களைப்போக்கும் ருத்ரனுக்கு நமஸ்காரம். பசுவுக்கு சமமான அஞ்ஞானி

களை காப்பாற்றுகிற ருத்ரனுக்கு நமஸ்காரம். காலகூட விஷத்தை உண்டதின் காரணமாக கறுப்பான கழுத்தையுடையவருக்கு நமஸ்காரம். வெண்மையான கழுத்தையுடைய ருத்ரனுக்கு நமஸ்காரம். ஜடாதாரியான ருத்ரனுக்கு நமஸ்காரம். மொட்டையடித்துக் கொண்ட ருத்ரனுக்கு நமஸ்காரம். (சன்யாசி வேஷத்தில் இருப்பவருக்கு நமஸ்காரம்) இந்திரன் வடிவிலுள்ள ருத்ரனுக்கு நமஸ்காரம். நூற்றுக்கணக்கான வில்லையுடைய ருத்ரனுக்கு நமஸ்காரம். கைலாசத்தில் அமர்ந்திருக்கும் ருத்ரனுக்கு நமஸ்காரம். விஷ்ணு ரூபமாயிருக்கும் ருத்ரனுக்கு நமஸ்காரம். மேக ரூபமாக இருந்து கொண்டு மழை பொழிகின்ற ருத்ரனுக்கு நமஸ்காரம். பாணமுள்ளவருக்கு நமஸ்காரம். சிறிய உடலுடையவருக்கு நமஸ்காரம். கை கால் குட்டையாயிருக்கும் வாமனரூபிக்கு நமஸ்காரம். உடலால் பெரிய தோற்றமுள்ளவருக்கு நமஸ்காரம். சிறந்த குணமுள்ளவருக்கு நமஸ்காரம். வயதால் பெரியவருக்கு நமஸ்காரம். நன்கு ஸ்தோத்தரம் செய்ததால் விருத்தியடைந்தவருக்கு நமஸ்காரம். உலகத்தின் ஸ்ருஷ்டிக்கு முன்பே இருந்த ருத்ரனுக்கு நமஸ்காரம். சபையில் முதல்வராயிருப்பவருக்கு நமஸ்காரம். சீக்கிரமாக எங்கும் வியாபிக்கும் ருத்ரனுக்கு நமஸ்காரம். நடப்பதில் வல்லுநரான ருத்ரனுக்கு நமஸ்காரம். சீக்கிரமாக செல்பவருக்கு நமஸ்காரம். ஓடும் ஜலத்தில் வஸிக்கும் ருத்ரனுக்கு நமஸ்காரம்.

அலையிலிருப்பவருக்கு நமஸ்காரம். ஓடாமல் ஸ்திரமாக நிற்கும் ஜலத்திலிருக்கும் ருத்ரனுக்கு நமஸ்காரம். ப்ரவாஹத்தில் இருக்கும் ருத்ரனுக்கு நமஸ்காரம். தீவில் இருப்பவருக்கு நமஸ்காரம்.

अनुवाकः—६ नमोज्येष्ठाय च

கல்வியினாலும் செல்வத்தாலும் மேலான ருத்ரனுக்கு நமஸ்காரம். கல்வி, செல்வம் இரண்டும் குறைவாகயுள்ள ருத்ரமூர்த்திக்கு நமஸ்காரம். ஸ்ருஷ்டியில் தொடக்கத்தில் உண்டான ஹிரண்யகர்ப்பமூர்த்தியாயிருக்கும் ருத்ரனுக்கு நமஸ்காரம். உலகத்தின் அழியும் காலத்தில் காலாக்னிரூபியான ருத்ரனுக்கு நமஸ்காரம்.

ஸ்ருஷ்டிக்கும் ப்ரளயத்திகும் இடையில் தேவர், மநுஷ்யர், மாடு போன்ற ப்ராணிகள் வடிவிலுள்ள ருத்ரனுக்கு நமஸ்காரம். இந்திரியங்கள் முதிர்ச்சி யடையாத பாலர்கள் வடிவிலுள்ள ருத்ரனுக்கு நமஸ்காரம். கன்றுக்குட்டிகள் வடிவிலுள்ள ருத்ரனுக்கு நமஸ்காரம். மரங்களின் வேரில், கிளைகளாகத் தோன்றும் ருத்ரனுக்கு நமஸ்காரம். புண்யம், பாபம் என்ற இரண்டும் கலந்த மனுஷ்ய லோகத்தில் உண்டான ருத்ரனுக்கு நமஸ்காரம். ரக்ஷாபந்தன கயிறு கட்டிய வருக்கு நமஸ்காரம். யமலோகத்தில் பாபிகளை சிக்ஷிப்பவனாக இருக்கும் ருத்ரனுக்கு நமஸ்காரம். மோக்ஷத்தையடையத் தகுதியுள்ளவர் ரூபத்தில்

உள்ள ருத்ரனுக்கு நமஸ்காரம். தான்யத்தினுல் செழிப்பான பூமி ரூபிக்கு நமஸ்காரம். களத்தில் வரப்புபோல் இருக்கத்தகுதி வாய்ந்த ருத்ரனுக்கு நமஸ்காரம். வேத மந்திரங்களில் கூறப்படும் மூர்த்திக்கு நமஸ்காரம். வேதாந்த வாக்கியங்களால் கூறப்படும் ப்ரஹ்மஸ்வரூபிக்கு நமஸ்காரம். காட்டிலுள்ள மரங்கள் வடிவிலுள்ள ருத்ரனுக்கு நமஸ்காரம். புதர்கள் வடிவிலுள்ள ருத்ரனுக்கு நமஸ்காரம். நாத (ஒலி) ரூபிக்கு நமஸ்காரம். எதிரோலி வடிவிலுள்ள ருத்ரனுக்கு நமஸ்காரம். சீக்கிரமாகச் செல்லும் சேனையாக இருப்பவருக்கு நமஸ்காரம். வேகமாகச் செல்லும் ரதத்தை உடையவருக்கு நமஸ்காரம். யுத்தத்தில் தைரியமாக நிற்பவருக்கு நமஸ்காரம். எதிரிகளை அழிப்பவருக்கு நமஸ்காரம். கவசம் அணிந்தவருக்கு நமஸ்காரம். வீடுள்ளவருக்கு நமஸ்காரம். தலையில் இரும்புத் தொப்பி அணிந்தவருக்கு நமஸ்காரம். எதிரிகள் அம்பு பாயாத கவசம் அணிந்தவருக்கு நமஸ்காரம். வேதங்களில் பிரஸித்தமான ருத்ரனுக்கு நமஸ்காரம். வேதங்களில் பிரஸித்தமான சேனையையுடையவருக்கு நமஸ்காரம்.

अनुवाकः—७ नमो दुन्दुभ्याय च

பேரி வாத்தியத்தின் ஒலி வடிவமானவருக்கு நமஸ்காரம். பேரி அடிக்கும் தண்டத்தினுல் உண்டாகும் சப்த வடிவமானவருக்கு நமஸ்காரம் யுத்தத்தில் தைரியமாக ஓடாமல் எதிர்த்து நிற்

கும் சூரன் வடிவமானவருக்கு நமஸ்காரம். எதிரி சைன்யத்தின் நடவடிக்கைகளை விமர்சிப்பவருக்கு நமஸ்காரம்.

எதிரிகளின் நடவடிக்கைகளை அறிவதில் கெட்டிக்காரரான ருத்ரனுக்கு நமஸ்காரம். எஜமானனால் அனுப்பப்பட்டவராகயிருப்பவருக்கு நமஸ்காரம். போர் வாளேந்தியவருக்கு நமஸ்காரம். அம்பராத்தூணியையுடையவருக்கு நமஸ்காரம். கூரிய பாணங்களை உடையவருக்கு நமஸ்காரம். அழகிய த்ரிசூலம் போன்ற ஆயுதங்கள் கொண்டவருக்கு நமஸ்காரம். அழகிய பிநாகம் என்ற வில்லையுடையவருக்கு நமஸகாரம். ஒற்றையடிப் பாதையில் செல்பவருக்கு நமஸ்காரம். ராஜவீதியில் செல்லத் தகுந்தவருக்கு நமஸ்காரம். சிறுவாய்க்காலில் ஓடும் ஜலவடிவுள்ளவருக்கு நமஸ்காரம். மலையருவிகளின் நீர்வடிவிலுள்ளவருக்கு நமஸ்காரம். சகதியான (சேரான) இடத்திலுள்ள ஜலவடிவமானவருக்கு நமஸ்காரம். ஸரோவரங்களின் (ஏரி) ஜலமாக இருப்பவருக்கு நமஸ்காரம். நதிகளின் ஜலவடிவிலுள்ளவருக்கு நமஸ்காரம். சிறுகுட்டையின் ஜலவடிவமானவருக்கு நமஸ்காரம். கிணற்று நீராக இருப்பவருக்கு நமஸ்காரம். குழிகளில் தேங்கிய நீராக இருப்பவருக்கு நமஸ்காரம். மழை ஜல ரூபமானவருக்கு நமஸ்காரம். மழையை எதிர்பார்க்காமல் இருக்கும் ஜலவடிவமானவருக்கு நமஸ்

காரம். கரும்மேகங்களின் நீராக இருப்பவருக்கு நமஸ்காரம். மின்னலுடன் கூட இருப்பவருக்கு நமஸ்காரம். சரத் காலத்து மேகத்தில் இருப்பவருக்கு நமஸ்காரம். வெய்யிலுடன் கூடிய மழையிலிருப்பவருக்கு நமஸ்காரம். சூரிவளிக் காற்றுடன் பெய்யும் மழை ரூபமானவருக்கு நமஸ்காரம். ப்ரளயகாலத்தில் ஏற்படும் ஆலங்கட்டி மழை வடிவமானவருக்கு நமஸ்காரம். பசு முதலிய கால் நடைகளின் கார்யங்கள் வடிவிலுள்ளவருக்கு நமஸ்காரம். வீடுகட்டத் தகுந்த பூமியை ரக்ஷிப்பவருக்கு நமஸ்காரம்.

अनुवाकः—८ नमः, सोमाय

உமாதேவியுடன் கூடிய ருத்ரனுக்கு நமஸ்காரம். அழுவதற்கு காரணமான துக்கத்தை போக்குகிற ருத்ரனுக்கு நமஸ்காரம். உதயகாலத்தில் சூரியவடிவில் சிவப்பாக இருக்கும் ருத்ரனுக்கு நமஸ்காரம். உதயத்திற்கு பிறகு சிறிது சிவப்பான சூரியன் வடிவில் உள்ள ருத்ரனுக்கு நமஸ்காரம். சுகத்தை அடையச் செய்பவருக்கு நமஸ்காரம். நாலு கால் பிராணி, இரண்டு கால் பிராணி என்ற எல்லப் பிராணிகளுக்கும் ரக்ஷகனான ருத்ரனுக்கு நமஸ்காரம், விரோதிகளை அழிப்பதற்காக கோப மூர்த்தியாக இருப்பவருக்கு நமஸ்காரம். பார்த்தாலேயே விரோதிகளை பயப்படுத்துகிற ருத்ரனுக்கு நமஸ்காரம். யுத்தகளத்தில் தனது பக்தனுக்கு முன்புறத்தில் இருந்து

கொண்டு அவனது எதிரிகளை அழிக்கின்றவருக்கு நமஸ்காரம். வெகு தூரத்திலிருந்தே பக்தனின் சத்ருக்களை வதம் செய்கிறவனுக்கு நமஸ்காரம். உலகில் விரோதிகளைக் கொல்பவராக இருக்கும் ருத்ரனுக்கு நமஸ்காரம். உலகம் அழியும் பொழுது விசேஷமாக எல்லோரையும் அழிப்பவரான ருத்ரனுக்கு அநேக நமஸ்காரம். பசுமையான இலையுடைய கல்பகவ்ருக்ஷம் போன்ற மரவடிவிலுள்ள ருத்ரனுக்கு நமஸ்காரம். ஓம்காரத்தினால் விளக்கப்படும் பரம்பொருளான ருத்ரனுக்கு நமஸ்காரம். சுகத்தை உண்டுபண்ணும் ருத்ரனுக்கு நமஸ்காரம். சுகத்தை அனுபவிக்கச் செய்பவருக்கு நமஸ்காரம். தகப்பனார் உருவத்தில் லௌகிக சுகத்தை அளிப்பவருக்கு நமஸ்காரம். ஆசார்யன், சாஸ்திரம் இவைகளின் வடிவில் இருந்து கொண்டு மோக்ஷ சுகத்தை அளிப்பவருக்கு நமஸ்காரம். பாபமற்ற ஸ்வயம் ப்ரகாச ரூபியான கல்யாண மூர்த்திக்கு நமஸ்காரம். தனது பக்தர்களையும் விசேஷமாக பாபமற்றவர்களாகச் செய்யும் ருத்ரனுக்கு நமஸ்காரம். ப்ரயாகை போன்ற புண்ய தீர்த்தத்தில் இருக்கின்றவருக்கு நமஸ்காரம். நதிக்கரைகளில் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட லிங்கமூர்த்திக்கு நமஸ்காரம்.

ஸம்ஸார ஸாகரத்தின் அக்கரையில் ஞானிகளால் தியானிக்கத் தகுந்த மூர்த்திக்கு நமஸ்காரம். ஸம்ஸாரத்திலேயே (உலகத்திலேயே)

இருந்து கொண்டு காம்யகர்மாவின் பலனை அளிக்கும் மூர்த்திக்கும் நமஸ்காரம். சிறப் பாக மந்திரங்களை ஜபம் செய்வதன் மூலம் பாபங்களை அகற்றும் மூர்த்திக்கு நமஸ்காரம். தத்வ ஞானரூபத்தில் இருந்து கொண்டு ஸம்ஸார ஸாகரத்தையே தாண்டும்படி செய்விக்கிற மூர்த்திக்கு நமஸ்காரம். காம்யகர்மனுஷ்டானத் தினால் மறுபடியும் இவ்வுலகில் ஜன்மம் எடுப்பது ஆதாரம் எனப்படுகிறது. இதைக் கொடுப்பவர் அதாவது காம்யகர்மாவின் பலனையளிப்பவருக்கு நமஸ்காரம். கர்மபலனை பூர்ணமாக அனுபவிக் கும் ஜீவனுக்கு அந்தர்யாமியாக இருந்து கொண்டு ப்ரேரகராக இருப்பவருக்கு நமஸ்காரம். இளம் புல்லையுடையவரும், நுரையையுடையவரும், மணலையுடையவரும், கங்காப்ரவாஹத்தையுடைய வரும் அதாவது ச்ரத்தையுள்ள ஒருவன் கங்கா ஸ்னானத்தில் பற்றுள்ளவராக எப்பொழுதும் கங்கை நதியின் கரையிலேயே வசிக்கும் புருஷ வடிவில் இருக்கும் ருத்ரமூர்த்திக்கு நமஸ்காரம்.

अनुवाकः—९ नम इरिण्याय च

புல் பூண்டு கூட முளைக்காத பூமியில் உண்டான வஸ்து ரூபத்திலிருப்பவருக்கு நமஸ் காரம். பல பேர் கையாலும் வழியில் உண்டான மூர்த்திக்கு நமஸ்காரம். சிறுகற்கள் நிறைந்த ப்ரதேசரூபமானவருக்கு நமஸ்காரம். வஸிப் பதற்கு தகுந்த இடமாக இருப்பவருக்கு நமஸ்

காரம். ஜடை தரித்தவருக்கு நமஸ்காரம். பக்தர் கள் எதிரில் தோன்றுபவருக்கு நமஸ்காரம். மாட்டுக் கொட்டகையில் இருப்பவருக்கு நமஸ் காரம். வீட்டிலிருப்பவருக்கு நமஸ்காரம் கட்டி லில் படுத்திருப்பவருக்கு நமஸ்காரம். மாளிகை யிலிருப்பவருக்கு நமஸ்காரம்.

முள், கூல் நிறைந்திருப்பதனுல் உள்ளேபுக முடியாத அடர்ந்த காட்டில் இருப்பவருக்கு நமஸ்காரம். மலைக்குகைகளில் இருப்பவருக்கு நமஸ்காரம். மடுவில் இருப்பவருக்கு நமஸ்காரம். பனி உருகி ஓடிய ஜலத்தில் இருப்பவருக்கு நமஸ்காரம். பரம அனு போன்ற சிறு தூசியில் இருப்பவருக்கு நமஸ்காரம். புழுதியில் இருப்ப வருக்கு நமஸ்காரம். உலர்ந்த கட்டைகளில் இருப்பவருக்கு நமஸ்காரம் பச்சமரத்திலிருப்ப வருக்கு நமஸ்காரம். கடினமான தரையில் இருப்ப வருக்கு நமஸ்காரம். சிறுபுல் வடிவில் இருப்ப வருக்கு நமஸ்காரம். பூமியில் இருப்பவருக்கு நமஸ்காரம். அழகிய அலைகளோடு கூடிய நதி யிலிருப்பவருக்கு நமஸ்காரம். பசும் இலைகளில் இருப்பவருக்கு நமஸ்காரம். உலர்ந்த இலைகளின் கூட்டத்தில் இருப்பவருக்கு நமஸ்காரம் ஆயுதம் ஏந்தியவருக்கு நமஸ்காரம். ஆயுதத் தால் அடிப்பவருக்கு நமஸ்காரம். சிறிது வருத்தம் அளிப்பவருக்கு நமஸ்காரம். அதிகமான துன் பத்தையளிப்பவருக்கு நமஸ்காரம். பக்தர்களுக்கு செல்வத்தை வாரி வழங்கும் ருத்ரமூர்த்திகளுக்கு

நமஸ்காரம். தேவர்களின் ஹ்ருதயமாக இருக்கின்ற ருத்ரமூர்த்திகளுக்கு நமஸ்காரம். ஒரு பொழுதும் அழியாதிருக்கும் ருத்ரமூர்த்திகளான உங்களுக்கு நமஸ்காரம். தேவையான பொருள் சம்பாதித்து கொடுக்கும் ருத்ர மூர்த்திகளான உங்களுக்கு நமஸ்காரம். எல்லா பாபத்தையும் போக்கடிக்கின்ற ருத்ரமூர்த்திகளான உங்களுக்கு நமஸ்காரம். நான்கு புறமும் ஸ்தூல ரூபத்தையுடைய ருத்ரமூர்த்திகளாவும், தேவர்களின் ஹ்ருதயமாகவும் இருக்கின்ற உங்களுக்கு நமஸ்காரம். இவ்வாறு பரமேச்வரன் ஸ்தாவர ஜங்கம ரூபமாக வர்ணிக்கப்பட்டுள்ளார்.

अनुवाकः—१० द्रापे अन्धसः

பாபிகளுக்கு நரகத்தை அளித்து துன்புறுத்துபவரே, பக்தர்களுக்கு அன்னத்தை ரக்ஷித்துக் கொடுப்பவரே, வைராக்யத்தின் காரணமாக தன்னிடம் ஒன்றுமில்லாதவரே, கறுப்பான கழுத்தும் மீதி சிவப்பான உடல் பாகத்தையுடையவரே அப்படிப்பட்ட ருத்ரனே, எங்களைச் சார்ந்த புத்ரர், பௌத்ரர் முதலியவர்களையும், எங்களது பசுமாடு முதலியவைகளையும் பயப்படுத்தாதீர், மேற் சொன்ன வஸ்துக்கள் அழியவேண்டாம், மேலும் ஒருவரும் நோயாளியாக இருக்கவேண்டாம்.

यात रुद्र .....जीवसे

ஹே ருத்ரனே, உனது சாந்தமான சரீரத்தின் மூலம் எங்களை உயிருடன் வாழ்வதற்காக சுகத் தையளிப்பயாக. உனது சாந்தமூர்த்தியானது எல்லா நாளிலும் ரோகம், ஏழ்மை முதலியவை (மருந்து போல்) அழிப்பதற்கு சாதனமாகும். ருத்ரனுடன் ஐக்யமாவதற்கு மருந்து போல் இருந்து கொண்டு ஞானத்தைக் கொடுத்து ஜனமரண துக்கத்தை நீக்கவல்லது. அப்படிப் பட்டசாந்த ரூபம் உன்னுடையது.

इमाँ रुद्राय.....अनातुरम् ।

ஹே ருத்ரனே, எவ்வாறு எங்கள் புத்ராதி களுக்கும் பசுமாடு முதலியவைகளுக்கும்சுகம் ஏற் படுமோ, மேலும் இந்த கிராமத்தில் வாழும் எல் லாப் பிராணிகளும் முழு சுகத்துடனும் உபத்ரவம் இல்லாமலும் இருக்குமோ அவ்வாறு இருப்பதற் காக ருத்ரனுக்கு பூஜை செய்தல், தியானித்தல், போன்ற விஷயத்தில் நல்ல புத்தியை வளர்த்து கொள்வோம்.

எங்களுக்குத் தேவையானவையைச் செய்வ தற்கு சாமர்த்தியமுள்ளவராகவும், ஜடாதாரியாய் இருப்பவரும், எதிரிகளை அழித்தவருமான ருத்ர மூர்த்திக்கு எங்கள் நமஸ்காரம். ப்ரம்மஹத் திற்குக் காரணமான பாபத்தை போக்கவல்ல வருக்கு நமஸ்காரம்.

मृडा नो रुद्र. .....प्रणीती ।

ஹே ருத்ரனே, எங்களை இவ்வுலகில் சுகமாக இருக்கச் செய், மேலும் பரலோகத்திலும் எங்களுக்கு சுகத்தையளிப்பாயாக. எங்கள் பாபத்தை அழித்த உனக்கு நமஸ்காரம் மூலம் பணிவிடை செய்கிறோம். ரக்ஷகரான மனுவானவர் சுகத்தையும், துக்கத்திலிருந்து விலகியிருத்தலையும் சம்பாதித்து கொடுத்ததோ அது எல்லாவற்றையும் ஹே ருத்ரனே, உனது ஸ்நேஹம் இருக்கும் பொழுது அனுபவிப்போமாக.

मानो महान्तं.....रुद्ररीरिषः ।

ஹே ருத்ரனே, எங்களுடைய வயதான புருஷரையும், சிறுவரையும், யுவாக்களையும், கர்ப்பத்தில் இருக்கும் குழந்தையையும் எங்களது தகப்பனரையும், தாயாரையும் ஹிம்ஸிக்காதே. எங்களது ப்ரியமான சரீரத்தையும் ஹிம்ஸிக்காதே.

मानस्तोके.....हिंसीः ।

ஹே ருத்ரனே, எங்கள் குழந்தைகளை, விசேஷமாக புத்ரனை ஹிம்ஸிக்காதே. எங்கள் ஆயுளையும் ஹிம்ஸிக்காதே. எங்கள் ஆடுமாடுக்க, குதிரைகள் இவைகளையும் ஹிம்ஸிக்காதே. கோபம் கொண்டு எங்கள் வீரர்களான வேலைக்காரர்களை கொல்லாதே. நாங்கள் ஹவிஸ்ஸை

களுடன் உனக்கு நமஸ்காரம் மூலமாக பணி விடை செய்வோம்.

ஹே ருத்ரனே, பசுக்களை அழிக்கின்றதும், புருஷர்களை அழிக்கின்றதும் வீரர்களை அழிக்கின்றதுமான உக்ர ரூபமானது எங்களுக்கு வெகுதூரத்தில் இருக்கட்டும். உனது சுகத்தையளிக்கும் ஸௌம்ய ரூபம் எங்களிடத்தில் இருக்கட்டும். மேலும் எங்களை எல்லாவிதத்திலும் காப்பாற்றுவாயாக. ஹே ருத்ரனே, எங்களைப் பற்றி தேவர்களிடம் மீதி எஜமானர்களை விட மேலாகக் கூறு. ஹே ருத்ரனே, இவ்வுலகம், மேல் உலகம் இரண்டையும் விருத்தி செய்பவர். ஆகையால் நீர் எங்களுக்கு சுகத்தை கொடுப்பாயாக.

स्तुहि श्रुतं.....सेनाः ।

ஹே என்னுடைய வார்த்தைகளே, பிரஸித்தி பெற்ற ருத்ரனை துதிப்பாயாக. ஹ்ருதய கமலத்தில் விளங்கும் ருத்ரனை துதிப்பாயாக. அவர் எப்பொழுதும் யுவாவாக இருப்பவர். ப்ரளய காலத்தில் எல்லாவற்றையும் ஸம்ஹரிக்கும் பொருட்டு உக்ரமானவர். பயங்கரமான ஸிம்ஹம் போன்றவர். அப்படிப்பட்ட ஹே ருத்ரனே, எங்கள் வார்த்தையால் துதிக்கப்பட்டு தினமும் ஜீர்ணமாகிற இந்த சரீரத்திற்கு சுகத்தைக் கொடு. உனது ஸேனை எங்கள் விரோதிகளை அழிக்கட்டும்.

परिनोरुद्रस्य.....मृडय ।

ருத்ரனுடைய ஆயுதம் எங்களை விட்டு விலகி இருக்கட்டும். ஒருபொழுதும் எங்களை ஹிம்ஸிக்கக் கூடாது. கோபத்தினுல் ஜ்வலிக்கின்றதும், பாபத்தை கொல்ல விரும்புகின்ற ருத்ரனுடைய உக்ர புத்தியானது எங்களைவிட்டு விலகி இருக்கட்டும். ஹே ருத்ரனே விரோதியை அழிக்க எந்த த்ருட புத்தியுள்ளதோ, அதை ஹவிஸ்ஸை அளிக்கும் யஜமானர்களின் பொருட்டு போக்குவீராக. ஹே இஷ்டத்தையளிப் பவரே, எனது புத்ரன் பேரன் இவர்களுக்கும் ஸுகத்தை அளிப்பாயாக.

मीढुष्टम..... ....विभ्रदाहि ।

விசேஷமாக இஷ்டங்களை வாரி வழங்குபவரே, மேலும், விசேஷமாக சாந்தமூர்த்தியாயிருப்பவரே, எங்கள் விஷயத்தில் சாந்தமாகவும், ஸௌமனஸ்யம் உள்ளவராகவும் இருப்பீராக. த்ரிசூலம் முதலிய ஆயுதத்தை ஆல், அரசு போன்ற உயரமான மரத்தில் வைத்துவிட்டு, எங்கள் கண்களுக்கு புலப்படாதவாறு வைத்துவிட்டு புலித் தோல் மாத்திரம் அணிந்து, எங்கள் எதிரில் வருவாயாக. வரும்பொழுது, அலங்காரத்திற்காக பிநாகம் என்ற வில்லை மாத்திரம் ஏந்தி பாணங்களை விட்டுவிட்டு எங்களிடம் வருவாயாக.

विकिरिद.....ताः ।

பக்தர்களுக்கு செல்வத்தை வாரி இறைப்ப வரே, சிவப்பு நிறமற்று வெண்மையானவரே, உற்பத்தி, அழிவு, பிராணிகளின் வருகையையும் செல்லுதலையும், அவித்யை வித்யை இரண்டை யும் அறிதல் போன்ற ஆறு குணங்கள் கொண்ட ருத்ர மூர்த்தியே, உனக்கு நமஸ்காரம். உனது ஆயிரக் கணக்கான ஆயுதங்கள் எங்கள் விரோதி களை அழிக்கட்டும்.

सहस्राणि.....हृषि ।

ஹே ருத்ரனே, உனது கைகளில் ஆயிரம் விதமான ஆயிரக்கணக்கான ஆயுதங்கள் இருக் கின்றன. கத்தி, வில், த்ரிசூலம், போன்றவை அவைகள். ஹே பகவானே, நீ எதையும் செய்ய வல்லவராக இருந்துக் கொண்டு, அந்த ஆயுதங் களின் கூர்மையான பாகங்களை எங்களிடமிருந்து மறு புறம் நோக்கியதாகச் செய்வீராக.

अनुवाकः—११ सहस्राणि.....तन्मसि ।

பூமியில் எந்த ருத்ரர்கள் ஆயிரம் விதமாக வும், ஆயிரக்கணக்காகவும் இருக்கிறார்களோ, அவர்களின் வில்களை எங்களிடமிருந்து 1000 யோஜனை மைலுக்கப்பாலேயே அவிழ்க்கப்பட்ட நாண் கயிற்றையுடையதாக செய்கிறோம்.

अस्मिन् महति.....अधि: ।

இந்தப் பெரிய சமுத்ரம் போன்ற அந்த ரிக்ஷித்தில், எந்த ருத்ர மூர்த்திகள் இருக்கிறார் களோ, அவர்களின் வில்கள் 1000 யோஜன தூரத்திலேயே நாண் கயிற்றை அவிழ்த்ததாக இருக்கட்டும்.

नीलग्रीवा: शितिकण्ठा:.....क्षमाचरा: ।

கழுத்தின் ஒரு பாகம் நீலமாகவும், ஒரு பாகம் வெள்ளையாயுமிருக்கின்ற ருத்ர மூர்த்திகளின் ஆயுதங்கள் வெகு தூரத்தில் நாண் அவிழ்த்து விடப்பட்டவைகளாக இருக்கட்டும்.

नीलग्रीवा:.....उपश्रिता: ।

ஸ்வர்கத்தில் இருக்கும் ருத்ர மூர்த்திகளின் ஆயிரக்கணக்கான வில்கள் வெகு தூரத்தில் அவிழ்ந்த நாண் கயிற்றையுடையதாகச் செய் கிறோம்.

ये वृक्षेषु.....विलोहिता: ।

மரங்களில் வசிக்கும் ருத்ரகணங்களுள் சிலர் நீலநிற கழுத்துடையவர். சிலர் இளம்புல் நிற முள்ளவர்கள். மற்றும் சிலர் விசேஷமாக சிவப் பானவர்கள். அவர்களின் வில்களை வெகு தூரத் திலேயே அவிழ்த்த நாணுடையதாகச் செய் வோம்.

ये भूतानां.....कपर्दिनः ।

சரீரத்தை மறைத்துக் கொண்டு மனிதர் களுக்கு உபத்ரவம் செய்யும் பூதகணங்களுக்கு தலைவரான ருத்ரமூர்த்திகளுள் சிலர் மொட்டை, சிலர் ஜடாதாரிகள். அவர்களின் வில்லை தூரத் திலேயே நாண் அவிழ்ந்ததாகச் செய்கிறோம்.

ये अन्नेषु.....जनान् ।

எந்த ருத்ரர்கள் சாப்பிடும் உணவில் மறைந் திருந்து ஜனங்களுக்கு உபத்ரவம் செய்கின்ற னரோ, குடிக்கும் திரவ பதார்த்தங்களில் மறைந் திருந்து ஜனங்களை உபத்ரவப்படுத்துகிறார்களோ, அவர்களுடைய வில்களை 1000 யோஜனை தூரத் திலேயே அவிழ்ந்த நாணுள்ளதாகச் செய்வோம்.

ये पथां.....क्षुधः ।

எந்த ருத்ரர்கள் லௌகிக வைதிக மார்க்கங் களை ரக்ஷிக்கிறார்களோ, அன்னத்தை அளித்து போஷிக்கின்றனரோ, சத்ருக்களுடன் யுத்தம் செய்கின்றனரோ, நமது அனிஷ்டத்தை போக்கு கிறார்களோ, அவர்களின் வில்களை வெகு தூரத் திலேயே அவிழ்ந்த நாணுள்ளதாகச் செய்கிறோம்.

ये तीर्थानि.....निषङ्गिणः ।

எந்த ருத்ரர்கள் காசி த்ரிவேணி போன்ற புண்ணிய தீர்த்தங்களை ரக்ஷிப்பதற்காக பிச்சுவா கத்தி யேந்தியவர்களாகவும் கூர்மையான ஆயுத

முள்ளவர்களாகவும் கையில் போர்வாள் ஏந்தி யவர்களாகவும் இருக்கிறார்களோ அவர்களுடைய வில்களை வெகு தூரத்திலேயே அவிழ்ந்த நாணுள்ளதாகச் செய்கிறோம்.

ये एतावन्तः.....तन्मसि ।

மேலே கூறிய ருக்குகளில் எவ்வளவு ருத்ரர் கள் கூறப்பட்டுள்ளனரோ அவர்களைக் காட்டி லும் அதிகமாக வேறு பல ருத்ரர்கள் எல்லா திக்குகளிலும் வியாபித்திருக்கிறார்களோ, அவர் களின் வில்களை 1000 யோஜனை தூரத்தில் நாண் கயறு அவிழ்ந்ததாகக்ச் செய்கிறோம்.

नमो रुद्रेभ्यो ये पृथिव्यां

எந்த ருத்ரர்கள் பூமியில் அன்னத்தை பாண மாகக் கொண்டு அதாவது அபத்யமான ஆஹார மான பாணத்தைக் கொண்டவர்களாக இருக்கிறார் களோ, அவர்களுக்கு கிழக்கு திக்கில் நமஸ்காரம். தெற்கே நமஸ்காரம். மேற்கே நமஸ்காரம். வடக்கே நமஸ்காரம். மேல் நோக்கி நமஸ்காரம். அவர்கள் எங்களை காப்பாற்றட்டும். நாங்கள் எவனை துவேஷிக்கிறோமோ எவன் எங்களை வெறுக்கிறானே, அவனை ஹே ருத்ரர்களே, உங்களுடைய திறந்த வாயினுள் திணிக்கிறோம்.

नमो.....येऽन्तरिक्षे

அந்தரிக்ஷ லோகத்தில் சூறுவளி காற்றை பாணமாகக் கொண்டு மனிதர்களை உபத்ரவிக்கும்

ருத்ரர்களுக்கு நமஸ்காரம். தெற்கே, வடக்கே, மேலே நமஸ்காரம். அவர்கள் எங்களுக்கு சுகத்தை அளிக்கட்டும் நாங்கள் வெறுக்கும் மனிதனை, எங்களை வெறுக்கும் மனிதனையும் ஹே ருத்ரர்களே, உங்களுடைய திறந்த வாயில் தள்ளுகிறேம்.

नमो दिवि

ஆகாயத்தில் எந்த ருத்ரர்கள் மழையையே ஆயுதமாகக் கொண்டு ஜனங்களை தண்டிக்கிறார்களோ, அவர்களுக்கு நமஸ்காரம். அவர்களுக்கு கிழக்கே தெற்கே மேற்கே வடக்கே மேல்நோக்கியும் நமஸ்காரம். எவனை நாங்கள் த்வேஷிக்கிறோமோ, எவன் எங்களை துவேஷிக்கிறானே, அவர்களை ஹே ருத்ரர்களே, உங்களுடைய சிறந்த வாயினுள் திணிப்போம்.

(ஸாயன பாஷ்யத்தைத் தழுவியது.)

ஆறுவது ப்ரச்னம்

अनुवाकः—१ अग्मन्नूर्जं

பரிஷேசனம் முதலியன இதில் கூறப்படுகிறது. अग्मन्नूर्जं என்ற மந்திரத்தால் தீர்த்தத்தால் சிதியினுலான வேதியை மூன்றுதடவை ப்ரதக்ஷிணமாக பரிஷேசனம் செய்யுவும். அடுத்த மந்திரத்தால் பரிசேஷசனம் செய்யாமல் மூன்று

ப்ரதக்ஷிணம் வரவும். அடுத்த மந்திரங்களால் அந்த மேடையின் மீது மணலைப் போட்டு சமப் படுத்த வேண்டும். ஒரு மூங்கிலின் நுனியில் பாசி, நீர்நொச்சி கிளை, தவளை மூன்றையும் கட்டி இவை களை மேடையின் மீது இழுத்து சமப்படுத்தவும் 8 மந்திரங்கள் சமப்படுத்துவதற்கு உள்ளன. அக்னியின் தாபம் குறைந்து சாந்தமாகும் என் பது பொருள். अपामिदं என்பது முதல் இரண்டு மந்திரங்களால் அத்வர்யு அந்த அக்னி மேடை யின் மீது ஏறவேண்டும். அடுத்த 5 மந்திரங் களால் அக்னிஸ்வரூபமான மேடையை மணலால் சமம் வ்யாகரணம் செய்யவேண்டும். [ஸ்மார்த் தத்தில் உள்ள ஆகார (आघार:) ஹோமம் போல் ஒரு கர்ம] அடுத்த இரண்டு மந்திரத்தால் தேன் கலந்த தயிரால் தர்பமுஷ்டியின் மூலம் அந்த அக்னிக்கு ப்ரோக்ஷணம் செய்யவும். அடுத்த மந்திரத்தை சொல்லி அத்வர்யு அந்த மேடையி லிருந்து இறங்கவேண்டும். கடைசி இரண்டு மந்திரங்களால் ऊनीकवान् अग्नि: என்ற தேவதைக்கு ஹோமம் செய்யவும். அக்னியின் பெருமை கூறப் படுகிறது.

अनुवाक:—२ य इमा विश्वा:

இதில் 8 மந்திரங்கள் கொண்ட இரண்டு ஸூக்தங்கள் உள்ளன. 16 மந்திரங்களாலும் இரண்டு வைச்வகர்மண ஹோமம் செய்யவும். 17வது மந்திரத்தால் ஜலத்தில் ஹோமம் செய்ய

வும். உலகத்தை படைத்து, காப்பாற்றி அழிப் பவரான பரமாத்மாதான் விச்வகர்மா எனப்படு கிறது. அவருடைய சிருஷ்டிகளும் பெருமையும் இங்கு கூறப்பட்டுள்ளன.

अनुवाकः—३ उदेनमुत्तरं

இதில் அக்னி ப்ரணயனம் சொல்லப்படு கிறது. ஏற்கெனவே இருந்த ஆஹவனியாக்னியி லிருந்து மஹா ஆஹவனீயத்திற்கு அக்னியை எடுத்துச் செல்வது ப்ரணயனம் எனப்படுகிறது. முதல் மூன்று மந்திரங்களைச் சொல்லி ஆஹவனி யாக்னியில் மூன்று அத்தி ஸமித்துகளை வைக்க வும். அக்னியின் பெருமை கூறப்படுகிறது. स्रुचा என்ற மந்திரத்தால் அக்னியை கையில் எடுத்துக் கொள்ளவும். एवदिनादेवीः என்பது முதல் ஐந்து மந்திரங்களால் அக்னியை சிதியின் ஸமீபம் எடுத்து வரவும், இந்திராதி திக்தேவதை கள் பாபத்தை அகற்றி யஜமானனுக்கு செல்வத் தையளித்து யக்ஞத்தையும் காப்பாற்றட்டும். அடுத்த இரண்டு மந்திரங்களால் ஆக்னீ த்ரனி டத்தில் இரண்டு கல்லைக் கொடுக்கவும். அடுத்த 4 மந்திரங்களைச் சொல்லி கருடாகாரமான சிதி யின் பின் பக்கத்திற்கு (पुच्छाः) சொல்லவும். மொத்தம் 15 மந்திரங்கள்.

अनुवाकः—४ आशुः शिशानः

(இது மஹன்யாஸத்தில் கவசத்தில் செல்லப் படுகிறது). இதில் பிரம்மா சொல்லவேண்டிய

इन्द्रियसूक्तं 10 ருக்குகளால் சொல்லப்படுகிறது. இதில் இந்தரனின் மஹிமை கூறப்படுகிறது. இந்திரன் ஒரே முயற்சியில்1000 கணக்கான சத்ரு சைன்யத்தை வென்றவன். ஹே மனிதவீரர்களே, நீங்களும் அப்படிப்பட்ட ஜயசீலன் இந்திரனின் அனுக்ரஹத்தால் சத்ருக்களை வசப்படுத்தி அழித்து விடுங்கள். பாணம், கத்தி இவைகளை கையிலேந்திய வீரர்களோடு சென்று இந்திரன் சத்ருசைன்யத்தை ஆயுதங்களோடு தன் வசப்படுத்துகிறான். ஹே இந்திரனே, நீ ரதத்தில் ஏறிக் கொண்டு, ராக்ஷஸர்களை அழித்திக் கொண்டு சத்ருக்களை நாசமாக்கிக் கொண்டு நான்கு பக்கமும் சுற்றிவந்து எங்களுடைய தேர்ப்படையை காப்பற்றுவாயாக.

ஹே ஞாதிகளே, மலைகளைப் பிளந்த இந்திரனை பின்பற்றி யுத்தம் செய்யுங்கள். சத்ருக்களுக்கு பூமியில்லாமல் செய்து வெற்றியடைவீர்களாக. இவ்வாறு இந்திரனின் யுத்த சாமர்த்தியம் வர்ணிக்கப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட இந்திரன் நமது சைன்யத்திற்கும் ரக்ஷகனாக இருக்கட்டும் என ப்ரார்த்திக்கப்படுகிறது. விகல்பமாக ஐந்து ருக்குகள் சொல்லப்பட்டுள்ளன. மொத்தம் 15 மந்திரங்கள். இதனால் சத்ரு ஜயம் ஏற்படும். ராஜ்யத்தையும் கைப்பற்றலாம் என்பது பொருள்.

अनुवाकः—५ प्राचीमन प्रदिशं

நான்காவது அனுவாகத்தில் அக்னியை கொண்டு வரும்பொழுது ராக்ஷஸர்களின் உபத்ரவம் இல்லாமல் இருப்பதற்காக "अप्रतिरथसूक्तं" ப்ரணயனத்திற்கு அங்கமாக சொல்லப்பட்டது. இந்த அனுவாகத்தில் கொண்டுவந்த அக்னியை மேடையின் மீது வைப்பதற்குரிய மந்திரங்கள் கூறப்பட்டுள்ளன. முதல் ஐந்து மந்திரங்களால் மேடையின்மேல் ஏறவேண்டும் அக்னியின் பெருமை சொல்லப்படுகிறது. யஜமானனும் ஸ்வர்கலோகத்தையடைவான். அன்னம், ரஸம், யஜமானன் இவைகளை வீட்டிலிருப்போருக்கு ஹே அக்னியே, அளிப்பாயாக என ப்ரார்த்தனை. யாகத்தை அனுஷ்டிப்பவர்களுக்கு சாதகமாக இரு என்றும் அக்னியிடம் பிரார்த்திக்கப்படுகிறது என மந்திரத்தின் பொருள். नक्तोषासा, अग्ने सहस्राक्ष இரண்டு மந்திரங்களால் (புரோனுவாக்யா யாஜ்யா) அத்திக் கட்டையிலான ஜுஹுவின் மூலம் தயிரை "வையாமாத்ருண்ணு" என்ற இஷ்டகையின் மீது ஹோமம் செய்யவும் "सुपर्णोऽसि गरुत्मान्" என்பது முதல் மூன்று மந்திரங்களைச் சொல்லி ஸ்வயமாத்ருண்ணு என்ற இஷ்டகையின் மீது அக்னியை வைக்கவும். அடுத்த மூன்று மந்திரங்களைச் சொல்லி முறையே, அத்தி ஸமித் வைங்கதஸமித், வஹ்னிஸமித் என்ற மூன்று ஸமித்துக்களை அந்த அக்னியில் வைக்கவும்

இதன் மூலம் யஜமானன் தன் இஷ்டத்தை அக்னியிடமிருந்து பெறுகிறான் என்பது கருத்து. सत्तते अग्ने என்ற மந்திரத்தால் பூர்ணாஹுதி செய்யவும். ஜுஹுவில் 2 தடவை நெய்யை எடுத்து ஹோமம் செய்யவும். இதன் முதல் காண்டம் 5ம் ப்ரச்னத்தில் கூறப்பட்டுள்ளது.

இந்திரனின் ப்ரஜைகள் 7 மருத் கணங்களாவர். கணத்திற்கு 7 பேர்கள். 7 கணத்திற்கு 7×7=49 பேர்கள். பூர்ணாஹுதி மந்திரத்தின் அடுத்த மந்திர பாகத்தால் 5 மருத்கணங்களின் பெயர்களை சொல்லப்படுகின்றன. இவைகளைச் சொல்லி ஸப்த மருத்கணங்களுக்கு ஹோமம் செய்யவும்.

பெயர்கள்—1வது கணம்—ஈத்ருங், அன்யாத்ருக், ஏதாத்ருக், ப்ரதிருக், மிதம், ஸம்மிதம், ஸபரர்.

2வது கணம் — 1. சுக்ரஜ்யோதிஸ், 2. சித்ரஜ்யோதிஸ், 3. ஸத்யஜ்யோதிஸ் 4. ஜ்யோதிஷ்மான், 5. ஸத்யன், 6. ருதபா, 7. அத்யபன் என ஏழு பேர்.

3வது கணம்—ருதஜித், ஸ்தயஜித், ஸேநஜித், ஸுஷேணர், அந்த்யமித்ரர், தூரே அமித்ரர் கணம் என ஏழு.

4வது கணம் — ருதம், ஸத்யர், த்ருவர், தருணர், தர்த்தா, விதர்த்தா, விதாரயன் எனஏழு.

5வது கணம்—ஈத்ருக்ஷாஸர், ஏதாத்ருக்ஷாஸ: ஊஷுண: ஸத்ருக்ஷாஸ:, ப்ரதிஸத்ருக்ஷாஸ:, ஏதன:, மிதாஸ:, ஸம்மிதாஸ: மீதி இரண்டுகணம் வேறு இடத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வாறு மருத் கணங்களைக் குறித்து புரோடாசம் ஹவிஸ்ஸாக வைத்து ஹோமம் செய்யவும்.

अनुवाक:—६ जीमूतस्येव

இந்த அனுவாகத்தில் அச்வமேத யாகத்தில் யஜமானன் கவசம் முதலியன அணிந்துக் கொள்வதற்குரிய மந்திரங்கள் கூறப்படுகின்றன.

जीमूतस्येव என்ற மந்திரத்தால் கவசத்தை யணிய வேண்டும். धन्वना गा என்ற மந்திரத்தால் வில்லை தரிக்கவும். மூன்றாவது மந்திரத்தால் நாண் கயிற்றை தொடவும். நான்காவது மந்திரத்தால் வில்லின் இருமுனைகளையும் தொடவும்.

बह्वीनां पिता என்ற மந்திரத்தால் பின்புறத்தில் (அம்பராத்தூணி) பாணம் வைக்கும் பெட்டியை கட்டவும். அடுத்த மந்திரத்தை ஸாரதியைப் பார்த்து சொல்லவும். तीव्रान् என்ற மந்திரத்தை குதிரைகளைப் பார்த்து சொல்லவும். அடுத்த மந்திரத்தைச் சொல்லி ரதவாஹனம் என்ற வண்டியில் ரதத்தை வைக்கவும். स्वादुषंसद: என்பது முதல் மூன்று மந்திரங்களைச் சொல்லி பித்ருக்களுக்கு

உபஸ்தானம் செய்யவும். [இது ஸ்மார்த்தத்தில் சிராத்தத்தில் உபயோகப்படுகிறது.] இதில் பித்ருக்களின் மஹிமை கூறப்பட்டுள்ளது. ஊஷ்ணவ: நமது பித்ருக்கள் நாம் அளித்த ருசியான, அன்னத்தால் திருப்தியுள்ளவர்கள், தீர்காயுஸ்ஸை கொடுப்பவர்கள், கஷ்டம் வரும் பொழுது ஆச்ரயிக்கத் தகுந்தவர்கள், நல்ல சக்தியுள்ளவர்கள், ஆழ்ந்த அறிவுடைவர்கள், ரத, கஜ, துரக, பதாதி போன்ற பல விதமான சேனையை உடையவர்கள். பாணத்தால் சண்டையிடுவதில் வலுமைமிக்கவர்கள். பிறரால் போரிட முடியாதவர்கள். வீரர்கள். செல்வம் சேனை முதலியவற்றுல் மிகுந்தவர்கள். எதிரி ஸைன்யத்தை அடக்குபவர்கள். 2. ஊஷ்ணாஸ:—நமது பிருத்ருக்கள் ப்ராஹ்மணர்கள். அனுக்ரஹபுத்தியுள்ளவர்கள். பூமியும், ஆகாயமும் எப்பொழுதும் அனுக்ரஹத்தை நமக்கு செய்யட்டும். யக்ஞத்தை வளர்க்கிற பூஷதேவதை நம்மை பாபத்திலிருந்து காப்பாற்றட்டும். ஹே பித்ருக்களே, எங்களை காப்பாற்றுங்கள், எங்களை நிந்தனை செய்யாதீர்கள்.

ஊர்ஜ்—பித்ருக்களின் பாணம் அழகானது, சிறந்தது. இதன் பின்புறம் அழகானது. பாணத்தின் பற்கள் கூர்மையானவை. கோ(பசு) ஸம்பந்தப்பட்டவைகளால் கட்டப்பட்டது. அப்படிப்பட்டபாணம் பித்ருக்களால் ஏவப்பட்டு வேகமாகச் சென்று யுத்த வீரர்கள் முதலில் உற்சாகத்

துடன் ஓடி பிறகு பயத்தினுல் ஓடும் பொழுது அங்கு விழுகின்றன. அப்படிப்பட்ட பித்ருக் களின் பாணங்கள் எங்களுக்கு சுகத்தை கொடுக் கட்டும் என்பது பொருள். அடுத்த மந்திரத்தால் யஜமானன் தன்னையே தொடவேண்டும். அடுத்த மந்திரத்தைச் சொல்லி சாட்டையை எடுத்துக் கொள்ளவேண்டும். द्यावा என்ற தோலினுல் ஆன வஸ்துவைப் பார்த்து அடுத்த மந்திரத்தை சொல்லவும் घनघ्ने என்பது முதல் 5 மந்திரங் களை ரதத்தைப் பார்த்து சொல்லவும் आयन என்ற மந்திரத்தால் துந்துபி வாத்தியத்தை அடிக்கவும், தனுஸ், பாணம், கவசம், துந்துபி, ரதம், சாரதி, இவைகளின் பெருமைகள் அந்தந்த மந்திரங் களில் கூறப்பட்டுள்ளன.

अनुवाक:—७ यदक्रन्द:

7, 8, 9 மூன்று அனுவாகங்களில் ஹோமம் செய்யவேண்டிய மந்திரங்கள் கூறப்படுள்ளன. अश्वमेध என்ற 36 ஹோமங்களுகுரிய மந்திரங் கள் உள்ளன. இந்த அனுவாகத்தில் 13 ஹோம மந்திரங்கள் உள்ளன. அவைகள் அச்வத்தின் பெருமையை விளக்குகின்றன.

अनुवाक:—८ मानो मित्र:

இதில் अश्वमेध ஹோமத்திற்குரிய 11 மந்தி ரங்கள் உள்ளன. இவைகளும் அச்வத்தின் மஹிமையைக் கூறுகின்றன.

अनुवाक:—९ ये वाजिनं

இதில் अश्वस्तोमीय ஹோம மந்திரங்கள் 11 கூறப்பட்டுள்ளன "ऋभैरश्वक्रीत்" என்ற மந்திரத்தால் 36வது ஹோமத்தைச் செய்யவும். இதிலும் அச்வத்தின் மஹிமையும் பெருமையும் கூறப்பட்டுள்ளது. ஆடு முதலிய பசுக்களுக்கு விலா எலும்புகள்-26 குதிரைக்கு 17+17=என விலா எலும்புகள் 34 உள்ளன. ஆகையினால் ஹவிஸ் எடுக்கும் பொழுது ஜாக்கிரதையாக எடுக்கவும் என்றும் மந்திரத்தில் கூறப்பட்டுள்ளது.

ஏழாவது ப்ரச்னம்

अनुवाक:—१ अग्नाविष्णू सनोधसे

இதில் वसोर्धारा ஹோமம் சொல்லப்படுகிறது. அத்திக் கட்டையினால் ஜுஹூ தயாரித்து முகத்துவாரத்தில் மண்பூசி சுட்டு பிறகு அதன் மூலம் தாரையான நெய்யினால் ஹோமம் செய்ய வேண்டும். முதல் ருக்கினால் நான்கு தடவை நெய்யை எடுத்து ஹோமம் செய்யவும். अग्नाविष्णू என்பது முதல் 11வது அனுவாகம் முடியும் வரை தாரையாக நெய் அக்னியில் விழும்படி ஹோமம் செய்யவும். (இதன் அடிப்படையில்தான் ருத்ரை காதசியன்று वसोर्धाराहोमः செய்யப்படுகிறது.) இதற்கு தேவதை अग्नाविष्णू இவர்களுக்கு ஹோமம் செய்வதால் கீழிலிருந்து மேல் வரையிலுள்ள

தேவதைகள் திருப்தியடைகிறார்கள். "अग्निरवमो देवतानां विष्णुः परमः" என்று வேதம் கூறுகிறது. அக்னி கீழ்மட்டத்திலுள்ளவராகவும், விஷ்ணு மேல் நிலையிலுள்ளவராகவும் கூறப்படுகிறது. அக்னி சயனத்தில் முறையாக செய்யப்பட வேண்டிய ஹோமமாகும் இது. चिते என்ற பதம் அடிக்கடி வருவதால் இதற்கு 'चमक' என்று பெயர். தினமும் ருத்ரனின் திருப்திக்காக ருத்ர மந்திரத்தை ஜபித்துவிட்டு நமக்கு வேண்டிய பொருளை அளிக்கும்படி மந்திரமூலமாய் செய்யும் பிரார்த்தனையாகும் இது. वाजश्च என்பதுடன் कल्पन्तां என்ற பாகத்தை சேர்த்து பொருள் கொள்ள வேண்டும். எனக்கு அன்னம் கிடைக்கட்டும் என்பது பொருள். அன்னத்தை உண்ண அனுமதி, சுத்தி, உணவு சாப்பிடுவதில் உத்ஸாஹம், அன்னத்தை தரிப்பது (ஜீரணிக்கச் செய்வது) அன்னத்திற்கு காரணமான யக்ஞும் (யக்ஞத்தினால் தான் மழை உண்டாகி அன்னம் கிடைக்கிறது.)

உதாத்தம் முதலிய ஸ்வரங்கள், ஸ்துதி, பிறரைக் கேட்கச் செய்யும் சாமர்த்தியம், கேட்கும் சாமர்த்தியம், பிரகாசம், ஸ்வர்கம், ப்ராணன், அபானன், வ்யானன் என்ற வாயுவின் வியாபாரங்கள் (செயல்கள்). ஜீவநாடியாயுள்ள ப்ராண வாயு, ஞானம். ஞானத்தினால் அறியப்படுகிற த்ரவ்யங்கள் நல்ல வாக், மனது, கண், காது, ஞானேந்திரியங்களின் சாமர்த்தியம், கர்மேந்தி

ரியங்களின் சாமர்த்தியம். பலத்திற்கு காரண மான 8வது தாது எதிரிகளை அடக்குந்தன்மை, தீர்க்காயுஸ் முதுமை, பரமாத்ம ஸ்வரூபம், அழகிய சரீரம், சுகம், கவசம், பூர்ணமான உட லுறுப்புக்கள், உரிய இடத்திலிருக்கும் எலும்புகள் விரல்களின் பர்வாக்கள் கணுக்கள், சரீரத்தின் மற்ற அவயவங்கள், இவையெல்லாம் எனக்கு ஏற்படட்டும் என்பது பொருள்

अनुवाकः—२ ज्यैष्ठ्यं च

மேலான சிறப்பு, யஜமானத் தன்மை, மானஸிகமான கோபம், வெளிப்படையான கோபம், விரோதிகளால் அளக்க முடியாதிருத்தல் இனிய குளிர்ந்த தண்ணீர், ஜெயிப்பதற்குரிய சாமர்த்தியம், ஜெயத்தினால் கிடைத்த செல்வம் முதலியன, எல்லாராலும் பூஜிக்கத் தகுந்தவனாக இருத்தல், வீடு, தோட்டம் முதலியவைகளின் விஸ்தரிப்பு (அதிகரித்தல்) புத்ர, பௌத்ரன் போன்றவர்களின் சரீரங்கள், அவிச்சின்ன ஸந்ததி, நிறைய அன்னமும் செல்வமும், வித்தையினாலும் குணத்தினாலும் சிறப்பு, உண்மை பேசுதல், பரலோகத்தில் நம்பிக்கை, தாவர ஜங்கமரூபமான உலகம், தங்கம் முதலிய செல்வம், எல்லோரும் தனக்கு அடங்கியிருத்தல் உடலழகு, சொக்கட்டான் ஆட்டம், சந்தோஷம், பிறந்த குழந்தை, பிறக்கப் போகிற குழந்தை ருக் வேதத்திலுள்ள ருக்ஸமூஹம், புண்யம்,

ஏற்கெனவே அடைந்த செல்வம், இனிமேல் அடைய வேண்டிய செல்வம். ஏற்கெனவே இருக்கின்ற வயல், நிலம் முதலியன, வரப் போகிற நிலம் முதலியன பந்து ஜனங்கள் உள்ள கிராமாந்தரம் (வேறு கிராமம்) திருடர்களில்லாத நல்வழி, அனுஷ்டிக்கப்பட்ட கர்மாவின் பலன், அனுஷ்டிக்கப் போகிற ஸத்ரயாக பலன், தனது கார்யத்திற்கு போதிய த்ரவ்யம், தனது சாமர்த்தியம், பொருள்களைப் பற்றிய சாதாரண அறிவு, சிக்கலான அரசியல் அறிவு, இவைகள் எனக்கு ஏற்படட்டும் என்பது பொருள்.

अनुवाकः—३ पंचमे

இவ்வுலக சுகம், பரலோக சுகம், பிரீதிக்கு காரணமான பொருள், அனுகூலமாயிருக்கும் என விரும்பப்படுகின்ற பொருள்; பரலோகமான ஸ்வர்காதி, மனதிற்கு திருப்திகரமான பந்துக்கள், இவ்வுலகில் அழகான வஸ்து, பரலோக ஹிதமானது, வசிக்கத் தகுந்த வீடு முதலியன, கீர்த்தி, ஸௌபாக்யம், செல்வம், நம்மை கட்டுப்படுத்த ஆசார்யன் முதலியோர், நம்மை வளர்க்கும் பிதா முதலியவர், இருக்கிற செல்வத்தை காப்பாற்றும் திறன், ஆபத்திலும் மனம் ஒடிந்து போகாமல் இருக்கும் தைர்யம். எல்லா ஜனங்களின் ஆனுகூலத்தன்மை, கௌரவம், வேத சாஸ்திரங்களின் அறிவு, ஞாபகப்படுத்தக்கூடிய சாமர்த்தியம், புத்ராதிகளை ஏவக்கூடிய சாமர்த்தி

யம், வேலைக்காரர்களை ஏவக்கூடிய ஸாமர்த்தி யம், கலப்பை முதலிய விவசாய ஸாதனங்கள், அதன் இடையூறு விலகுதல், யக்ஞம் முதலிய கர்மாக்கள் யாகத்தின் பலன், ராஜயக்ஷ்மம்போன்ற தீராத நோய் இல்லாதிருத்தல், ஜ்வரம் முதலிய சிறிய ரோகமில்லாதிருத்தல், ஜீவிப்பதற்குரிய ஔஷதங்கள், அபம்ருத்யு இல்லாதல், எதிரி யின்மை, பயமின்மை, நன்னடத்தை படுக்கை முதலியன ஸாதனங்கள், நல்ல உஷ: காலம், யாகம், தானம், வேதாத்யயனம் இவைகளோடு கூடிய நாள் இவைகள் எனக்கு ஏற்பட்டும்,

अनुवाक:—४ ऊर्क्चमे

அன்னம், இனிய வார்த்தை, பால், அதன் ஸாரம், நெய், தேன், பந்துக்களுடன் உண வருந்துதல், பந்துக்களுடன் சேர்ந்து பானம் அருந்துதல், விவசாயம், மழை, நல்ல வயல், மரம் செடி கொடிகளின் நிறைவு, ஸ்வர்ணம் (தங்கம்), முத்து பவழம், ரத்னம் முதலியன, ஸ்வர்ண ஸம்ருத்தி, சரீர புஷ்டி, தான்யங்களின் நிறைவு, மேலும் அதிக நிறைவு, மேலும் அதிகம், இதைவிட நிறைவு, அதைவிட அதிக நிறைவு, அதைவிட அதிக நிறைவு, என்றும் குறையாதிருத் தல், மட்டமான யவைதான்யம், அன்னம், பசி நீங்குதல், யவைகள், உளுந்து, எள்ளு தான்யம், பயறு, பயறைவிட பெரிய தான்யங்கள், கோதுமை, மஸூர் என்ற பருப்பு, தினை தான்யம்,

சிறிய நெல், சாமை என்ற தான்யம், காட்டில் உண்டாகும் புல்லரிசி என்ற தான்யம், இவைகள் எனக்கு ஏற்படட்டும்.

अनुवाकः—५ अश्माचमे

பாராங்கல், மண், மலைகள், பர்வதங்கள், மணல்கள், மரங்கள், தங்கம், இரும்பு, ஈயம், துத்துநாகம், எஃகு, வெங்கலம், தாமிரம், அக்னி, (நெருப்பு) ஜலம், செடி கொடிகள், நெல் போன்ற பலன் தந்தவுடன் அழிந்துவிடும் செடிகள் (பயிர்கள்), உழுது பயிரிடக்கூடிய நிலம், உழாமலேயே பயிராகும் பூமி, கிராமத்து பசுக்கள், ஆரண்ய பசுக்கள், யக்ஞத்தின் பொருட்டு உபயோகமாக இருக்கட்டும். ஏற்கனவே அடையப்பட்ட செல்வம், ஏற்படப் போகிற செல்வம், ஐச்வர்யமுள்ள புத்ரன் முதலியவர், தனது ஐச்வர்யம், வசிப்பதற்கு சாதனமான பசுமாடு முதலியன, வசிக்கும் இடமான வீடு முதலியன; அக்னிஹோத்ரம் முதலிய ஸத்கர்ம கர்மானுஷ்டான சக்தி, விசேஷ ப்ரயோஜனம், அடைய வேண்டிய சுகம், அனிஷ்ட நிவ்ருத்திக்கு உபாயம், இஷ்டப்ராப்திக்கு உபாயம்; இஷ்டத்தை அடைதல், இவைகள் எனக்கு ஏற்படட்டும்.

अनुवाकः—६ अग्निश्च म इन्द्रश्च

இந்த அனுவாகத்தில் நமக்கு ஆராதிக்கத் தகுந்த தேவதைகள் இந்திரனுடன் சமமாக வந்து பூஜையை பெறட்டும் என்ற கருத்தில் எல்லா தேவதைகளுடனும் இந்திரனைச் சேர்த்து சொல்லப்பட்டிருக்கிறது. எங்கள் யாகத்தில் அக்னியும் இந்திரனும் சமமாக ஹவிர்பாகத்தை பெறட்டும். இதேபோல் ஸோமன், ஸவிதா, ஸரஸ்வதீ, பூஷா, ப்ருஹஸ்பதி, மித்ரன், வருணன், த்வஷ்டா, தாதா, விஷ்ணு, அச்வினி தேவர்கள், மருத்கணங்கள், விச்வேதேவர்கள், ப்ருத்வீ, அந்தரிக்ஷம், த்யுலோக அபிமானி தேவதை, நான்கு திக்குகளின் அபிமானி தேவதைகள், மேல் நோக்கும் திசையபிமானி தேவதை, ப்ரஜாபதி, இந்த தேவதைகள் ஒவ்வொருவரும் இந்திரனுடன் சேர்ந்து சமமாக ஹவிஸ்ஸை பெற்றுக் கொள்ள என் யாகத்தில் வந்து அனுக்ரஹிக்கட்டும் என்பது பொருள்.

अनुवाकः—७ अꣳशुश्च

ஸோமயாகத்தில் ஸோமரஸத்தை க்ரஹ பாத்திரங்களிலும் சமஸபாத்திரங்களிலும் எடுத்து வைத்து அவைகள் மூலம் அக்னியில் ஹோமம் செய்யப்படுகிறது அந்த க்ரஹ

பாத்திரங்களின் பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அம்சு க்ரஹம், ரஸத்தை எடுக்க சாதனமான ரச்மி (கிரணம்) அதாப்யக்ரஹம், ததிக்ரஹம் (தயிர் உள்ளக்ரஹம்), உபாம் சுக்ரஹம், அந்தர்யாமக்ரஹம், ஐந்திரவாயவ க்ரஹம், மைத்ராவருணக்ரஹம், ஆச்வினக்ரஹம், த்விதேவத்ய க்ரஹங்களுடன் கூடிய ப்ரதிநிதி க்ரஹம், சுக்ரக்ரஹம், மந்திக்ரஹம், ஆக்ரயணம் க்ரஹம், வைச்வ தேவக்ரஹம் (ப்ராதஸ்ஸவனத்தில் உள்ளது) த்ருவக்ரஹம் அதுவே வைச்வானர க்ரஹம் எனப்படும். மருத்துவின் பெயர் கொண்ட க்ரஹ பாத்திரங்கள், அதிக்ராஹ்ய க்ரஹங்கள், ஐந்திராக்னக்ரஹம், வைச்வதேவ க்ரஹம், (த்ருதீயஸவனத்தில் உபயோகம்). மருத்வதீய க்ரஹங்கள், மாஹேந்திரக்ரஹம், ஆதித்யக்ரஹம், ஸாவித்ரக்ரஹம், ஸாரஸ்வத க்ரஹம், பூஷ தேவதையைக் கொண்ட க்ரஹம். (இது அபிஷேசனிய ஸோமயாகத்திற்குரியது), பாத்னீவத க்ரஹம், ஹாரியோஜனக்ரஹம், இந்த க்ரஹங்கள் ஸோமயாகத்தில் உபயோகரமாக ஏற்படட்டும் என்று பொருள்.

अनुवाक:—८ इध्मश्चमे

இதில் ஸோமயாக ஸாதனங்கள் கூறப்படுகின்றன. இத்மம், பர்ஹிஸ் (தர்பம்) போன்றவை

ஸ்மார்த்தத்திலும் உபயோகப்படுகின்றன. இத்மம், (ஸமித்துக்கட்டு), பர்ஹிஸ் (தர்ப்பைக்கட்டு,) ஹவிஸ்ஸை வைக்க வேண்டிய இடமானவேதி திஷ்ணியைகள், (இது ஸோமயாகத்தில் ஏழு ஹோதாக்களின் முன்பு போடப்படும் மண்ணால் ஆன சிறிய மேடை இதில் அக்னியை வைத்து பிறகு சஸ்திரம் சொல்லுவார்கள்.) ஹோம ஸாதனமான "स्रुवः, स्रुचः, प्रुषा, उपभृत्" என்ற நான்கும் ஆஜ்யத்தை (நெய்யை) எடுத்து வைக்கக்கூடிய பாத்திரம். இவைகளுக்கு स्रुக்குகள் எனப் பெயர். சமஸ பாத்திரங்கள் (ஸோமலதையை ரஸமாகப் பிழிய) கற்கள், ஸ்வருக்கள் (கத்தி போன்ற மரபாகம்) உபரவங்கள் (ஸோமலதையைப் பிழியும் இடத்தின் கீழ் தோண்டப்பட்ட நான்கு குழிகள் (த்வாரங்கள்), அதிஷவண பலகைகள் (2) (ஸோமலதையை இதன் மீது வைத்து கல்லால் கசக்க வேண்டும்) (द्रोणकलशः) துரோண கலசம் என்ற (மாங்காய் வடிவிலுள்ள) பாத்திரம் (ஸோமரஸத்தை வைக்கும் பாத்திரம்) வாயவ்ய பாத்திரம், பூதப்ருத், ஆதவனீயம், என்ற இரு (தண்ணீர்) பாணைகள், (ஸோமலதையை பிழியும் பொழுது இந்த தண்ணீர் உபயோகப்படுகிறது) ஆக்னீத்ரசாலா (ஆக்னீத்ரன் என்ற ருத்விக் அக்னிச் சட்டியுடன் இருக்க வேண்டிய ஒரு சதுர

மான இடம்) ஹவிர்த்தான மண்டபம் (ஹவிஸ் ஸான ஸோமரஸத்தை தயாரித்து வைக்கும் இடம்) பத்னீசாலா (பத்னி தங்குமிடம்) ஸதோ மண்டபம் (இந்த இடத்தில் தான் ஹோதாக் களும் ஸாமகானம் பண்ணுபவர்களும் உட் கார்ந்து கொண்டு ஸ்தோத்திர சாஸ்திரங்களை சொல்லவேண்டும்), புரோடாசம் (மாவினாலான ஹவிஸ்) (பசுவின் அங்கங்களை பக்குவப்படுத்த உபயோகப்படும் ஸாதனங்கள்) சாமித்ரம் (பசு வின் அங்கங்களை பக்குவம் செய்வதற்கு உரிய அக்னி) முதலியன. அவப்ருதேஷ்டி செய்து ஸ்னானம் செய்வது. शंयुवाकः எனப்படும் तच्छंयो रावृणीमहे என்ற அனுவாகம் (இதன் மூலம் தேவர் களுக்கு அவரவர்களுக்குரிய ஹவிர்பாகம் போய்ச் சேருகிறது) இவைகள் எனக்கு ஏற்படட்டும். நாம் இவைகளைப் பெற்று ஸோமயாகம் செய்து அதில் உபயோகப்படுத்த வேண்டும் என்பது கருத்து.

अनुवाकः—९ अग्निश्चमे

அக்னி சயனத்தில் இஷ்டகைகளால் தயா ரான வேதி ரூபமான அக்னி 'प्रवर्ग्यः' ப்ரவர்க்யம்

என்ற கர்ம அர்க குணமுள்ள இந்திரஜ தேவதை யாகக் கொண்ட யாகம், சூரியஜ தேவதையாகக் கொண்ட யாகம், ப்ராணுய ஸ்வாஹா என்று செய்யப்படும் ஹோமம், அச்வமேதயாகம், ப்ருத்வீ அபிமான தேவதை, அதிதி தேவதை, திதி தேவதை, த்யுலோக அபிமானி தேவதை, சக்வரீ என்ற தேவதைகள், விராட் புருஷனின் விரல் போன்ற அவயவங்கள், நான்கு திக்குகள், இவை கள் எனது யாகத்திலுல் தங்கள் தங்கள் காரியத்தை செய்ய சக்தியுள்ளவர்களாக இருக் கட்டும். ருக் மந்திரங்கள், ஸாமகானம். கானத் தின் எண்ணிக்கை ஸ்தோத்ரம், யாகதீக்ஷை, பாபம் நீங்குவதற்காக செய்யப்படும் உபவாஸம் முதலிய தபஸ் யாகத்திற்கு அங்கமான கால விசேஷம், ஏகஸ்தனம் முதலிய வ்ரதம், பகல், இரவுகளில் ஏற்படும் மழையிலுல், பயிர்கள் ஸித்திக்கட்டும். ''ப்ருஹத் ரதந்தரம்'' என்ற இரு ஸாமாக்களும் என்னுடைய யாகத்திலுல் தங்கள் காரியத்தை செய்யக் கூடியதாக இருக் கட்டும். மேற்சொன்னவையெல்லாம் எனக்கு ஏற்படட்டும் என்பது பொருள்.

अनुवाकः—१० गर्भाऋषे

கர்ப்பம், குழந்தைகள், 1½ வயதான காளைக் கன்று 1½ வயதான கடாரி கன்று, இரண்டு வயதான காளை, இரண்டு வயதான கடாரிக் கன்று, இது

போலவே, 2½ வயது, 3 வயது, 3½ வயது, 4 வயதான காளைகளும் கடாரிகளும், ஆண்மையை யடைந்து கன்றை உண்டுபண்ணக்கூடிய சாமர்த்தியமுள்ள காளைமாடு, மலடு பசுமாடு, 5 வயதிற்கு மேற்பட்டகாளை, சினை (கர்ப்பம்) கலைந்த பசு, வண்டி இழுக்கும் காளை, புதிய கன்று போட்ட பசுமாடு, இவைகள் எனக்கு ஏற்படட்டும். ஆயுஸ், ப்ராணன், அபானன், கண், காது, மனஸ், வாக், சரீரம், இவை எனது யாகத்தினால் அவைகளின் காரியத்தை செய்யக்கூடியதாக இருக்கட்டும். செய்யப் போகிற அச்வமேதம் போன்ற யக்ஞங்கள் இப்பொழுது அனுஷ்டிக்கப்படுகின்ற யாகத்தினால் தனது காரியத்தை செய்யக் கூடியதாக இருக்கட்டும்.

अनुवाक:—११ एकाच मे

மனிதனை நல்வழிப்படுத்தி மோக்ஷத்தையடைய ஸாதனங்களான த்ரவ்யங்கள், கர்மாக்கள் இவைகளின் எண்ணிக்கையைக் குறிக்கின்றன. 1, 3, 5, 7, 9, 11, 13, 15, 17, 19, 21, 23, 25, 27, 29, 31, 33. என்ற எண்கள் தேவதைகளின் சந்தஸ்ஸைக் குறிக்கிறது (33 கோடிப் பேர் என்பதை குறிக்கின்றது). 4, 8, 12, 16, 20, 24, 28, 32, 36, 40, 44, 48, என்பவை மனித சம்பந்தத்தைக் குறிக்கின்றன. இவை எனக்கு ஏற்படட்டும் எனப் பொருள். वाजश्च अधिपतिश्च என்ற

மந்திரங்கள் (12) ஹோமத்திற்குரியவை. அன்னம், அன்னத்தின் உற்பத்தி, திரும்ப திரும்ப உணவு உற்பத்தி, போகத்திற்குரிய வஸ்துக்களின் ஸங்கல்பம், அல்லது யாகம். ஆதித்யன் மற்றவை தேவதைகளின் பெயர்கள். இவைகளுக்கு ஹோமம் எனப் பொருள். அல்லது 12 மாதங்களின் பெயர்கள் वसः முதலிய 12. இந்த ஹோமத்தினால் மாஸாபிமானி தேவதைகள் த்ருப்தியடையட்டும் என்பது பொருள்.

अनुवाकः—१२ वाजोनः

இதில் वाजश्चवीयहोम மந்திரங்கள் உள்ளன. இந்த ஹோமம் கிராமத்தில் விளையும் 7 தான்யங்களாலும், காட்டில் விளையும் ஏழு தான்யங்களாலும் செய்ய வேண்டியவையாகும். 7 ஆரண்ய தான்யங்களை பக்குவம் செய்து அதைக் கரைத்து திரவமாக ஆக்கி அத்தி ஸ்ருவத்தினால் ஹோமம் செய்ய வேண்டும். அதற்குரிய ஏழு மந்திரங்கள் முதலில் கூறப்பட்டுள்ளன. கிராம தான்ய ஹோம மந்திரங்கள் முதல் காண்டத்தில் உள்ளது. முதல் மந்திரம் वाजोनः सप्त என்பதைச் சொல்லி மூங்கிலரிசினின் ரஸத்தை (சாறு) ஹோமம் செய்யவும். அன்ன ஸம்ருத்தி எங்கும் ஏற்படட்டும் என்பது பொருள்.

2. विश्वे सप्त என்ற மந்திரத்தால் சாமை என்ற தான்யத்தின் சாறு ஹோமம் செய்யவும்.

3. वाजस्यप्रसवं என்ற மந்திரத்தால் नीवारः (புல் லரிசி) தான்ய சாறு ஹோமம் செய்யவும்.

4. वाजेवाजे—என்ற மந்திரத்தால், காட்டு எள் (जतिलाः) சாறு ஹோமம் செய்யவும்.

இந்த மந்திரம் ஸ்மார்த்தத்தில் சிராத்தத்தில் உபயோகப்படுகிறது.

ஹே அன்னத்தை உண்டுபண்ணும் தேவர் களே, பலவிதமான அன்னத்தின் காரணமாகவும், செல்வத்தின் காரணமாகவும், எங்களை காப் பாற்றுங்கள். பிராஹ்மணர்போல் சுத்தமானவர் களும், மரணமில்லாதவர்களும், யாகத்தை அறிந்தவர்களுமான ஹே தேவதைகளே, இந்த மதுரமான அன்னத்தை உண்டு மகிழுங்கள். பிறகு திருப்தியடைந்தவர்களாக தேவமார்க்க மாக தங்கள், தங்கள் இருப்பிடத்திற்கு செல்லுங் கள், என்பது பொருள்.

5. 5வது மந்திரத்தால் கவீதுக (கோதுமை மாதிரி) தான்யரஸ ஹோமம் செய்யவும்.

6. 6வது மந்திரத்தால் மர்கடக தான்ய ரஸ ஹோமம் செய்யவும்.

7. 7வது மந்திரத்தால் கொள்ளு தான்ய ரஸ ஹோமம் செய்யவும்.

அடுத்த மந்திரத்தால் வெள்ளாகன்றுள்ள கறுப்பு பசுவின் பாலினுல் ஹோமம் செய்யவும்.

समुद्रोऽसि – என்பது முதல் மூன்று மந்திரங்களால் वासना என்ற பெயருள்ள மூன்று ஹோமங்களை செய்யவும்.

अनुवाकः—१३ अग्नियूनज्मि

இதில் அக்னியோகம் என்ற கர்மாவின் மந்திரங்கள் உள்ளன. முதல் மூன்று மந்திரங்களால் அக்னியைத் தொட்டு விட்டு, கடைசியில் அக்னியை சேர்க்கவேண்டும். சயனாக்னியின் மஹிமை சொல்லப்படுகிறது. யஜமானனும் நல்ல லோகத்தை அடைவான் எனக் கூறப்படுகிறது.

नमस्ते अस्तु—என்று தொடங்கி இரண்டு மந்திரங்களால் அக்னியை தொடவும். அக்னியின் அனுக்ரஹத்தால் தான் மழை பொழிகிறது. பிராணிகள் அன்னத்தையடைந்து சுகமாக வாழ்கிறார்கள் என்பது கருத்து. பிறகு 8 மந்திரங்களால் 8 காம்யேஷ்டகைகள் உத்தரவேதியில் வைக்கவும். இவைகளில் அக்னியின் மஹிமை கூறப்பட்டுள்ளது. 7, 8வது மந்திரங்கள் ஸ்மார்த்த கர்மாக்களிலும் உபயோகப்படுகிறது.

उद्बुध्यस्वाग्ने ஹே அக்னியே, எங்களது விஷயத்தில் கவனமாய் இருப்பீராக. இந்த யஜ

மானனே ஜாக்கிரதையாக இருக்கும்படி செய். யஜமானனும் அக்னியும் சேர்ந்து ச்ரௌத, ஸ்மார்த்த கர்மாக்களை நடத்திக் கொடுக்கட்டும். ஹே யஜமானனே, உனது நிமித்தமாக தந்தையாகவும், மகனுகவும், மறுபடியும் அதேபோல் செய்து யக்ஞத்தை அவிச்சின்னமாக செய்யட்டும், யஜமானனும் அவன் ஸந்ததிகளும் பரம்பரை பரம்பரையாக யக்ஞத்தை அனுஷ்டிக்கட்டும் என்பது பொருள்.

अयं ते योनिः ஹே அக்னியே, இஷ்டகைகளான இந்த பிரதேசம் உனது இருப்பிடம். ஏனெனில், இந்த சிதியிலிந்து உண்டாகி ஜ்வலிக்கின்ருய், அந்த இடத்தை தனக்கு பிறப்பிடம் என அறிந்து அதில் (सन्धिम् அடைவாயாக) இருப்பாயாக, மேலும் எங்கள் செல்வத்தை விருத்தி செய்வாயாக.

अनुवाकः—१४ समाग्ने

(विहव्याः) விஹவ்யம் என்ற இஷ்டகைகளை வைக்கும் மந்திரங்கள் உள்ளன. இவைகள் ஸ்மார்த்தத்தில் உதகசாந்தி, யாத்ராதானம் மந்திரங்களாகவும் உபயோகப்படுகின்றன. 10 மந்திரங்கள் உள்ளன. 1) समाग्ने ஹே அக்னியே, யக்ஞத்தின் பலன் எனக்கு இருக்கட்டும். ருத்விக், யஜமானர்களான நாங்கள் ஸமித்து

களால் உன்னை ஜ்வலிக்கச் செய்து உனது சரீரத்தை புஷ்டியாகச் செய்வோம். யஜமானனுன எனக்கு நான்கு திசைகளும் வசமாக ஆகட்டும். அங்குள்ள ஜனங்கள் எனக்கு தலைவராகுன அக்னி பகவானுடன் கூட நாங்கள் சத்ருவை ஜயிப்போமாக.

2. मरुद्देवाः எல்லா தேவர்களும் எனது யாகத்தில் வந்திருக்கட்டும். இந்திரனோடு சேர்ந்த "மருத் கணங்கள்", விஷ்ணு, அக்னி பகவான் முதலிய தேவர்கள் வரட்டும் என்பது பொருள். மேலும் விஸ்தாரமான இந்த அந்தரிக்ஷலோகம் எனக்கு ரக்ஷகனுக இருக்கட்டும். எனக்கு யக்ஞ பலன் ஏற்படுவதற்காக இந்த வாயு பகவான் சஞ்சரிக்கட்டும். எனது இஷ்டத்தை நிறை வேற்றட்டும் என்பது பொருள்.

3. सवितादेवाः இந்த தேவர்கள் யஜமானனுன எனக்கு செல்வத்தையளிக்கட்டும். நான் வேண்டுகின்ற பலன் யஜமானனுன என்னிடத்தில் ஸித்திக்கட்டும். தேவர்களை அழைப்பது என்பது எனக்கு ஏற்படட்டும். அனுதி ஸித்தமான தேவர் சம்பந்தப்பட்ட ருத்விக்குகள் எங்கள் யாகத்திற்கு வரட்டும். நாங்கள், சரீரத்தில் ரோகாதிகள் இல்லாதவர்களாகவும் நல்ல புத்ரர்களை யுடையவர்களாகவும் இருப்போம்.

4. मह्यं यजन्तु என்னைச் சேர்ந்த ஹவிஸ்ஸு களை ருத்விக்குகள் யாகத்தில் உபயோகப்படுத் தட்டும். எனது மனதின் ஸங்கல்பமானது ஸத்யமானதாக இருக்கட்டும். ஸங்கல்பம் நிறை வேரட்டும் என்பது பொருள். நான் எந்த வித மான பாபத்தையும் அடையக்கூடாது. ஹே விச்வேதேவர்களே, தேவர்களிடம் நான் பிறரை விட மிகுந்தவன் என கூறுங்கள்.

5. देवीः உர்வீ என்ற ஹே தேவிகளே, எங் களுடைய இந்த கார்யத்தை விஸ்தாரமாக்குங் கள், ஹே விச்வேதேவர்களே, இந்த கர்மாவில் வீரர்களாக இருங்கள். விக்னங்களை அகற்றுங் கள், நாங்கள் ப்ரஜைகளோடும், சரீரத்தோடும் கூடியவர்களாக இருப்போமாக. ஹே ஸோம ராஜாவே, எதிரியின் காரியத்தை ஸித்திக்கச் செய்யாதே.

6. अग्निर्नः இந்த அக்னி பகவான் எதிரி களின் கோபத்தை நிராகரித்துக் கொண்டு எங் களுக்கு முன்பு செல்லட்டும். ஹே அக்னியே, நீ ஒருவராலும் அடக்க முடியாதவர். மேலும் ரக்ஷிப் பதில் சாமர்த்தியமுள்ளவர். நீ எங்களைக் காப் பாயாக. உங்களுடைய பாதுகாப்பு ஏற்பட்டால் எதிரில் நிற்க முடியாமல் எதிரிகள் ஓடி ஒளிந்து விடுவார்கள். எதிரிகளின் அந்த:கரணத்தை எழுப்பி விட்டு அழித்துவிடு.

7. धाता धातॄणां नवप्रजापतिकளையும் ஸ்ருஷ்டி செய்தவர். உலகத்தை காப்பாற்றுபவரும் அச்வினி தேவர்கள், ப்ருஹஸ்பதி போன்ற தேவர்கள் எல்லோருமே எங்களுடைய இந்த யக்ஞத்தையும், யஜமானனையும் பலன் இல்லாமல் இருப்பதிலிருந்து காப்பாற்று. பயனுள்ளதாகச் செய்யட்டும். இந்த யக்ஞும் பாபத்தை போக்கவல்லது. பெரும் பயனை யளிக்கவல்லது.

8. उग्रग्रहा எல்லோராலும் அழைக்கப்படுகிற இந்திரன் எங்களுக்கு ஸுகத்தை யளிக்கட்டும். இந்திரன் தேசம் முழுவதற்கும் அதிபதி, சௌர்யாதி சிறந்த குணமுள்ளவன், பல மந்திரங்களால் கூறப்படுபவன், ஹரி என்ற குதிரைகளையுடையவன். அப்படிப்பட்ட ஹே இந்திரனே, புத்ராதிகளை அடைவதற்காக எங்களை சுகமாக இருக்கச்செய். எங்களை ஹிம்ஸிக்காதே. அலக்ஷியப்படுத்தாதே.

9. योऽस्मध्रुग्रा எனது எதிரிகள் வெகுதூரம் விலகிச் செல்லட்டும் நாங்கள் இந்திராக்னி தேவர்களின் அனுக்ரஹத்தை பெற்று சத்ருக்களை ஹிம்ஸிப்போம். வஸுக்கள், ருத்ரர்கள், ஆதித்யர்கள் இம்மூன்று தேவர்களும் என்னை ஸ்வர்கத்தை தொடுபவனுகவும், சத்ருவை திரஸ்காரம் செய்யக் கூடியவனுகவும், அறிவாளியாகவும், எல்லோருக்கும் அதிபதியாகவும் செய்யட்டும்.

ஹரி—எந்த இந்திரன், சத்ருவின் பசுக்கள், செல்வங்கள், குதிரையை ஜயித்தாரோ, அப்படிப் பட்ட இந்திரனை, இந்த யக்ஞத்திற்கு வரும்படி அழைக்கிறோம், ஹே இந்திரனே, பலவித அழைப்புகள் இருப்பினும், இந்த எங்கள் யக்ஞத்தை ஸேவிப்பாயாக. ஹரி என்ற குதிரை களை யுடைய ஹே இந்திரனே, உன்னை இந்த யஜமானனிடத்தில் ஸ்நேஹம் உள்ளவனுகச் செய்வோம்.

अनुवाक:—१५ अग्नेर्मन्वे

இதில் அச்வமேத யாகம் சம்பந்தப்பட்ட யாஜ்யா மந்திரங்கள் உள்ளன. மொத்தம் 10 ஹவிர் யாகங்கள் உள்ளன. அவைகளின் யாஜ்யா மந்திரங்கள்.

1. अग्नेर्मन्वे முதல் ஹவிஸ்ஸின் யாஜ்யா மந்திரம் – நிஷாதன் உட்பட வர்ணத்தாருக்கும் நன்மை செய்கிற எந்த அக்னியை பல யஜமானர் கள் ஜ்வலிக்கச் செய்கிறார்களோ, ஸ்ருஷ்டியின் ஆரம்பத்தில் உண்டானவரும் சிறந்த அறி வாளியுமான அக்னிபகவானின் சரீரத்தை தியா னிக்கிறோம். எல்லா ப்ரஜைகளிடத்திலும் ஜாட ராக்னியின் ரூபத்தில் வசிக்கின்ற அக்னியை நாங்கள் அடைந்தோம். அந்த அக்னி எங்களு டைய பாபங்களை அகற்றட்டும்.

2. யாஜ்யா மந்திரம் यस्येदंप्राण் ப்ராணனுள்ள தாக கண் துடிப்புடன் கூடிய இவ்வுலகம் அசை கிறது. இது அந்த அக்னியின் அதீனமானது. முன்பு உண்டானதும் இனிமேல் உண்டாகப் போகிற உலகம் முழுவதும் பிறரை எதிர்பாராமல் எவருடைய அதீனமாக இருக்கிறதோ அந்த அக்னியை துதிக்கிறேன். பலனை யாசிக்கின்ற நான் அவருக்கு திரும்ப திரும்ப ஹவிஸ்ஸை அளிக்கிறேன். அவர் எங்களை பாபத்திலிருந்து விடுவிக்கட்டும்.

3. ऐन्द्रामुक् इन्द्रः தேவதை புரோடாசம் ஹவிஸ் என்ற யாகத்தின் புரோனுவாக்யா மந்திரம். इन्द्रमस्मे ஸ்ருஷ்டியின் ஆரம்பத்தின் உண்டான வரும், சிறந்த ஞானத்தையுடையவறுமாகிய இந்திர மூர்த்தியை தியானிக்கிறேன். சத்ருவை அழிக்கும் இந்திரனருகில் போய்ச் சேர்ந்த ஸ்தோமம் (ஸாமகானம், பாட்டின் கணக்கு) யஜமானனை என்னை வந்தடைந்தது. இந்திரனை துதிக்க வேண்டிய ஸ்தோத்ரங்கள். யஜமானின் நாக்கில் வந்துள்ளன என தாத்பர்யம். அந்த இந்திரன் ஹவிஸ்ஸை அளித்து நன்கு கர்மானுஷ் டானம் செய்யும் யஜமானனின் ஆஹ்வானத்தை ஏற்று யக்ஞத்திற்கு வருவான்.

4. यः एषाम् இது யாஜ்யா மந்திரம். எந்த இந்திரன் யுத்தம் செய்வதற்காக தனக்கடங்கிய

பரிவாரங்கள் கொண்டவனுக இருந்து கொண்டு யுத்தகளத்திற்கு தனது சைன்யத்தை நடத்தி செல்லுகிறானே, மேலும் ஸம்பூர்ணமான கோ. அச்வம், புருஷன் இம்மூன்றையும் யஜமானனுடன் சேர்த்து வைக்கிறானே, அந்த இந்திரனை பலனைக் கருதி துதிக்கிறேன். ஹோமம் செய்கிறேன். அவர் எங்களை பாபத்திலிருந்து விடுவிக்கட்டும்.

5. மைத்ராவருண யாகத்தின் யாஜ்யா மந்திரங்கள்—

ஈஷே - இது புரோனுவாக்யா மந்திரம். ஹே மித்ராவருணர்களே, உங்கள் உருவத்தை தியானிக்கிறேன். நீங்கள் இயற்கையான பல முள்ளவர்கள், உறுதியானவர்கள். எந்த என் எதிரியை விரட்டுகிறீர்களோ, அந்த எதிரியின் கெட்ட எண்ணத்தை அறிவீர்கள். நீங்கள் பிரகாசிக்கின்ற ரதத்துடன் இருக்கும் ஆதித்யனிடம் (சூரியன்) உலக க்ஷேமத்திற்காக மழை பொழிவதற்காக செல்கிறீர்கள். அனிஷ்டத்தை அகற்றுவதில் தீவிரமாக இருக்கின்ற நீங்கள் இருவரும் எங்களை பாபத்தினின்று விடுவியுங்கள்.

6. ஈஷே - யாஜ்யா மந்திரம்—ஹே மித்ரா வருணர்களே, உங்கள் ரதம் நேரான கயிற்றுடனும் உண்மையை தரிக்கக்கூடியதாக இருந்து

கொண்டு பொய்யான நடவடிக்கையுள்ள சத்ருவை அழித்துக் கொண்டு வருகிறது. பலனைக் கருதி அப்படிப்பட்ட மித்ரவருணர்களை துதிக்கிறேன். பலனை அடைய விரும்பி ஹோமம் செய்கிறேன். அவர்கள் எங்களை பாபத்திலிருந்து விடுவிக்கட்டும்.

7. அம்ஹோமுக் வாயுதேவதை சருஹவிஸ் என்ற யாகத்தின் யாஜ்யா மந்திரங்கள்:—वायो सवितु இது புரோனுவாக்யா மந்திரம். வாயு, ஸவிதா (சூரியன்) இருவரின் அபிப்ராய விசேஷங்களை அறிகிறோம். எந்த ஷை இரு தேவர்களும் தனது சரீரம் போல உலகத்தை தாங்குகிறார்களோ, மேலும் உலகத்தை காப்பாற்றுகிறார்களோ, இவர்கள் உலகம் முழுவதும் வியாபித்திருக்கிறார்கள். அப்படிபட்ட இவர்கள் எங்களை பாபத்தினின்றும் விடுவிக்கட்டும்.

8. उपश्रेष्ठान: - (யாஜ்யா மந்திரம்) — மிகச் சிறந்த ஆசீர்வாதமான விசேஷ பலன்கள் வாயு, ஸவித்ரு தேவ ஸம்பந்தமான கர்மாவில் இருக்கின்றன. அவர்களை துதிக்கிறேன். பலனைக் கருதி அவர்களுக்கு ஆஹுதி செய்கிறேன். அவ்விருவரும் எங்களை பாபத்திலிருந்து விடுவிக்கட்டும்.

9. अँहोमुचौ अश्विनौदेवते என்ற ஆச்வினி யாகத்தின் யாஜ்யா மந்திரங்கள். रथीतमौ-தேரில்

செல்லும் தேவர்களுள் சிறந்த அச்வினீ தேவர்கள் மிகச் சிறந்த ரதத்தின் மூலம் சிறந்த குதிரைகளை பூட்டி நல்ல இடத்திற்கு செல்லுகிறார்கள். ஹே அச்வினி தேவர்களே, தேவர்களுள் உங்களுடைய பலம் பிறரால் தீவிரமாக்கப்படாமல் தானாகவே தீவிரமானதாக இருக்கிறது அப்படிப்பட்ட அச்வினீ தேவர்கள் எங்களை பாபத்திலிருந்து விடுவிக்கட்டும்.

10. यदयातं (याज्यामन्त्र:) - சூரியன் பத்னியின் (தனது தாயாரின்) நல்லெண்ணத்தை விரும்பிய அச்வினி தேவர்களே நீங்கள் மூன்று சக்ரத்தின் மூலம் சென்றீர்கள். அப்படிப்பட்ட அச்வினி தேவர்களை துதிக்கிறேன். இஷ்டி ஸித்திக்காக அவர்களுக்கு ஆஹுதியளிக்கிறேன். அவர்கள் எங்களை பாபத்திலிருந்து காப்பாற்றட்டும்.

11. मरुतां मन्वे – பாபத்தை போக்கவல்ல மருத்கணங்களை தேவதையாகக் கொண்ட யாகம், அதன் புரோனுவாக்யா மந்திரம் இது. மருத்கணங்களை மனதால் தியானிக்கிறேன். அவர்கள் எங்களைப்பற்றி சிறப்பாக சொல்லட்டும். அவர்கள் எல்லோரும் எனது இந்த பிரார்த்தனையை காப்பாற்றட்டும். (நிறைவேற்றட்டும்) சீக்கிரம்

செல்லவல்ல, நன்கு நியாமகர்களான அவர்களை ரக்ஷிப்பதற்காக அழைக்கிறேன். அவர்கள் எங்களை பாபத்திலிருந்து விடுவிக்கட்டும்.

12. तिग्ममायुधं - இது யாஜ்யா மந்திரம்— மருத்கணங்களின் ஆயுதம் கூர்மையான, உறுதியானது. மேலும் மருத்கணங்களின் பலம் சத்ருவை அடக்க வல்லது. தகுந்தபடி உசிதம்போல் உபயோகிக்கத் தகுந்தது. ஆகையால் தான் எதிரி சைன்யத்தை ஜயிக்க வல்லது. அப்படிப்பட்ட மருத் தேவதைகளை ஸ்துதி செய்கிறேன். இஷ்டத்தை நிறைவேற்ற விரும்பி அவர்களுக்கு ஹோமம் செய்கிறேன். அவர்கள் எங்களை பாபத்திலிருந்து விடுவிக்கட்டும்.

13. देवानां मन्वे - பாபத்தை போக்கவல்ல விச்வேதேவர்கள் தேவதைகள். அந்த யாகத்தின் யாஜ்யா மந்திரம் இது. முதலில் புரோனுவாக்யா கூறப்படுகிறது. நான் விச்வேதேவர்களை தியானிக்கிறேன். அவர்கள் எங்களை சிறப்பித்து கூறட்டும். எனது பிரார்த்தனை அவர்கள் ரக்ஷிக்கட்டும். சீக்கிரம் செல்பவர்களாகவும் நன்கு நியாமகர்களுமான அவர்களை அழைக்

கிறேன். அவர்கள் எங்களை பாபத்திலிருந்து விடுவிக்கட்டும்.

यद्दित्यै – (யாஜ்யா மந்திரம்) தேவ ஸம்பந்தமான காரியத்தாலும் மனிதர் ஸம்பந்தமான காரியத்தாலும் ஏற்பட்ட இந்த துக்கம் என்னை நாலா பக்கத்திலும் வாட்டுகிறது. அந்த துக்கத்தை போக்கடிப்பதற்காக விச்வேதேவர்களை துதிக்கிறேன். இஷ்ட பலனையடைவதற்காக அவர்களுக்கு ஹவிர்பாகம் கொடுக்கிறேன். அவர்கள் எங்களை பாபத்திலிருந்து விடுவிக்கட்டும்.

15. அனுமதி யாகத்தின் யாஜ்யா புரோனுவாக்யைகளின் ஆரம்பம் மாத்திரம் சொல்லப்பட்டிருக்கிறது. अनुमोद्यानुमतिः - புரோனுவாக்யா.

16. अन्विदनुमतेत्वं - யாஜ்யா மந்திரம் — இந்த அனுமதி தேவதை இந்த எங்கள் யக்ஞத்தை தேவர்களிடத்தில் சிறப்பித்து கூறட்டும். ஹவ்யவாஹகரான அக்னி பகவான் யஜமானனுக்கு சுகத்தை பாவிக்கட்டும். ஹே அனுமதி தேவதையே, இந்த கர்மாவை அனுமதிப்பாயாக. எங்களுக்கு ஸுகத்தைக் கொடு. எங்களுடைய ஸம்ருத்தியான இந்த யாகத்தில் திருப்தியடை

வாயாக. மேலும் எங்களுக்கு தீர்க்காயுஸ்ஸை அளிப்பாயாக.

17. இது வைச்வாநர யாகத்தின் புரோனு வாக்யா மந்திரம் वैश्वानरो नः—

18. ஹவிர்வி யாஜ்யா மந்திரம். எல்லா மனி தர்களுக்கு உபகாரியான வைச்வாநராக்னி, ரக்ஷிப்பதற்காக தூரதேசத்திலிருந்து சேரக் கூடிய சாமர்த்தியமுள்ள எழுந்திருந்து வருவதன் மூலம் எங்களை வந்தடையட்டும். இந்த அக்னி ஆகாயத்தில் சூரிய ரூபத்தில் இருக்கிறார். பூமி யில் எரிப்பவராகவும், அன்னம் முதலியவைகளை பக்குவப்படுத்துபவராகவும், வெளிச்சம் கொடுப் பவராகவும் இருக்கிறார். காய்களை பழமாக ஆக்குபவராகவும், இருந்து கொண்டு எல்லா செடி கொடிகளிலும் பிரவேசித்துள்ளார். அப் படிப்பட்ட வைச்வநராக்னியானவர் பலத்துடன் கூடியவராகவும் இருக்கிறார். அவர் எங்களை அல்லும் பகலும் ஹிம்ஸிக்கின்ற பாபத்திலிருந்து காப்பாற்றட்டும்.

தயாவாப்ருத்வீ யாகத்தின் புரோனுவாக்யா யாஜ்யா மந்திரங்கள்.

19. ये यजामहे எந்த த்யாவாப்ருத்விகள், அளவற்ற பலத்துடன் பிரஸித்தமானர்களோ, மேலும் செல்வங்களுக்கு ஆச்ரயமாக ஆனர் களோ, அப்படிப்பட்ட த்யாவாப்ருத்விகளை துதிக் கிறேன். இஷ்டிஸித்தியை பிரார்த்திக் கொண்டு ஹவிஸ் அளிக்கிறேன். அவர்கள் எங்களை பாபத் திலிருந்து விடுவிக்கட்டும்.

20. ஊர்வீ மிகவும் விஸ்தாரமான த்யாவா ப்ருத்வீ தேவதைகள் செல்வத்தையும், கௌரவத் தையும் அளிக்கட்டும். க்ஷேத்ரபத்னிகளான த்யாவாப்ருத்வீகளே, எங்களைப்பற்றி சிறப்பாக சொல்லுங்கள், அவர்களை துதிக்கிறேன். இஷ்ட ஸித்தியை பிரார்த்தித்துக் கொண்டு அவர்களுக்கு ஹோமம் செய்கிறேன். அவர்கள் எங்களை பாபத் திலிந்து விடுவிக்கட்டும்.

ஸ்விஷ்டக்ருத் யாகத்தின் புரோனுவாக்யா, யாஜ்யா மந்திரங்கள்.

21. यत्त्वयं (புரோனுவாக்யா) ஹே வாலிபரான அக்னியே, நாங்கள் அஞானிகளாக இருந்து கொண்டு, உன்னைச் சேர்ந்தவர்களிடத்தில். ஏதாவது அபராதத்தை செய்துள்ளோம். துண்

டாக்க முடியாத உனக்கு குற்றமிழைக்காதவர்களாக எங்களை நன்கு செய்வாயாக. ஹே அக்னியே, எங்களுடைய பாபங்களை எல்லாவிதத்லும் விசேஷமாக அழிக்கப்பட்டதாக செய்வாயாக.

22. यथाह तत् - யாகம் செய்யத் தகுந்த உலகம் வளிப்பதற்கு காரணமான அக்னியுடன் கூடிய ஹே தேவர்களே, தனது பாசக்கயிற்றின் ஆக்ரமிப்பால் கட்டுத்தறியில் கட்டப்பட்டுள்ள ஏதோ ஒரு வெள்ளை நிறமான பசுவை கட்டிலிருந்து அவிழ்த்துவிட்டார்கள். ஹே அக்னியே, அதுபோல நீ எங்களை பலவிதமான பாபத்திலிருந்து விடுவிப்பாயாக. எங்களுடைய ஆயுஸ் அதிகமாகும்படி ஏற்பாடு செய்வாயாக.

அச்சிட்டோர்:

சாவித்திரி லேசர் பிரிண்டிங்
37/14, பெரியபள்ளி தெரு,
மந்தைவெளிபாக்கம்,
சென்னை - 600 028.
போன்: 2464 3268